# தேர்ந்த கட்டுரைகள்

(I)

* * * * * * * * * *

வெளியீடு - 19

* * * * * * * * *

94679
2655

JPL
C2655

விடுதலைப் புலிகள்
ளியீட்டு வாரியம்,
தமிழீழம்.

15-06-1993

# தேர்ந்த கட்டுரைகள்

தேசிய நூலின் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA JPL

〈I〉

பொது நூலகம்
மாநகராட்சி மன்று
15-7-1993
94679
யாழ்ப்பாணம்

26555 c

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வெளியீடு — 19

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

PUBLIC LIBRARY
JAFFNA.

தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்,
தமிழீழம்.

15-06-1993

94679 C.C

330.5 12/2

# உள்ளே. . .


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. அவுஸ்திரேலிய பூர்வீகக் குடி மக்களின் கவின்கலைகள் அவர்களை மற்றவர்களால் விரும்பி ஏற்கச் செய்கின்றன. | 1—4 |
| 2 இலங்கை வான்பரப்பின் ஆற்றல் மிக்கவை எனப்படும் ஜெற் போர் வானூர்திகள் சில விநாடிகளில் இலக்கை அடைகின்றன. | 5—7 |
| 3. பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் தங்களை வலுப்படுத்துகிறார்களா? | 8—15 |
| 4. உலகிலுள்ள புகழ் பூத்த உயர் படையினர் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்று வரும் போரைப் பற்றி ஆராய்கின்றார்கள். | 16—20 |
| 5. விடுதலைப்புலிகளிடையே நிலவும் முரண்பாட்டை அவர்களுக்குள்ள இன்னல்கள் விரிவுபடுத்துகின்றன. | 21—27 |
| 6. தெங்குப் பயிர்ச் செய்கையில் மேற்கொள்ளும் புதிய வழிமுறைகள் பயனளிக்கின்றன. | 28—32 |
| 7. கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும் தெற்குப் பிராந்தியத்தில் புதிய போர்கள் ஆரம்பிக்க இருக்கின்றனவா? | 33—36 |
| 8. கிட்டு என்னும் ஓவியர் | 37—38 |
| 9. நான் மறுபடியும் பிறந்தால் | 39—49 |

KOHA JPL


| | | |
|---|---|---|
| 10. | தவறாக வழிநடத்தப்படும் யாழ்ப்பாணத்திற்கான உணவு வழங்கல் | 50—57 |
| 11. | இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கதிரவன் மறைந்ததும் | 58—62 |
| 12. | அங்கோலாவில் நடைபெற்றவை மொசாம்பிக்குக்குப் பாடமாக அமைகின்றன. | 63—68 |
| 13, | சாரண இயக்கத்தின் தந்தை பேடன்பவல் பிரபு | 69—72 |
| 14 | பயங்கரவாதிகள் 6500 உயிர்களைப் பலிகொண்டனர் | 73—77 |
| 15. | தமிழிசை என்றால் எது? | 78—86 |
| 16. | போருக்காக ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் திங்களொன்றுக்கு 1877-/ரூபாவைச்செலவு செய்கிறான் | 87—93 |
| 17. | சிரு லலித்தின் கொலை புதிராகவே உள்ளது | 93—107 |
| 18. | ஈ.பி டி.பி (ஈழமக்கள் சனநாயகக்கட்சி) இக்கட்டான நிலையிலுள்ளது | 108—116 |
| 19. | ஆசியாவில் ''புலிகள்'' என்று அழைக்கப்படும் ஆசியாவில் உயர்நிலைக் கைத்தொழில் நாடுகள் எதிர்கொள்ளும் பாசிய இழப்புக்கள் | 117—125 |

AHON 190

## தோழர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 19 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறு பட்ட விடயங்களைச் சரியாக ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும். இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் பல சரியானவை அல்ல...

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

94679

# அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிமக்களின் கவின்கலைகள், அவர்களை மற்றவர்களால் விரும்பி ஏற்கச் செய்கின்றன.

-ஜெனால்ட் ஸ்ருவாட்-
(ஐலண்ட் -13.4.1993)

200 ஆண்டுகளாக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த பூர்வீகக் குடிமக்கள், தங்கள் கவின்கலைகள் மூலம் தங்கள் வரலாற்றைத் தெரியப்படுத்தி எழுச்சி பெறுகின்றார்கள்.

பூர்வீகக் குடிமகன் ஒருவன் கறுப்பினத்தவன் என்ற ஒரே காரணத்தால், 1992ம் ஆண்டில் மெல்போன் நகரிலுள்ள மதுபானச்சாலை ஒன்றிலிருந்து வெளியேறும்படி பணிக்கப்பட்டதை வன்மையாக எதிர்த்து முரட்டுத்தனமாக நடந்து கொண்டான். இவனே அண்மையில், இவ்வாண்டில் அவுஸ்திரேலியப் பெருமகனுக்குரிய விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவன் ஆவான்

வடகிழக்கு அவுஸ்திரேலியாவிலுள்ள இயிர்க்கலா (Yirrkala) என்னும் இடத்தில் கறுப்பினப் பிள்ளைகளுக்காக நடாத்தப்படும் பாடசாலை ஒன்றின் தலைமை ஆசிரியரும், 37 வயதானவருமான திரு.மண்டாவு யுனுபிங்கு (Mandawuy Yunupingu) ஆகிய இவர் பூர்வீகக் குடிமக்களின் நடன இசைக்குழுவான ''யோதுயிண்டி' (Yothu Yindi) யின் முன்னணிப்பாடகர் என்று நாடளாவிய ரீதியில் மதிப்பைப் பெற்றிருந்தார்.

1993 ஆம் ஆண்டு உலகப் பழங்குடி மக்களின் ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதால், இவ்வாண்டில் ஒரு பூர்வீகக் குடிமகனுக்குச் சிறப்பளிப்பது பொருத்தமானதென அவுஸ்திரேலிய அரசாங்கம் கருதியது. அதன்படி திரு. யுனுபிங்கு அவர்

கள் தனது கலை, பண்பாட்டுச் சேவைகளுக்காகச் சிறப்பிக்கப் பட்டார். ''மற்றைய சமூகங்கள் பூர்வீகக் குடிமக்களை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும், நாட்டை எல்லோரும் இணைத்துக் கட்டியெழுப்பத்தக்க வகையிலும், பூர்வீகக் குடிமக்கள் பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தை இசைக்குழு மூலம் மாற்றி அமைக்கலாம்'' என இவர் தனது விருதைப் பெறும்போது கூறினார்.

அவுஸ்திரேலியர்கள் எனப் பெருமையாகக் கூறிக்கொள் பவர்களும், இனரீதியாகத் தாங்கள் ''ஐரோப்பியர்கள்'' என்று வகுத்துள்ளவர்களுமான வெள்ளையர்கள், பூர்வீகக் குடிமக் களின் கவின்கலைகள் காரணமாக அவர்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தங்களுடைய பாரம்பரியமான கலைகளை ஐரோப்பிய அல்லது அவுஸ்திரேலியாவிலுள்ள வெள்ளையர் களின் கலைகளுடன் இணைப்பதற்கு பூர்வீகக் குடிமக்கள் விரும் புவதாகப் பேசப்படுகின்றது.

நடிகர்களாகவும், நாட்டியக்காரர்களாகவும், திரைப்படத் தயாரிப்பாளர்களாகவும், இசைக்கலைஞர்களாகவும், வர்ணம் தீட்டுபவர்களாகவும், எழுத்தாளர்களாகவுமுள்ள பூர்வீகக் குடி மக்களின் தேவை இப்பொழுது பெரிதும் உணரப்படுகின்றது. மேற்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவரும், வர்ணம் தீட்டுபவ ரும், எழுத்தாளருமான சாலிமோகன் (Sally Morgan) அவர்க ளால் எழுதப்பட்ட ''எனது இடம்'' (My Place) என்ற நூல் முதன் முதலாக 1987-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டபின், மீண்டும் 21 முறை பிரசுரிக்கப்பட்டதுடன், அவரால் எழுதப்பட்ட ''சகோதரிப்பெண்'' (Sister Girl) என்ற நாடகம் அவருக்கு மக்களிடையே பெரும் மதிப்பைத் தேடிக்கொடுத்துள்ளது.

''பூர்வீகக் குடிமக்களின் கவின்கலைகள் வளர்ச்சி பெற அரசாங்கம் நிதியுதவி வழங்கியதன் காரணமாகவும், அவர்களின் பண்பாட்டுப் புனித இடங்களைக் காக்கவேண்டும் என்ற அரசின் தீர்மானம் காரணமாகவும், உலக மக்கள் அவர்களுடைய கலை களை அறியக்காட்டிய ஆர்வம் காரணமாகவுமே கறுப்பின மக் களின் கவின்கலைகளும், பண்பாடும் வளர்ச்சியுற்றன'' என பூர் வீகக் குடிமக்களின் கலை, பண்பாட்டை வழிநடாத்தும் சங் கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பெராவிலுள்ள தேசியக் கலையரங்கில் பூர்வீகக் குடிமக்களின் சித்திரங்களைக்

காட்சிக்கு வைத்தது ஒரு பெரிய புரட்சி என அந்தச் சங்கம் கருதுகின்றது. இரண்டு நூற்றாண்டு காலமாக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த பின்பும், தமது இனம் உயிர் வாழ்வதை எடுத்துக்காட்டும் முகமாக பூர்வீகக் குடிமக்களின் இசைக்குழுவினரால் நடாத்தப்படும் ''உயிர்வாழும் இசை நிகழ்ச்சிகள்'' ஆண்டு தோறும் நடாத்தப்படும் நிகழ்ச்சியாகத் தற்பொழுது மாறியுள்ளது.

சிறைவைக்கப்பட்டிருந்த பூர்வீகக் குடிமகன் ஒருவரின் சாவைப்பற்றி இசை நாடகமான ''கறுப்பு ஆறு (Black River) பெரும்பான்மையினராகவுள்ள 17 மில்லியன் வெள்ளை இனமக்களின் மனச்சாட்சியை உறுத்தக்கூடியதாகவிருந்தது. அண்மைக் காலங்களில் சுமார் 100 பூர்வீகக் குடிமக்கள் சிறைக்கூடங்களிலும், காவல்துறையினரின் காப்பிலுமிருந்தபோது இறந்துள்ளனர். அடித்து இம்சைப்படுத்தப்பட்ட சிலர் அடிகாயங்களால் இறந்துள்ளனர். வேறு சிலர் தற்கொலை புரிந்துள்ளனர்.

ஜேர்மன் குடியேற்றவாசிகளின் வழித்தோன்றல்களான அன்றூ மற்றும், யூலியானா சுகல்சு ஆகியோரால் தயாரிக்கப்பட்ட இசைநாடகத்தில் தனது மகனது சாவை நினைத்து ஏங்கிப் புலம்பும் தாயாகக் கறுப்பினத்தைச் சேர்ந்த பாடகியான மருச்சி பாரம்பா அவர்கள் தோன்றி நடித்துள்ளார்.

இசை நாடகம் (Opera) ஒன்றில் முதன் முதலாகப் பாடியுள்ள பூர்வீகக் குடிமகளாகிய இவர், கறுப்பு நதி எனப்பெயரிடப்பட்டுள்ள திரைப்படத்தைத் தயாரித்து வருகிறார். நைஜீரியா நாட்டைச் சேர்ந்த கணக்காளர் ஒருவரை மணம்புரிந்துள்ளார். அவர் கணவனே இவரின் முகாமையாளராக செயற்படுகின்றார். ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் தான் தேர்ந்தெடுத்த வாழ்க்கைத் துறையை வளர்க்கத் திட்டமிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா எங்கணும் நிகழ்த்தவிருக்கும் பிரான் நியூடை (Bran Nue Dae) என்ற பூர்வீகக் குடிமக்களின் முதலாவது இசைக்குழுவின் அரங்கேற்றத்திற்கு 250,000 அவுஸ்திரேலிய டொலர்களை இந்த ஆண்டு முற்பகுதியில் அவுஸ்திரேலிய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

* * *

சென்ற 60 ஆண்டுக்காலத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு நாடு இன்று பின்னடைவை எதிர்நோக்குவதன் கார

ணமாக அதன் வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை அதிக ரித்துவரும் இவ்வேளையிலும், பூர்வீகக் குடிமக்களுடன் இணக்கமாக வாழ்வது அரசியல் ரீதியாக முக்கியமானதாக இருப்பதனாலேயே பெருமளவில் உதவி வழங்கமுடியாத நிலை இருந்தபோதும் இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

நாட்டின் உட்புறங்கள் பலவற்றிற்கும், வானொலி நிலையங்களுக்கும் செய்மதி மூலம் சேவையை வழங்கத்தக்க வகையில் தங்கள் சொந்தத் தொலைக்காட்சி நிலையமொன்றை அமைத்துக் கொள்வதற்காகத் தொழில்நுட்ப உதவியும், நிதியுதவியும் கறுப்பின மக்களுக்கு வழங்கப்பட்டது.

இருப்பினும் தொலைக்காட்சிக்கெனப் பூர்வீகக் குடிமக்களால், பூர்வீகக் குடிமக்களுக்கெனத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் நாளாந்தம் காட்டப்படும் நேரத்தின் சிறு பகுதிக்கே போதுமானவையாகவிருக்கின்றன. பெரும்பாலான நேரங்களில் அமெரிக்க, அவுஸ்திரேலிய, பிரித்தானிய சமூக நாடகங்களே இதில் காட்டப்படுகின்றன.

தீவிரமான போக்குள்ள கறுப்பின மக்களில் சிலர் தங்கள் இனத்துக்குரிய தனித் தன்மையான கலையையும், பண்பாட்டையும் பேணிக்காக்க வேண்டுமெனவும், தங்களுக்கெனத் தன்னாதிக்கமுள்ள ஒரு தனி அரசு உருவாக்கப்பட வேண்டுமெனவும் விரும்பும் அதேவேளையில் கவின்கலைகளில் நாட்டம் கொண்ட அனேகமான பூர்வீகக் குடிமக்கள் தேசிய நீரோட்டத்துடன் இணைந்து ஆக்க முயற்சிகளில் ஈடுபட விரும்புகின்றார்கள்.

பூர்வீகக் குடிமக்களும், ஐரோப்பியர்களும், ஆசியாவிலிருந்துவந்து குடியேறிவர்களும் தங்கள் தங்கள் பாரம்பரியமான பண்பாட்டையும், மொழியையும் எதுவித வேறுபாடுமின்றி பேணி வளர்ப்பதற்கு இடமளிக்கும் பலதரப்பட்ட பண்பாடுகள் என்ற அரசாங்கத்தின் கொள்கையே இவ்விதமான ஒரு நிலையை உருவாக்க உதவுகின்றது.

★ ★ ★

# இலங்கை வான்பரப்பின் ஆற்றல் மிக்கவை எனப்படும் ஜெற் போர் வானூர்திகள் சில விநாடிகளில் இலக்கை அடைகின்றன.

- மோகன் சமரசிங்க -
(டெயிலி நியூசு 22-3-93)

எமது வான்பரப்பை காப்பதும், அதிலே ஆதிக்கம் செலுத்துவதும் என்ற திட்டத்திற்கமைய சிறீலங்கா வான்படை ஒரு புதிய காலத்தை எட்டியுள்ளது. சுப்பர் சோனிக் எவ் 7 ரக ஜெற் போர் வானூர்திகள் புதிய ஆற்றல் வானூர்திகளாக சிறீலங்கா வான்படையைச் சேர்ந்துள்ளன.

ஒரு ஆண்டிற்கு மேலாக சிறீலங்கா வான்படைச்சேவையிலுள்ள இந்த வானூர்திகள் சிறீலங்கா வான்பரப்பில் அத்துமீறி நுளைய நினைப்பவர்களுக்குக் கடுமையான தடுப்பை ஏற்படுத்தும் ஆற்றலாக விளங்குவதோடு, வடக்கிலே செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் ஆயுதப்படையினருக்கு முக்கிய ஆதரவுச் சாதனங்களாகவும் இருந்து வருகின்றன.

''ஒரு நாட்டின் வான்பரப்பைக் காப்பதே வான்படையில் தலையாய கடமையாகும். நாங்கள் இப்போது அந்த ஆற்றலை முற்று முழுதாகப் பெற்றிருக்கிறோம்'' என்று கூறுகிறார் இலங்கை வான்படையின் செயற்பாட்டு இயக்குனர் எயார் கொமடோர் அனிசிலம் பீரிஸ்.

கடந்த காலங்களில் இடையிடையே வான்பரப்பில் அத்துமீறல்கள் ஏற்பட்டமை காரணமாகவே இலங்கையரசு சுப்பர் சோனிக் ஜெற் போர் வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்தது. மிக விலை உயர்ந்த இந்த வானூர்திகள் பயங்கரவாத எதிர் நடவடிக்கைகளில் மிகத்திறமையாக செயற்படுகின்றன.

எதிரியை முறியடிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு ஆயுதம் தரிக்கப்பட்டுள்ள எவ் 7 வானூர்திகள், 1500 கிலோ கிராம் எடையுள்ள வெடிமருந்துகள், குண்டுகள் என்பனவற்றைக்கொண்டு செல்லக்கூடியன. இவற்றில் மிகத்துல்லியமான

குண்டு வீச்சு அமைப்பு செயற்சாதன வாய்ப்புக்களும் இணைக் கப்பட்டுள்ளன, ஒலியின் வேகத்தில் தாழப்பறந்து தனது இலக்கைத் தாக்கி அழித்து விட்டு சில விநாடிகளிலேயே மீளவும் காற்றோடு காற்றாக மறைந்து விடும் ஆற்றல் இதற்கு உண்டு. இந்த வானூர்திகளின் 30 மி. மீ பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

"தீர்மானிக்கப்பட்ட இலக்குகளையே நாங்கள் தாக்குகிறோம். ஒரு குடிமகன் தானும் கொல்லப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றோம். அந்த நோக்கத்தை நிறைவு செய்வதில் இந்த வானூர்திகள் எமக்கு உதவுகின்றன" என்றும் திரு பீரிஸ் கூறுகின்றார்.

ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலமாகத் திட்டமிட்டுப் பேரம் பேசிய பின்னரே இந்த சுப்பர் சோனிக் ஜெற் போர் வானூர்திகளை சீன உற்பத்தியாளரிடம் இருந்து இலங்கை வான்படை கொள்வனவு செய்தது. சீன அரசுடனான இந்த நேரடி வர்த்தகத்தில் ஏழு வானூர்திகளுடன் சீனப்பயிற்றுனர் வானூர்தி ஓட்டிகளும், பொறியியலாளர்களும் அடங்குவர்

இலங்கை வான்படையின் உச்சமட்ட ஆற்றல் வாய்ந்த 5 ஆம் இலக்க ஜெற் அணியினைச் சேர்ந்தவர்களுமான வானூர்தி ஓட்டிகளே இந்த வானூர்திகளைச்செலுத்துகின்றனர்.

இன்று இலங்கை வான்படையின் சுப்பர் சோனிக்வானூர்தி அணியில் இரண்டு எவ். ரீ.5 அடிப்படைப் பயிற்சி வானூர்திகளும், ஒரு எவ். ரீ. 7 போர் வானூர்தியும் (இது பயிற்சிக்குப் பயன்படுகிறது) நாலு மிக உயர்ந்த தரத்திலான நம்பிக்கை வைக்கக்கூடிய போர்/ வழிமறிப்பு வானூர்திகளும் உண்டு. இந்த வானூர்திக்கு தரைத்தாக்குதல் திறமையும் இருக்கிறது.

சோவியத் தயாரிப்பான மிக் - 21 க்கு ஈடானதாகக் கருதப்படும் இந்த வானூர்தி ஒலியிலும் பார்க்க இரண்டு மடங்கு அல்லது 2. 05 மச் (mach) வேகம் கொண்டதாகும். இதன்படி இதனுடைய ஆகக்கூடிய வேகம் மணிக்கு 2400 கி. மீ. என்பது குறிப்பிடத்தக்கது. மச் 1 அல்லது ஒலியின் வேகம் கடல் மட்டத்தில் மணிக்கு 1200 கி. மீ. ஆகும். (661 நொட்ஸ்).

மிக விரைவாகப் பறத்தலில் இதனுடைய உச்ச எல்லை 19,000 மீற்றர் அல்லது 62,000 அடி ஆகும். ஆயத்த நிலையிலான அதனுடைய வேகம் மணி ஒன்றுக்கு 340 கி. மீ ஆகும். சராசரிச் சிக்கனப்பயணமாக இந்த என் - 7 வானூர்தி 9200 கி. மீற்றர்களை ஒரு மணித்தியாலத்திற்குள் கடக்கக் கூடியதாக

இருப்பதால் கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டு 16 நிமிடங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு இலக்கை இது அடைய முடியும்.

''ஒலியைவிட வேகமாகச்செல்லும் ஆற்றல் இருப்பதால் சிறீலங்காவின் எந்த இடத்திலுள்ள இலக்கையும் ஒரு சில நிமிடங்களில் அடைந்துவிட முடியும். ஆச்சரியத்திற்கு உரிய விதத்திலான இதனுடைய செயற்பாடு ஒருபுறமிருக்க எமது எதிர்ச் செயற்பாட்டு நேரம் எதிர்பாராத அளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பதற்கு எவ் - 7 வானூர்திகளுக்கே நன்றி கூறவேண்டும். எதிரி தனது பணியைச் செய்வதற்கு ஒரு மணித்தியால கால இடைவெளிகூட நாங்கள் கொடுக்கத்தேவையில்லை. ஒரு சில நிமிடங்களில் நாங்கள் அவர்களை அடைந்து அவர்களை அழித்தொழிக்கலாம்'' என்று 5 ஆம் இலக்க ஜெற்பிரிவின் மேலாளரான குவொட்ரன் லீடர் கர்சா அபயவிக்கிரம தெரிவிக்கிறார்.

''ஒலியின் வேகத்தைக் கடக்கும் எவ்-7 வானூர்தியை முதன் முதலில் ஓடிய பெருமை அபயவிக்கிரமாவுக்கே உரியதாகும். கடந்த ஆண்டில் மார்ச் 11 இல் இரத்மலானைக்கு மேலாக மச் 1 வேகத்தில் இந்த விமானத்தை அவர் ஓட்டிச் சென்றபோது ஏற்பட்ட ஒலியின் வேகச்சத்தம் மக்களால் ஆற்றல் மிக்க ஒரு குண்டுவெடிப்பாக தப்புக்கணக்குப் போடப் பட்டது.

வானூர்தி ஓட்டுனர் ஆசனத்தில் அமர்ந்தவுடன் ஒருவரின் வாழ்வு புதிய கூர்ப்புநிலையை எய்துகிறது. கற்பனை செய்து பாருங்கள் மனிதன் எந்த அளவு வேகமாகச் செல்லமுடியுமோ அந்த அளவு வேகத்தில் செல்லும் நிலை என குவாட்றன் லீடர் அபயவிக்கிரம சொல்கிறார்.

''இந்த வானூர்தியில் 30 நிமிடம் பறப்பதென்பது ஒரு வர்த்தக வானூர்தியின் 7 மணித்தியாலப் பிரயாணத்திற்கு ஒப்பாகும். அதனுடைய வேகத்தின் தன்மை எதையும் சிந்திப்பதற்கு அவகாசம் அளிக்காது. உங்கள் பிரதிபலிப்பானது விதிவிலக்கானதாக இருக்க வேண்டும். ஒரு பயணத்தின் இறுதியில் மிகுந்த களைப்பாக இருக்கும்' என்று இந்த சிறந்த ஓட்டுனர் விளக்க முயல்கிறார்.

இந்த வானூர்தியை ஓட்டுதற்கு எடுத்த சகல பயிற்சிகளும், முயற்சிகளும் பெறுமதி வாய்ந்தவை. காரணம் எவ்-7 வானூர்தியில் ஒரு முறை வான்பரப்புக்குள் நுழைந்துவிட்டால் நாம் கனவில் மட்டும் எண்ணக்கூடிய ஆயிரம் பணிகளைச்செய்து முடிக்கலாம்.

பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்காக

# விடுதலைப் புலிகள் தங்களை வலுப்படுத்துகிறார்களா?

(சண்டே ரைம்சு 28-3-93)

பிரிவினைகோரி வடக்கில் நடத்தப்பட்டுவரும் போரில் தற்போது நிலவும் மந்தநிலை நீண்ட நாட்களுக்கு நீடிக்காது. ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்வதற்கான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் செய்துவருவதாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்ற ஆண்டு ஆனையிறவு பாசறைமீது மேற்கொண்ட மரபு வழிப்போருக்குச் சில வாரங்களுக்கு முன் விடுதலைப்புலிகள் எவ்விதமான பாரிய தயாரிப்புக்களை மேற்கொண்டிருந்தார்களோ, அதே போலன்று இப்பொழுதும் அவர்களின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பணிப்புரைக்கமைய சவப்பெட்டிகள் சேகரிப்பதிலும், போரில் காயமுறுபவர்களையும், சாவைத்தழுவிக் கொள்பவர்களையும் அப்புறப்படுத்த தாங்களாகவே முன்வந்து ஒத்துழைப்புக் கொடுக்கும் வகையில் பொதுமக்களைத் தயார்படுத்துவதிலும், மருந்துவகைகளைச் சேகரிப்பதிலும், அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுள் ஒருவரான திரு. கரிகாலன் அவர்கள் கிழக்கிலிருந்து தப்பியோடிவிட்டார் என ஈழமக்கள் சனநாயகக் கட்சியினால் நடாத்தப்படும் தமிழ் ஒலிபரப்பு நிலையமான மக்கள் குரலில் சென்றவாரம் கூறியவற்றிற்கு முற்றிலும் மாறாக இவர்,

வடக்கிற்குச் சென்று அங்கு கிழக்கிலிருந்துஅழைக்கப்படும் விடுதலைப்புலிகளை ஒன்று சேர்த்து இணைப்பதில்கடந்த சில வாரங்களாக ஈடுபட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

500க்கும் மேலான போராளிகள் கிழக்கிலிருந்து வடக்கிற்கு ஏற்கனவே அழைக்கப்பட்டதாக கொழும்பிற்கு வந்த யாழ்ப்பாண மக்கள் கூறியுள்ளார்கள். பாரிய தாக்குதல் ஒன்றிற்கான விரிவான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதை இது மேலும் உறுதிப்படுத்துகின்றது. விடுதலைபுலிகளின் இலக்கு எதுவாகவிருக்கும்?

அநுராதபுரத்தில் தலைமைப்பணியகத்தைக் கொண்ட கூட்டுப்படைய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஜெனரல் கமில்ரன் வனசிங்க அவர்கள் வடக்கிலுள்ள படையத் தளங்களை மாத்திரமன்றி, கிழக்கிலுள்ள தளங்களையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் சென்றவாரம் ஈடுபட்டார். போர் நடாத்தப்படும் பகுதிகளில் உயர்மட்ட படைய மேலாளர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டிருந்த போதிலும், என்ன விடயங்களைப் பற்றி கலந்துரையாடப்பட்டது என்பதைக் காப்பு வட்டாரங்கள் கூறவிரும்பவில்லை.

வடக்கிலுள்ள படைய பாசறை ஒன்றின் மீது தாக்குதல் நடாத்தப்படலாம் என்பதை விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் பாரிய ஆயத்தங்கள் எடுத்துக் காட்டுவதாகக் காப்பு வட்டாரங்கள் கருதுகின்றன. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் காப்புப் படையினரின் கவனத்தைத் திசை திருப்பக்கூடிய வகையில் சில தாக்குதல்களை கிழக்கில் அல்லது கொழும்புமாநகரில் அவர்கள் மேற்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாதென இவ்வட்டாரங்கள் மேலும் கருதுகின்றன. இதன் காரணமாகவே சந்தேகத்திற்கிடமான பொதிகள் மற்றும் பொருட்கள் மீது பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டுமென தொடர்பு சாதனங்கள் மூலம் அரச மேலாளர்கள் எச்சரிக்கை செய்து வருகின்றனர். வடக்கிலிருந்துவரும் மக்களுக்கு தங்குமிடவசதிகளைச் செய்து கொடுத்து வருபவையும், கொழும்பு மாநகரிலும் அதன் புறநகர்ப்புறங்களிலுமுள்ளவையுமான 'விடுதிகளும், தங்ககங்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## எம். வி. அகத் என்ற கப்பல் பற்றிய விடயம்.

இந்துமாகடலில் எம். வி. அகத் என்ற கப்பலில் இந்த ஆண்டு சனவரித்திங்களில் பயணத்தை மேற்கொண்டிருந்த விடுதலைப்

புலிகளின் முன்னணி யாழ்ப்பாணத் தளபதியும், வேறு எண்மரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டது விடுதலைப்புலிகளை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதென யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பயணி ஒருவர் கூறியுள்ளார். இதற்குக் காரணமாகவிருந்தவர்களைப் பழிக்குப் பழிவாங்கப் போவதாக மறைந்த திரு. கிட்டுவையும் அவருடைய சகாக்களையும் நினைவுகூரும் முகமாக நடாத்தப் பட்ட வைபவங்களின் போது விடுதலைப்புலிகளின் தலைவரான திரு. பிரபாகரன் அவர்கள் கூறியுள்ளார்.

தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஆயுதங்களை மேற்கொண்டுவரும் இவ்வேளையில், தங்களுக்கு மிகவும் அவசிய மாகத் தேவையான தொலைத்தொடர்புச் சாதனங்களையும், வெடிமருந்துகளையும் பெறும் முயற்சியில் விடுதலைப்புலிகள் மிக வும் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள். இவைகளை தங்கள் சொந்தக் கப்பலில் கொண்டு வருவதற்குப் பதிலாகக் கிழக்குக் கடலோரப்பகுதிக்கு அப்பால் வங்காள விரிகுடாவில், பயணத்தை மேற்கொள்ளும் மற்றவர்களுடைய கப்பல்களில் கொண்டுவருவ தற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்விதமாகக் கொண்டுவரவிருக்கும் பொருட்களை வேகமாகச் செல்லக்கூடிய சிறிய படகுகளில் ஏற்றி குடாநாட்டிற்குக் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் வகுக் கப்படுகின்றன.

எம். வி அகத் என்ற கப்பலின் விடயம் விடுதலைப்புலிக ளின் கடல் நடவடிக்கைகளை வெளிக்கொணர்ந்திருக்கிறது. லண்டன் நகரிலிருந்து வெளியிடப்படும் தமிழ் ரைம்ஸ் என்ற நாளேடு இந்த நடவடிக்கைகளைப் பற்றி பின்வருமாறு கூறியுள் ளது:

1987 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் புலனாய்வுத் துறையான றோவுக்கும் இலங்கைப் புலனாய்வுத்துறையினருக்கும் இடையே ஏற்பட்ட இணக்கம் காரணமாக, விடுதலைப் புலிகள் அனைத்துலகத்திலும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை இந்தியா இலங்கைக்கு வழங்கி வந்துள்ளது. கப்பல் மூலம் ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கொண்டுவரக்கூடிய சாத் தியக் கூறுகள் இருந்தவேளையில், அதுபற்றி இந்தியா இலங் கையை எச்சரித்து வந்துள்ளது. இருந்த போதிலும், கிழக்குக் கரைக்கு அப்பால் கண்காணிப்பைப் பலப்படுத்துவதைத்தவிர வேறு எதையும் இந்த எச்சரிக்கை கிடைத்தவேளையில் இலங் கடற்படையினரால் மேற்கொள்ளமுடியவில்லை. விடுதலைப்

புலிகளுடைய கப்பல் உண்மையிலேயே வந்தாலும்கூட அவற்றைக் கண்டுபிடிக்க அல்லது இடைமறிக்கக் கூடிய ஆற்றல் இலங்கைக் கடற்படைக்கு இருக்கவில்லை. இலங்கையின் கிழக்குக் கரையோரம் பரந்து அகன்று இருக்கும் அதேவேளையில், அண்மையில் விடுதலைப்புலிகளால் கட்டளைக்கப்பல்கள் மீது நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களால் நலிவுற்ற கடற்படையினரிடம் கண்காணிப்பு மற்றும் காவல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றல் மிகவும் குறைவாகவே இருந்தது. கப்பலின் பெயர், அது புறப்படவிருந்த தினம், அது தங்கி நிற்கும் சரியான இடம் ஆகிய விபரங்களை இந்தியர்கள் வழங்கினாலும் கூட, அதை வழிமறித்துத் தடுப்பதற்கேற்ற வகையில் கடற்படையினரை அனுப்பிவைக்கக்கூடிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருந்திருக்கும் என்பது சந்தேகமே.

இலங்கைக் கடற்படையினர் இரண்டாவது ஈழப்போரின் போது பகலிரவு என்று பாராது அயராது உழைத்து தங்கள் மகத்தான பங்களிப்பை ஆற்றியுள்ளார்கள். தங்கள் ஆயுதங்களைக் கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் பயன்படுத்தும் வங்காள விரிகுடாவில் தனது காப்பு நலன்களைத் திருந்தமுறையில் பேணுவதற்குத் தேவையான கப்பல்களையும், ஆழமற்ற நீர்ப்பரப்பில் செல்லக்கூடிய பீரங்கிப்படகுகளையும் கொள்வனவு செய்யவும், அவற்றைப் பராமரிக்கவும் இலங்கை அரசாங்கத்திடம் போதிய நிதிவசதி இல்லை.

வெளிப்படையாக இலங்கைக்கு உதவவோ, அல்லது நேரடியாகத் தலையிடவோ முடியாத நிலையிலுள்ள இந்தியா, தனது கடற்படையின் மூலம் விடுதலைப் புலிகளை முறியடிக்க முயல்கின்றது. விடுதலைப்புலிகளுக்கு வரும் ஆயுதங்களை அவர்களுக்குக் கிடைக்காதவகையில் ஆழ்கடலில் வைத்துத் தடுத்தால் அவர்களால் நெடுநாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியாது என இந்தியா நினைக்கின்றது.

**விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான கப்பல்களையும், அவர்களால் உபயோகப்படுத்தப்படும் கப்பல்களையும், அக்கப்பல்களுக்குச் சொந்தமான நிறுவனங்களையும், அவர்களுக்கு ஆயுதவழங்கல் செய்யும் வட்டாரங்களையும் கண்டு பிடிப்பதற்கு 1985 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியப் புலனாய்வுத்துறையினர் முயன்று வந்த போதிலும், திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொலைசெய்யப்படும்வரை அவர்கள் இந்தவிடயத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை.**

விடுதலைப்புலிகள் எத்தனை கப்பல்கள் வைத்திருக்கிறார்கள் என்பதையும், அவற்றின் ஆற்றல் எத்தன்மையது என்பதையும் பற்றி தெளிவற்ற விபரங்களையே இந்தியப் புலனாய்வுத்துறையினர் ஆரம்பத்தில் பெற்றிருந்ததாகத் தோன்றுகின்றது. கே. பி. என அழைக்கப்பட்ட மனிதர் ஆற்றும் பங்கு எவ்விதமானதென அவரை இனங்கண்டு கொள்வது எப்படி எனவும், அக்காலத்தில் இவர்கள் தமிழ்க்குழுக்களைக் கேட்டுள்ளார்கள். (இந்தியாவில் விடுதலைப்புலிகள் தங்கியிருந்தபோது தங்கள் முக்கியமான தலைவர்களின் அடையாளங்களையும், அவர்களின் செயற்பாடுகளையும் மிகுந்த கவனமாக இந்தியப் புலனாய்வுத்துறையினரான றோவிடமிருந்து மறைத்து வைத்திருந்தனர்.) தாய்மொழியில் மாத்திரமே விடுதலைப்புலிகள் தேர்ச்சிபெற்றவர்கள் 'என்ற தப்பபிப்பிராயம் காரணமாக அவர்கள் திறமையற்றவர்கள் என்று கருதிய "றோ" அவர்களுடைய உண்மையான தகுநிலையை அறியத்தவறிவிட்டது. (தமிழ்மக்களின் இனச்சிக்கல்பற்றி ஆராயும் சில அறிஞர்களும் இந்தத் தப்பெண்ணத்தைக் கொண்டுள்ளனர்.)

விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான எம். வி. சன்பேட் என்ற கப்பல் மலேசிய மேலாளர்களால் டிசெம்பர்த் திங்கள் 13-ம் நாள் கைப்பற்றப்பட்ட பின்னரே, விடுதலைப் புலிகளுக்குக் கப்பல் மூலம் கொண்டுவரப்படும் ஆயுதங்களைப்பற்றிய விபரங்களை இந்தியா அறிந்துகொண்டது. பருத்தித்துறைக் கப்பல் நிறுவனம் என்ற பெயரைக்கொண்ட நிறுவனத்தின் பேரில் இக்கப்பல் பதிவு செய்யப்பட்டிருந்தது. மைலிட்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் சண்முகம்குமாரன் என்பவரே கே. பி. என அழைக்கப்பட்டவர் எனவும், அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரி எனவும், இந் நிறுவனத்தின் இயக்குநர்களில் இவர் ஒருவர் எனவும் இனங்காணப்பட்டார். இதனைத்தொடர்ந்து, இரண்டாவது ஈழப்போர் 1990 ஆம் ஆண்டு யூன் திங்களில் ஆரம்பமாவதற்கு முன், இலங்கைத்தீவுக்கு வடக்கிலுள்ள நடுக்கடலில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான வேறொரு கப்பலான எம். வி. கோல்டின்பேட் போர்த்தளபாடங்களை இறக்கியதையும் அதுபற்றிய வேறு தகவல்களையும் இந்தியப்புலனாய்வுத்துறையினர் பெற்றுக் கொண்டனர். இத்தகவல் இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலையின் பின்னணியில் அகில உலகிலுமுள்ள தொடர்புகளுடன் மலேசியாவிலுள்ள "கே. பி" என்பவருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் தொடர்

PUBLIC LIBRARY
JAFFNA

பிருப்பதாகக் காரணங்காட்டி விடுதலைப்புலிகளின் வாணிப நலன்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி மலேசியாவைத் தூண்ட இந்தியா எண்ணியது. ஆயினும் மலேசிய அரசு இது சம்பந்தமான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது வாளாவிருந்தது இந்திய மேலாளர்களை திகைக்க வைத்தது. விடுதலைப்புலிகளால் உருவாக்கப் பட்டதெனச் சந்தேகிக்கப்படும் இந் நிறுவனங்கள் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் தொடர்ந்து இயங்குகின்றன. (இந்த நிறுவனங்களின் இயக்குநர் சபையில் தற்பொழுது ''கே. பி'' என்பவர் அங்கம்வகிக்கவில்லை. எம். வி. சண்பேட் என்ற கப்பலில் இருந்த சரக்குகள் கைப்பற்றப்பட்டபோது, மீண்டும் அது அதன் உரிமையாளர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

## ஆயுதக் கொள்வனவுகள்.

கே. பி. என்பவரைக் கைது செய்வதற்குத் தென்கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் இவ்வேளையிலும், இவர் தனது செயற்பாட்டை வழமை போல் இந்த நாடுகளின் நகரங்களில் நடாத்துவதாக இந்திய மேலாளர்கள் கூறுகிறார்கள். மலேசியாவில் பெருஞ்செல்வாக்கைப் பெற்ற ஒரு தமிழ் அரசியல்வாதியின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாக அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். ஆனையிறவுப்போர் ஆரம்பமாகும் முன் பெருந்தொகையான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் விடுதலைப்புலிகள் கப்பல் மூலம் பெற்றதாகத் தெரியவந்துள்ளது. இந்தப்போரில் பயன்படுத்தப் பட்ட இரண்டு வானூர்தி எதிர்ப்பு ஆயுதங்களையும், இந்த ஆயுதங்களுடன் அந்த நேரத்தில் விடுதலைப்புலிகள் பெற்றதாகச் சந்தேகிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளுக்கெனச் சரக்குகளுடன் வரும் கப்பலை இடைமறித்துத் தடுப்பதற்காக இலங்கையின் கரையோரப் பிராந்தியத்திற்கு அப்பாலுள்ள இரண்டு பகுதிகளைத் தனது கடற்படைக் கண்காணிப்பின் கீழ் இந்தியா கொண்டுவந்துள்ளது. இதில் ஒன்று முல்லைத்தீவுக் கரைக்கு அப்பாலும், மற்றையது இலங்கைத் தீவிற்குத் தென்கிழக்காகவுள்ள பொத்துவில் கரைக்கு அப்பாலுமாகும். முல்லைத்தீவுக்கரைக்கும் ஆழ்கடலுக்குமிடையேயுள்ள மணல் திடர்கள் இடைவழி நிலம் போல் அமைந்துள்ளதால், நடுக்கடலில் பொருட்களை இறக்கி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இப்பகுதி மிகவும் ஏற்றதாகக் கருதப்படுகின்றது. ஆழமற்ற கடலில் செல்லக்கூடிய விடுதலைப்புலிகளின் படகுகள் நெருக்கடி நிலைமை தோன்றும் போது மணல் திடல் மேலாகச் சென்று இடைவெளி நிலத்தை அடைந்து தப்பிக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. பொருட்களை இறக்கும் இடத்திற்கும் இம்மணல் திடலுக்குமிடையேயுள்ள தூரம் மிகவும் குறுகியதாகும்.

2655C.C

இந்தியச் செய்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட செய்திகளுக்கு முற்றிலும்மாறாக, முல்லைத்தீவுக்கு அப்பாலுள்ள இலங்கை கடலோர எல்லைக்கு அணித்தாகவே "ரொங்கோணோவ" என்ற படகு இடைமறித்துத் தடுக்கப்பட்டது என டில்லியிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இந்தியப் படையினர், அந்தமான் தீவுகளுக்குத் தங்கள் வழமையான பயணத்தை வானூர்தியில் மேற்கொண்டிருந்தபோது, வடக்குக் கரைக்கு அப்பாலுள்ள கப்பல் பாதைக்கு அணித்தாகக் கப்பல் ஒன்று வழமைக்கு மாறாக நிலைகொண்டிருந்ததை அவதானித்தனர். அப்பாதை ஊடாக வழமையாகப் பயணத்தை மேற்கொள்ளும் கலன்கள் பற்றிய விபரங்களை அறிந்த இந்தியக் கடற்படையினர் அப்பிரதேசத்திற்குள் நுழைந்தபோது அக்கப்பல் அவ்விடத்தைவிட்டு அகன்றுள்ளது. ஆனால் நடுக்கடலில் சரக்குகளை இக்கப்பலிலிருந்து இறக்கிய பெரிய படகான "ரொங்கோணோவா" முல்லைத்தீவை நோக்கிச் செல்வதற்கு முயன்ற போது வழிமறித்துத் தடுக்கப்பட்டது. ஆனால் கடல் மார்க்கமாக இன்னுமொருபகுதிப் பொருட்கள் இறக்கப்பட்டுவிட்டதைப் புலனாய்வு அறிக்கைகள் மூலம் இந்தியர்கள் இதன்பின் அறிந்துகொண்டனர்.

திருக்கோவில் - பொத்துவில் பாணமை ஆகிய இடங்களுக்கு அப்பாலுள்ள பெருங்கடல்கள் ஆயுதங்களைக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்டுவருவதாகச் சந்தேகிக்கப்பட்டது. முல்லைத்தீவைப்போலவே இதன் நெடிய கரையோரங்களில் தென்னந்தோட்டங்களும், புதர்ச்செடிகளும் உள்ளதாலும், காட்டின் உட்புறமாக உள்ள பாசறைகளுக்கு இலகுவில் செல்லக்கூடிய பாதைகளும் இங்கு உள்ளதாலும், இப்பகுதி மிகவும் வசதியான ஒன்றாகவிருக்கின்றது. இக்கடற்பாதையால் செல்லும் பெரும் எண்ணிக்கையான கப்பல்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் கப்பல் எதுவென்பதையும், அது எவ்வாறு அதை இறக்கப் போகின்றது என்பதையும் நவீனமுறையான மின்னியக்கக் கண்காணிப்பு மூலம்தானும் கண்டுபிடிக்க இயலாது. ஆகையால் வழமையாக மேற்கொள்ளும் கண்காணிப்புநடவடிக்கைகளுடன், விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் வட்டாரங்கள் மற்றும் அவற்றைப் பெற அவர்கள்செய்யும் வழிமுறைகள் ஆகியவை பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு இந்தியப்புலனாய்வுத் துறையான "றோ" ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளுக்காக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் நிபுணர் எனக் கருதப்பட்ட குட்டிசிறி அவர்கள் நடமாட்டத்தைப் பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து பெற்ற தகவல்கள் "றோ" விற்குக் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது. (இது நம்பக்கூடிய ஒன்றாகவில்லை.)

இருப்பினும், விடுதலைப்புலிகளின் ஆயுதக் கொள்வனவு சம்பந்தமான சில விபரங்களைப் பெறுவதற்கு மேற்குலக நாடுகளிலும், மத்திய நாடுகளிலுமுள்ள புலனாய்வுத்துறையினருடன் "றோ" தகவல்களைப் பரிமாற்றம் செய்திருக்கக்கூடும் என்று தோன்றுகின்றது. 1986 ஆம் ஆண்டிலும், 1989 ஆம் ஆண்டிலும் தமிழ்த் தீவிரவாதக்குழுவான புளொட்டால் மேற்கொள்ளப்பட்ட இருபெரிய ஆயுதக் கொள்வனவுகள் இந்த வழிமுறைகளைக் கையாண்டதன்மூலமே கண்டுபிடிக்கப்பட்டது என்பதை இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. திரு. கிட்டு அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கக் கூடாதெனவும், அவருடைய நடமாட்டங்களைப் பற்றிய தகவல்களைத் தனக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் மேற்குலக நாடுகளுக்கு இந்தியா கொடுத்த அழுத்தம் அதற்கு வெற்றியைக் கொடுத்துள்ளது. (திரு. கிட்டு அவர்கள் மீது மேற்குலக நாடுகள் அழுத்தத்தைப் பிரயோகித்தால் அவர் வேற்றார் கைக்குள் சிக்கவேண்டிவரும் என உத்தியோகப்பற்றற்ற முறையில் யாழ்ப்பாணத்திலிருந்து புதுடில்லியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இது உண்மையானால் திரு. கிட்டு அவர்கள் எம். வி. அகத் என்ற கப்பலில் ஏறியதும், அந்தக்கப்பல் அழிவைச் சந்திக்கவிருந்ததென்பது உறுதியாகிவிட்டது. விடுதலைப்புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்காகவோ, அல்லது குறிப்பிட்ட கோரிக்கைகளை இந்தியா தங்களிடம் முன்வைக்கும்போது அதைத் திருப்திப்படுத்துவதற்காகவோ, மேற்குலக நாடுகளிலுள்ள புலனாய்வுத் துறையினர், விடுதலைப்புலிகளின் ஆயுதக்கொள்வனவுகள் பற்றிய தகவல்களை அறிவிப்பார்கள் எனவும் தோன்றுகின்றது. எவ்விதமாயினும் இப்படியான ஒரு நிலையை எதிர்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் தங்களைத் தயார்படுத்துகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்படும் ஆயுதங்களுடனும், வெடிமருந்துகளுடனும் போரைத் தொடர்ந்தும் நடத்த வேண்டுமென்று கருதியே திரு. பிரபாகரன் அவர்கள் படை ரீதியாக விடுதலைப்புலிகள் தன்னிறைவுடன் இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார். ஆனால் விடுதலைப்புலிகளுக்குக் கடல்மார்க்கமாகக் கிடைக்கும் ஆயுதங்களை இந்தியக் கடற்படையினர் தடுத்துவிட்டால், வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் போரில் இலங்கைப் படையினர் இலகுவில் வெற்றியீட்டிக் கொள்வார்கள் என இந்திய மேலாளர்கள் நம்புகின்றார்கள். திரு. பிரேமதாசா அவர்களை மகிழ்ச்சியுறச் செய்வதன்மூலம் இலங்கையின் தென்பகுதியில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தவும், வலுப்படுத்தவுமே தற்பொழுது இந்தியா நாட்டம் கொண்டுள்ளது. எம். வி. அகத் கப்பலின் தகர்ப்பு கொழும்பை மகிழ்ச்சியுறச் செய்துள்ளது.

உலகிலுள்ள புகழ்பூத்த உயர் படையினர்

# வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றுவரும் போரைப் பற்றி ஆராய்கின்றார்கள்.

(சண்டே ரைம்சு 4. 4. 93)

பிரிவினைகோரி நடாத்தப்படும் போருக்கே சென்றவாரம் கொழும்பில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள கில்ரன் கோட்டலில் நடைபெற்ற பசுபிக் பிராந்திய மூத்த மேளாளர்களின் போர்முறை பற்றிய 22 ஆம் ஆண்டிற்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட 30 நாடுகளைச் சேர்ந்த உயர்படைய மேலாளர்கள் (Pacific Area Senior Officer Logistics Seminar (PASA) இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் போரை தங்களின் ஆய்விற்குச் சிறப்பம்சமாக எடுத்துக் கொண்டனர்.

அனைத்துலகிலுமுள்ள உயர்மட்ட படைய மேலாளர்களைக் கொழும்பில் கண்டு பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்றதையிட்டு இலங்கை அரச மேலாளர்கள் மகிழ்வுற்றனர். உலகின் முழுப் பரப்பில் 52%விகிதத்தைக் கொண்டுள்ள அமெரிக்க பசுபிக் படையப் பிரிவின் பிரதான படைத்தளபதியான அட்மிரல் சார்ல்ஸ் லார்சன் (Commander in Chief of the United States Pacific Command (CINPAC)) அவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒருவராவர். கவாயிலுள்ள பேர்ல் துறைமுகத்தில் தனது தலைமைப்பீடத்தை இப்படைப்பிரிவு கொண்டுள்ளது.

அட்மிரல் லார்சன் அவர்களின் தலைமையிலான இப்படைப் பிரிவிலிருந்தே சோமாலியாவில் உணவின்றி அல்லலப்பட்ட மக்களின் துயர்துடைப்பதற்கான பணியில் பல படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். குறிப்பிட்ட வான்பரப்பிற்குள் வானூர்திகள் செல்லுவதற்கு தடைவிதித்திருந்தபோதிலும், அதைமீறி நடந்து கொண்ட ஈராக்கிய வானூர்திகளைத் துரத்தியடித்த வானூர்திகளும் இப்படைப் பிரிவிலிருந்தே அனுப்பப்பட்டன. இந்திய அமைதிகாக்கும் படையில் பணியாற்றியிருந்த சிலரும் இதில் கலந்து கொண்டனர்.

## தகவுப்பொருத்தமான விடயங்கள்

சிறீலங்கா படைச் செயலாளர் திரு. சந்திரா அபேயரத்தினா அவர்களின் தலைமையின் கீழ் 15 பேரைக் கொண்ட படையத்தூதுக் குழுவொன்று சிறீலங்காவின் பிரிவினை கோரி நடைபெறும் போரைப் பற்றிக்கருத்து வெளியிட்டதுடன், தரைப்படையினரின் வாகனப் போக்குவரத்து, கடற்படையினரின் போர்க்கலை மற்றும் பயிற்சி, வான்படையினரின் வானூர்திகளுக்கு வழங்கப்படும் போலியான உதிரிப்பாகங்கள் போன்ற ஒவ்வொரு போர்த்துறையினதும் தகவுப் பொருத்தமான விடயங்களைக் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்காக முன்வைத்தனர்.

தரையில் செல்லும் வாகனங்களுக்கு மாத்திரமே போலியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகக் கருதியிருந்த இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட பலரை இலங்கை வான்படையினர் தெரிவுசெய்த விடயம் சிந்திக்க வைத்தது.

வானூர்திகளுக்குப் போலியான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதையிட்டு போர்க்கலையில் பட்டறிவும், ஆற்றலும் வாய்ந்தவர்கள் ஆராயவேண்டுமென இலங்கை வான்படையினர் விரும்புகின்றனர். உதிரிப்பாகங்களை வழங்கல் செய்த எவரேனும் போலியான உதிரிப்பாகங்களை இலங்கை வான்படையினருக்கு விற்பதற்கு முயன்றார்களா? அவசியமாகத் தேவைப்படும் உதிரிப்பாகங்களை ஆயுதச் சந்தையில் அவர்கள் தேடுவதாக அறிய முடிகின்றது.

வடக்கில் நடைபெற்றுவரும் போரைப்பற்றி அகில உலகிலுமுள்ள போர் வீரர்கள் கொழும்பில் பேசிய அவ்வேளையில், தன்னை நெடுங்காலமாகக் கவலையுறச் செய்துவரும் மனித உரிமை மீறல்கள் பற்றி இலங்கை அரசும் தன் கருத்தை வெளியிட்டது. வடக்கிலும், கிழக்கிலும் நடைபெற்றுவரும் போரைத்

தொடர்ந்து திறம்பட நடாத்தக் காப்புப்படையினரை உற்சாகப்படுத்தும் அதே வேளையில், பொதுமக்களை இன்னலுக்கு உள்ளாக்கக் கூடியதும், மனித உரிமைகளை மீறக்கூடியதுமான நிகழ்ச்சிகளைத் தவிர்க்கவும் அரசாங்கம் விரும்புகின்றது.

காப்பு அமைச்சில் வியாழக்கிழமை நடைபெற்ற உயர்மட்ட மேலாளர்களின் மாநாட்டில் இவ்விடயம் பற்றியே பேசப்பட்டது.

சனாதிபதிக்கு அனைத்துலக விடயங்கள் பற்றி ஆலோசனை கூறும் திரு. பிரட்மன் வீரக்கோன், சட்டத்துறைத் தலைவரான திலக் மாரப்பான, காப்பு செயலாளர் பதவியை விட்டு விலகிச் செல்லும் ஜெனரல் சிறில் றணதுங்கா, அவரின் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள எயர் மார்சல் வால்ரர் பெர்னாந்து, தரைப்படைத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா, வான்படைத் தளபதி எயர் மார்சல் ரெறன்சு குணவர்த்தனா, கடற்படைத் தளபதி நெயர் அட்மிரல் மோகன் சமரசேகரா, காவல்துறை மா அதிபர் ஏர்னசற் பெரேரா மற்றும் காவல் துறையையும், முப்படையையும் சேர்ந்த மூத்த மேலாளர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

மனித உரிமைகள் மீறப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் காரணமாகத் தோன்றிய களங்கத்தைப் போக்க முடியாவிடினும் அதனைப் பேணுவதில் இலங்கை முன்னேற்றம் அடைந்து வருவது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது எனச் சட்டத்துறைத் தலைவரான திலக் மாரப்பான கூறினார். அண்மையில் நடைபெற்ற மனித உரிமைமீறல் சம்பவங்கள் சிலவற்றைக் குறிப்பிட்ட இவர், இவ்விதமான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாத வகையில் மூத்த மேலாளர்கள் பார்த்துக் கொள்ளவேண்டுமென வலியுறுத்தினார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது மனித உரிமைகள் மீறப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் எழும்போது என்ன நடக்கின்றது என்பதை திரு. மாரப்பான குறிப்பிட்டார். படைய விசாரணை ஒன்றை மேற்கொள்ளும் போது, போதிய சாட்சியங்கள் இல்லாமையால், குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படாது தப்பித்துக் கொள்கின்றனர். இதனால் இலங்கையைப் பற்றி வெளியுலகம் தவறான கருத்துக்கொள்ள இது இடமளிக்கின்றது.

மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி அனைத்துலகச் சமுதாயத்திற்கிடையே நல்ல கருத்துத் தோன்ற ஆரம்பித்துள்ளதைத் திரு. வீரக்கோன் அவர்கள் குறிப்பிட்டார். ஆயினும் சந்தேகக்

கண்ணுடனேயே உலகம் எம்மை நோக்குகின்றது. அதன் நல்ல எண்ணத்தைப் பெறத்தக்க வகையில் மேலும் நாம் முயற்சிக்க வேண்டியுள்ளது என அவர் கூறினார். சென்ற ஆண்டு 70 பேர் காணாமல் போய்விட்டதாகவும், அவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்கள் பற்றிய விடயத்தைக் குறிப்பிட்ட போது இலங்கையைவிட்டு வெளியேறிச் சென்றவர்களும், சோவியத் ஒன்றியத்தின் சட்டத்திற்கு முரணாக அந்நாட்டிற்குள் புகுந்ததற்காகக் கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களும் இக் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்களா என வான்படைத் தளபதியான ரெறன்சு குணவர்த்தனா கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த திரு. வீரக்கோன் அவர்கள், இதற்கும் அவ்விடயத்திற்கும் தொடர்பு எதுவுமில்லை எனவும், காணாமற் போனவர்கள் பற்றி மனுக்களிலும், குற்றச்சாட்டுக்களிலும் தெரிவிக்கப்பட்ட விடயம் வேறு விதமானது எனவும் கூறினார். ஒரு மனிதனை எப்படியான வாகனம் கடத்திச் சென்றது, கடத்தியவர்களின் உருவஅமைப்பு என்ன, கடத்திச் செல்லப்பட்டவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார், அதன்பின் அவரைப்பற்றி எதுவுமே தெரியாது போன்ற விபரங்களை இம் மனுக்கள் கொண்டுள்ளன. அவர்கள் உருசியாவிற்குச் சென்றிருப்பார்கள் எனத் தான் கருதவில்லையென திரு. வீரக்கோன் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளை மீறுவதாக எழும் குற்றச்சாட்டுக்களைப் படையினர் மீது மாத்திரம் சுமத்தக்கூடாது எனப் படையினரின் நலனில் அக்கறையாக உள்ளவரும் கூட்டு நடவடிக்கைத் தலைமைய களகர்த்தாவுமான ஜெனரல் கமில்ரன் வணசிங்கா அவர்கள் தெரியப்படுத்தினார். அரசியல்வாதிகளும் அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் எனவும் இவர் கூறினார்.

## பாரிய தாக்குதல்

விடயமறியாத சில படையினர் அரசியல்வாதிகளின் கட்டளைக்கு இணங்க சில சந்தர்ப்பங்களில் நடந்திருக்கக்கூடும் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

விடுதலைப் புலிகள் பெரிய ஒரு தாக்குதலுக்கு தயாராகின்றார்கள் என்ற தகவலைத் தொடர்ந்து கமில்ரன் வணசிங்கா அவ் விடயங்களிலும் தனது நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது.

விடுதலைப்புலிகள் தங்களைப் பலப்படுத்துவதாகச் சண்டே ரைம்சு நாளேட்டில் வெளிவந்த செய்தியை தாங்கள் உன்னிப்பாக நோக்குவதாகவும், அவற்றை உறுதிசெய்வதாகவும் படைய பேச்சாளரான பிரிகேடியர் நாளின் அங்கமான சென்ற வியாழன் அன்று கூறினார். சென்றவார நாளேட்டில் கூறப்பட்டதுபோல், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தனது மூத்த மேலாளர்களுடன் ஜெனரல் வணசிங்கா அவர்கள் ஆராய்ந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் செய்யவிருப்பது என்ன? யாழ்ப்பாண ஏரியை எவரும் உபயோகிக்கக்கூடாது என்ற தடையை அரசாங்கம் விதித்ததன் காரணமாகப் பல இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு விடுதலைப்புலிகள் வெகுவிரைவில் உதவப்போவதாக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வாரம் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. இவர்களுடைய இக்கூற்று உண்மையாயின், நாகதேவன்துறையிலுள்ள கடற்படையப் பாசறை மீது அல்லது ஆனையிறவு படையப் பாசறை மீது அல்லது சங்குப்பிட்டியிலுள்ள படையப் பாசறை மீது தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு இவர்கள் திட்டமிடுகின்றார்களா?

பொதுமக்கள் இருவரையும், மூன்று புளொட் உறுப்பினர்களையும் வவுனியாவிற்கு வடக்கேயுள்ள சோதனைச் சாவடி ஒன்றில் வியாழக்கிழமை காலைப்பொழுதில் விடுதலைப்புலிகள் கொன்றுள்ளார்கள். இதற்கு முந்திய இரவில் இச்சோதனைச் சாவடியைச் சூழவுள்ள பகுதிகளில் கண்ணிவெடிகளை விதைத்து இத்தாக்குதலை நடாத்த விடுதலைப்புலிகள் தங்களைத் தயார்படுத்தியுள்ளார்கள்.

காப்புப் படையினருக்கு உதவியாக இயங்கும் புளொட் உறுப்பினர்கள், சோதனைச் சாவடியை சூழவுள்ள பகுதியில் தாங்கள் வழமையாக மேற்கொள்ளும் சோதனையை வியாழக்கிழமை காலைப் பொழுதில் மேற்கொண்டிருந்த வேளையில், பொதுமக்களுக்குப் பின்னால் மறைந்திருந்த விடுதலைப் புலிகள் அவர்களை நோக்கிச் சுட்டார்கள். கொல்லப்பட்ட மூன்று புளொட் உறுப்பினர்களில் ஒருவரின் உடலையும், 3 ஆயுதங்களையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். குடாநாட்டிலிருந்து பிரதான நிலப்பரப்பிற்கும், பிரதான நிலப்பரப்பிலிருந்து குடாநாட்டிற்கும் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யத்தக்க வகையில் பாதையை அமைக்கும் முயற்சியில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

# விடுதலைப்புலிகளிடையே நிலவும் முரண்பாட்டை அவர்களுக்குள்ள இன்னல்கள் விரிவுபடுத்துகின்றன.

-மார்க் செனவிரத்தின

(சண்டே ரைம்ஸ் -28.3.93)

விடுதலைப்புலிகளிடம் அண்மைக்காலம்வரை அவர்களுடைய தேவைக்கு அதிகமான நிதிவசதி இருந்தது. ஆனால் அவர்களுடைய அச்சிறப்பான காலம் இன்று முடிவுற்றுவிட்டது. மீண்டும் அவ்விதமான ஒரு காலம் அவர்களுக்கு வருமென்று கூறுவது கடினமாகும். தமிழ்மக்களின் வேணவாவைக் காப்பதாகக் கூறும் விடுதலைப்புலிகளுடைய கூற்றிலுள்ள உண்மையிலும், ஈழத்தை அமைத்தே தீருவோம் என்ற அவர்களின் உறுதிமொழியிலும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்று வாழும் தமிழர்கள் அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்ததால், அவர்களுக்கு வழங்கும் நிதியை வெகுவாகக் குறைத்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகளுக்கு வெளிநாடுகளில் பெரும் வருவாயைப் பெற்றுக் கொடுத்த போலிக் கடவுச்சீட்டு தயாரிப்பது போன்ற நடவடிக்கைகள் அந்நாடுகளிலுள்ள மேலாளர்களின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளதால், இந்த நடவடிக்கைகள் மூலம் அவர்கள் பெற்றுவந்த வருவாய் பெரிதாகக் குறைந்துள்ளது. வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற இலங்கைத்தமிழ் மக்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தைப் பெற்று வரும் விடுதலைப்புலிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டும், கைதுசெய்யப்பட்டும் வருகின்றார்கள். இதே நேரத்தில் அத்தமிழ்மக்களின் வருவாய் அவர்கள் சீவியத்திற்கு மாத்திரமே போதுமானதாக உள்ளது.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்குப் பின்னர் இந்தியர்கள் தடைவிதித்ததைத் தொடர்ந்து, தென்னிந்தியாவில் இருந்த தங்கள் வாணிபங்களை விடுதலைப்புலிகள் இழக்கநேரிட்டது. இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்குமிடையே நடாத்தப்பட்டதும்,

விடுதலைப்புலிகளுக்குப் பெரும் இலாபத்தைக் கொடுத்து வந்ததுமான கடத்தல் நடவடிக்கைகளையும் இந்திய மேலாளர்கள் முறியடித்தார்கள். வடக்கிலுள்ள மக்களிடம் அண்மைக்காலம் வரை இருந்தது போன்று விடுதலைப்புலிகளுக்குக் கொடுப்பதற்கு போதிய நிதிவசதி தற்போது இல்லை. மக்களிடம் இருந்து வற்புறுத்திப் பெறப்படும் தமிழீழ மீட்பு நிதியத்திற்கும் போதியளவு நிதி கிடைப்பதில்லை.

உயர்மட்டத்திலுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர்களிலிருந்து சாதாரண உறுப்பினர்கள் வரையான அனைவரது வாழ்க்கையையும் இவ்வின்னல்கள் மிகவும் கடினமாக்கி உள்ளது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளின் இளம் தலைவர்கள் செலவினங்களில் மிகவும் சிரத்தையாக உள்ளனர். உதாரணமாக ஆயுதங்கள், சிறுபீரங்கிகள், மிதிவெடிகள் போன்றவற்றை உருவாக்க மேற்கொண்ட முயற்சியின்போது வீணாக்கப்பட்ட பொருட்களைப்பற்றியோ, நிதியைப்பற்றியோ முன்பு எவரேனும் கவலைப்படவில்லை. ஆனால் இந்நிலை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. ஏதோ ஒன்றைத் தயாரிக்கும் பணியை பிரதாப் என்ற போராளியிடம் ஒப்படைக்கும்படி சில நாட்களுக்கு முன்பு விடுதலைப்புலிகளின் பிரிவொன்றின் தலைவரிடம் கேட்டுக்கொண்டபோது ''சிலபொருட்களைப் பிரதாப்பிடம் கொடுப்பதாயின் அவற்றைக் கொள்வனவு செய்ய எவ்வளவு செலவிடப்பட்டது என்பதை விளக்கிக் கூறும்படி அவரிடம் (பிரிவுத் தலைவரிடம்) கூறப்பட்டது.

கிண்ணியாவிலுள்ள விடுதலைப்புலிகளின் போராளிக்குழு அவசரமாக நிதிதேவைப்படுவதாக மார்ச் திங்கள் 11ம் நாள் யாழ்ப்பாணத்திற்கு அறிவித்தபோது, அவர்கள் வேண்டியவாறு வழங்குவதற்கு நிதியில்லையென அவர்களுக்குக் கூறப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பில் புதிதாக இணைந்து கொண்டவர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவது தற்போது கடினமாகவிருக்கின்றது. மார்ச் திங்கள் நடுப்பகுதியளவில் வெலிஓயாவிலுள்ள விடுதலைப்புலிகளுடன் 25 பேர் புதிதாக இணைந்து கொண்டனர். ஆனால் இப்புதுப் போராளிகளுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு அவர்களிடம் வசதிகள் இருக்கவில்லை. யாழ்ப்பாணப் பிரிவிலிருந்து இவற்றைக் கோரியபோது, நெடுங்கேணியிலிருந்து பெறும்படி பணிக்கப்பட்டது. ''நீங்கள் கோரியவற்றை இங்கு எடுப்பது கடினமாகவுள்ளது. உங்கள் பகுதியிலேயே நீங்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள

முடியாதா" என்ற பதிலையே நெடுங்கேணியிடமிருந்து வெளி ஓயா பெற்றுக்கொண்டது.

## கடினமான காலப்பகுதி.

உதிரிப்பாகங்கள் இல்லாததன் காரணமாக நீர் இறைக்கும் இயந்திரத்தை திருத்த முடியாமையால், தம்பலகாமத்திலுள்ள விடுதலைப் புலிகள் பெரும் துன்பங்களை நீண்டகாலமாக அனுபவிக்கவேண்டியிருந்தது தளபாடங்கள் இல்லாமையினால் யாழ்ப்பாணத்திற்கு அண்மையாகவுள்ள விடுதலைப் புலிகளின் பிரிவு ஒன்றும் மிகவும் பாதிப்புக்குள்ளானது. எந்தவொரு பொருளையும் தாம் இன்னும் பெறவில்லை என மூதூரிலுள்ள வழங்கல் நிலையத்திற்கு முறையிட்ட போது, அவர்களுடைய தளத்திற்கு வழங்கல் செய்வதற்கான பொருட்களை தாம் இன்னும் பெறவில்லை என்ற பதிலே அவர்களுக்குக் கிடைத்தது. பெரும்பாதிப்புக்குள்ளான வாகரையிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரிவு தாங்கள் இக்கட்டான நிலையிலிருப்பதால் ஒரு திங்களுக்குத் தேவையான பொருட்களை அனுப்பிவைக்குமாறு கோரியிருந்தது

தளபாடங்களினதும், பொருட்களினதும் பற்றாக்குறை விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைப் பாதித்துள்ளதால் விடுதலைப்புலிகளிடையே ஒழுக்கப்பண்பு வெகுவாகக் குறைந்துள்ளது. கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் மத்தியில் சரணடையும் பேச்சு இடம்பெறுவது விடுதலைப்புலிகளின் தலைவர்களைக் கவலை கொள்ளச் செய்துளது. இக்கவலை காரணமாகவும், திருக்கோவில் பிரிவுத்தலைவரைத் திருப்திப்படுத்தவும், விடுதலைப்புலிகளின், மட்டக்களப்பு தலைவரான கருணா அவர்கள் ராம் என்பவர் பெருந்தொகையான பொருட்களைக்கொண்டு வருவார் எனவும், மகிழ்ச்சியைத்தரும் செய்திகளை (வெற்றிகரமான தாக்குதல்கள்) அவரிடமிருந்து கேட்க ஆவலாக உள்ளதாகவும் கூறியுள்ளார். ஆனால் திருக்கோவிலிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு எந்தவொரு பொருளையும் ராம் அவர்கள் கொண்டு செல்லவில்லை.

நிதிப்பற்றாக்குறை விடுதலைப் புலிகளின் செய்தித் தொடர்புகளையும் பாதித்துள்ளது. தொலைத்தொடர்பு சாதனத்திற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் இல்லாமையே விடுதலைப் புலிகளுக்குப் பெரிய தலையிடியாகவிருக்கின்றது. தங்களுடைய பிரதான தொலைத்தொடர்பு சாதனம் நீண்டகால

மாசத் திருத்தப்படாதிருப்பதாக மன்னாரிலுள்ள விடுதலைப் புலிகள் மார்ச் திங்கள் இரண்டாம் வாரத்தின்போது தினமும் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திற்கு நினைவூட்டிவந்துள் ளனர். நிலைமை மிகவும் மோசமாக இருந்ததால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விடுதலைப்புலிகளின் நிலையங்களுடன் தொடர்பு கொள்வதற்குத் தன்னிடமுள்ள ஒரேயொரு தொடர்பு சாதனமான வாக்கிரோக்கியுடன் விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளரான திரு. கரிகாலன் அவர்கள் நடமாடவேண்டியிருந்தது.

'பியுரோகிரேசி' நிலைமை உருவாக்கக்கூடிய விதத்திலும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. பலதரப் பட்ட படிவங்களையும், ஒழுங்குமுறைகளையும் அறிமுகப்படுத் திய அவர்கள், அரசாங்க பணிமனைகளைவிட கடினமான விதி முறைகளைக் கடைப்பிடிப்பார்கள் போலத் தோன்றுகின்றது. விடுதலைப்புலிகளுக்கிடையே நிலவிய நம்பிக்கை தற்பொழுது குறைந்து வருகின்றது. அவர்களுக்கிடையே சந்தேகம் தோன்ற ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஊடுருவல் இடம் பெறலாம் என்ற அச்சமும் நிலவுகின்றது. இதன் காரணமாகப் புதிதாக ஆட்களைச் சேர்க்கும் போது அவர்களை இனங்காண் பதற்குப் புதியபுதிய வழிமுறைகளைக் கையாளவேண்டியுள்ளது. தொலைத்தொடர்பு சாதனத்தில் பேசுகின்ற பழக்கமானவர்க ளின் குரல்களையும் ஏற்காது அக்குரல் ஊடுருவல்காரனுடை யதா அல்லது ஏமாற்றுக்காரனுடையதா என்பதை உறுதிசெய் வதற்காகக் தொலைத்தொடர்பு சாதனத்தின் இயக்குநரிடம் பல கேள்விகள் கேட்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகளுக்கிடையே சந்தேகமும், அவநம்பிக்கை யும் நிலவுகின்றதென்பதை கலந்துரையாடல்கள், ஒன்றுகூடும் போது பேசப்படுபவை, கூட்டங்களில் பேசப்படுபவை மற்றும் சாதாரணமான உரையாடல்கள், நாடாவில் பதிவு செய்யப்படு வது எடுத்துக் காட்டுகின்றது. பதிவு செய்யும் பிரிவு என்ற ஒரு பிரிவு உருவாக்கப்பட்டதிலிருந்து பதிவு செய்வதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளலாம். இப்பணியை ஆற்ற நியமிக்கப்பட்டவர்கள் பயிற் சியளிக்கப்பட்டதுடன், இப்பணியை மாத்திரமே ஆற்றுகின்றார் கள்.

நிதியினதும் பொருள்களினதும் பற்றாக்குறை விடுதலைப் புலிகளுக்கிடையே சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும் மாக்

திரமன்றி கட்டுப்பாடின்மையையும் தோற்றுவித்துள்ளது. விடுதலைப்புலிகளின் கிளிநொச்சிப் பிரிவைச் சேர்ந்த செல்லப்பா உதயகுமார் என்பவர் அந்தப்பிரிவிற்குச் சொந்தமான பதினையாயிரம் ரூபாய் பணத்தைக் கையாடிக்கொண்டு தலைமறைவாகிவிட்டார். அங்கிருந்து செல்லும் பொழுது சில எறிகுண்டுகளையும் தன்னுடன் எடுத்துச்சென்ற அவர் வீடுகளையும், கடைகளையும் கொள்ளையிடுவதற்கு அவைகளைப்பின்னர் உபயோகப்படுத்தியுள்ளார். விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த சுந்தரம் சுரேஷ் என்பவரும் அவருடைய சகோதரனும் வடக்கிலிருந்து தலைமறைவாகிச் செல்வதற்குமுன் வீடு உடைப்பிலும், வழிமறிப்புக்கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தனர். விடுதலைப்புலிகளின் இளம் தலைவரான செங்கோளன் இராஜேந்திரன் என்பவர் வவுனியாவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலுள்ள ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளார். இவையாவும் இத்திங்களுள் ஒரு வாரத்திற்குள் நடைபெற்றுள்ளன.

## பெண்போராளிகள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த விநாயகம் என்பவரும், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த குமரன் என்பவரும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கொல்லப்பட்டார்கள். அதேவேளை ஒழுக்க நெறியிலிருந்து தவறியவர்களும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களுமான பத்துப்போராளிகள் விடுதலைப்புலிகளின் சித்திரவதைக் கூடங்களில் சிறைவைக்கப்பட்டனர். இவையாவும் ஆறு நாட்களுக்குள் நடைபெற்றன. இப்படிச் சிறைவைக்கப்பட்டவர்களுள் பெண்புலியான மனோராஜினியும் ஒருவராவர்.

விடுதலைப்புலிகள் பல இன்னல்களை எதிர்நோக்குவதும் காப்புப்படையினர் குடாநாட்டை சுற்றிவளைத்திருப்பதும் விடுதலைப்புலிப் பெண் போராளிகளுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஆண் போராளிகளைவிட பெண் போராளிகள் போர்முனையில் திறமையாகச் செயற்பட்டுள்ளார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய மதிப்புக் கொடுக்கப்படவில்லை. ஆண்போராளிகளை விட அவர்கள் குறைந்தவர்களாகவே கருதப்பட்டு வந்தனர். இது அவர்களை ஆத்திரமுறச் செய்தபோதிலும் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை ஆகியவற்றிற்கு அவர்கள் கட்டுப்பட்டு நடக்கப்பழக்கப்பட்டவர்கள், ஆகையால் அதை அவர்கள் இவ்வளவு காலமும் பொறுத்துக்கொண்டு வந்திருக்கின்றனர்.

தங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுவரும் பாகுபாட்டிற்கு பெண் புலிகள் இதுகாறும் காட்டிவந்த சகிப்புத்தன்மையை, நீதியின்மையும், பொருட்களின் பற்றாக்குறையும், விடுதலைப் புலிகளுக்கிடையே நிலவும் சந்தேகமும் அவநம்பிக்கையும் அத்துடன் வேறு காரணங்களுக்கு தளர்வுறச் செய்துள்ளது. அனைத்துலக மகளிர் தினத்தைக் கொண்டாடும் முகமாக நடாத்தப் பட்ட கூட்டத்தின் போது பெண் போராளிகளின் தலைவியான ஜெயா அவர்களே இதை வெளிக்காட்டியுள்ளார். விடுதலைப் புலிகளின் ஆண்தலைமைத்துவத்தை இவர் கடுமையாக விமர்சித்துள்ளார். யாரைத்தாக்கிப்பேசினார் என்பதை அவர் வெளிக் காட்டவில்லை சிங்களவரைச்சாடுவதுபோல் அமைந்த அவரது உரையில் "சிங்களவர்களின்கொடுஞ்செயல்கள்காரணமாகவும், காலத்துக்கு ஒவ்வாத மரபுவழிகள் காரணமாகவும் தமிழீழத்தில் வாழும் பெண்களின் வாழ்க்கை முறை மிகவும் பரிதாபத்திற்குரியதாக விருக்கின்றது" என்று குறிப்பிட்டிருந்தார்.

சிங்களவர்களின் போக்கைப் பற்றி அவருடைய மிகுதிப் பேச்சில் அவர் எதுவும் குறிப்பிடவில்லை. "பெண்களுக்கு இரண்டாம் தரமான இடமே கொடுக்கப்பட்டுள்ளது. தமிழீழ சமூகத்தில் இதைத்தெளிவாகக் காணமுடிகின்றது. பெண் தொழிலாளர்கள் கொடுமைப் படுத்தப்படுவதையும் காணமுடிகிறது. தொழில்புரியும் பெண்வர்க்கத்தின் ஆற்றலுக்கு சமூகம் மதிப்பளிக்கவில்லை. அவர்கள் ஆற்றும் கடமைக்கேற்ற ஊதியமும், பதவி உயர்வும் வழங்கப்படவில்லை. சமூகத்திலிருந்து வேறுபடுத்தப்பட்ட அவர்கள் ஒரு இக்கட்டான நிலையில் உள்ளனர். அவர்களுடைய திறமை, அறிவு, ஊதியம் ஆகிய யாவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது" என இவர் தனது உரையில் தொடர்ந்தும் கூறினார்.

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை இல்லாதொழிப்பதாயின், சமூகத்தில் அவர்கள் சமமாக நடாத்தப்பட வேண்டும். காலத்துக்கு ஒவ்வாத மரபுவழிகளையும், நம்பிக்கைகளையும் நாம் மறந்துவிடவேண்டும். பெண்களால் ஆற்றமுடியாதது என்று ஒன்றுமில்லை. எங்கள் வழிகாட்டலில் பல தாக்குதல்களைப்போர்முனையில் நாம் நடாத்தியுள்ளோம்" எனவும் அவர் மேலும் கூறினார்.

கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளிடையே போர் புரிவதற்கான உற்சாகமும், மனோதிடமும் குறைந்து விட்டது. முற்றுகைக்கு உள்ளான குடாநாடு சம்பந்தமாக எதுவும் செய்யமுடி

யாத நிலையில் திரு. பிரபாகரன் அவர்கள் இருப்பதாலும் விடுதலைப்புலிகளிடையே கட்டுப்பாட்டு உணர்ச்சி சிதைவுற்றிருப்பதாலும், கரந்தடிப் போரில் ஈடுபடப்பணிக்கப்பட்ட கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகள் தோல்வியைச் சந்தித்தவேளையில் தங்கள் மாவட்ட தலைவர்களின் கண்டனத்திற்கு உள்ளானார்கள். தாக்குதல் நடவடிக்கைகளில் தோல்வியைத்தழுவியதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தலைவர் கருணாவும், அரசியல் தலைவர் கரிகாலனும் குழுத்தலைவர்களைக் கண்டித்துள்ளார்கள். கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளிடையே கட்டுப்பாடும் எச்சரிக்கையாகவிருப்பதும் வெகுவாகக்குறைந்து விட்டது. தாக்குதலை மேற்கொள்வதற்காகக் காப்புப்படையினர் மறைந்திருந்த போது அதை அறியாது அவர்கள் இருந்த இடத்திற்கே வந்த விடுதலைப்புலிகளின் தலைவர்களான இராஜேசும், சசிரூபனும் கொல்லப்பட்டது இதை எடுத்துக்காட்டுகின்றது.

---

*நன்றாக ஆளப்படும் ஒரு நாட்டில் வறுமை என்பது வெட்கப்படவேண்டிய விடயம். மோசமாக ஆளப்படுகிற நாட்டில் செல்வம் என்பது வெட்கப்பட வேண்டிய விடயம்*

*கன்ஃபூ சியசு*

# தெங்குப் பயிர்ச் செய்கையில் மேற்கொள்ளும் புதிய வழிமுறைகள் பயனளிக்கின்றன.

*- சுமித்த சில்வா -*

*(சண்டே ரைம்ஸ் - 11.4.1993)*

**2,300** *மில்லியன் தேங்காய்களை இலங்கை 1992-ம் ஆண்டில் உற்பத்திசெய்தது. 1991-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 2184 மில்லியன் தேங்காய்களுடன் ஒப்பிடுகையில் இது 5% விகிதம் கூடுதலாக இருந்த போதிலும், 1990 ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 2532 மில்லியன் தேங்காய்களை ஒப்பிடுகையில் இது 9% விகிதம் குறைவானதாகும்.*

*இந்த ஆண்டில் 3000 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்ய வேண்டுமெனப் பிரதம மந்திரியின் தலைமையிலான மந்திரிசபையில் சிறப்பு உபகுழு தீர்மானித்திருப்பதுடன், ஆண்டு தோறும் உற்பத்தியை அதிகரித்து இந்நூற்றாண்டு முடிவில் 4000 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்ய வேண்டுமெனவும் இக்குழு தீர்மானித்துள்ளது.*

*இக் குறிக்கோளை அடைவதாயின், தேங்காய் உற்பத்தியையே தங்கள் முக்கியமான தொழிலாகக் கொண்டவர்களைக் கூடுதலான விளைச்சலைப் பெற ஊக்குவிக்கத்தக்க வகையில் தேங்காய்க்குக் கூடுதலான விலை கொடுக்கப்பட வேண்டும் எனவும், இதைச் செய்வதற்கும், இத்தொழிலைக் காப்பதற்கும் சிறந்த ஒரே வழி தாவர நெய் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி தொடர்ந்தும் இருக்கவேண்டும் எனவும் இக்குழு கருதியது. புதிதாகத் தென்னங்கன்றுகளை நாட்டுதல், உரமிடுதல், நீரைப்பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்துதல், தேங்காய்களை உலர்த்தும் ஆலைகளை நவீனமயமாக்குதல் ஆகியவற்றிற்குக் கூடுதலான உதவியை வழங்க வேண்டுமெனவும் இக்குழு பரிந்துரை செய்துள்ளது.*

*ஆனால் மழைவீழ்ச்சியின் அளவிலேயே அதன் வளர்ச்சியும், பலாபலன்களும் பெரிதும் தங்கியிருப்பதால் தெங்குப் பயிர்ச் செய்கையில் ஏற்றமும் இறக்கமும் ஏற்படுவது தவிர்க்க முடியா*

ததாகின்றது. அரச நிறுவனங்களின் சகல திட்டங்களாலும் இவ்வித நிகழ்வுகள் ஏற்படுவதை தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை அண்மைக்காலத்தில் காணமுடிந்தது. இருப்பினும் அரசாங்கம் சரியான வழிமுறைகளைக் கையாண்டால், காலநிலையின் மாறுபாட்டால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம்.

தென்னை இலகுவாகவும், நன்றாகவும் வளரக்கூடிய மகாவலி பிராந்தியத்திலும், ஏனைய இடங்களிலும் தேங்காயின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டு சென்ற ஆண்டு நீண்ட காலத்திட்டங்கள் வகுக்கப்பட்டன.

உள்நாட்டின் தாவர நெய்த்தேவையை 1980 ஆம் ஆண்டின் இறுதிவரை தேங்காய் நெய்யே முழுமை செய்தது. அக்காலகட்ட முடிவில் ஏற்பட்ட பற்றாக்குறையை முழுமை செய்வதற்கு மாத்திரமே பாம் நெய் (Palm Oil) இறக்குமதி செய்யப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் 20,000 மெற்றிக் தொன்னாக இருந்த பாம் நெய்யின் இறக்குமதி 1992 ஆம் ஆண்டில் 40,000 மெற்றிக்தொன்னாக அதிகரித்திருப்பதுடன், தாவர நெய்யின் தேவையை முழுமை செய்வதற்கு இதன் இறக்குமதியை மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தது.

## சராசரி பயனீட்டளவு.

ஆண்டுக்கு 60,000 மெற்றிக்தொன் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள உண்ணத்தக்க நெய்யில் பெரும்பகுதி சவர்க்காரங்களையும், செயற்கை வெண்ணெய்யையும், உற்பத்தி செய்யவே பயன்படுத்தப்படுகின்றது.

உற்பத்தி செய்யப்பட்ட 2,300 மில்லியன் தேங்காய்களில் 1500 மில்லியன் தேங்காய்கள் அதாவது 68% விகிதமானவை வீட்டுப்பாவனைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 90 தேங்காய்களை இலங்கையிலுள்ள சராசரி ஒருவர் பயன்படுத்தியுள்ளதை இது எடுத்துக்காட்டுகின்றது.

அத்துடன் சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மிதித் தேங்காய்களில் 16% விகிதத்தை அல்லது 365 மில்லியன் தேங்காய்களை 53,100 மெற்றிக்தொன் உலர்ந்த தேங்காய்ப் பூவை உற்பத்தி செய்வதற்கும், 14% விகிதத்தை 40,000 மில்லியன் மெற்றிக்தொன் தேங்காய் நெய்யை உற்பத்தி செய்யவும், எஞ்சிய 2%விகிதத்தை கொப்பராவாகவும்,பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், உள்நாட்டில் விதையாகப்பயன்படுத்தவும் பட்டது.

சாதாரண உற்பத்தியான 2500 மில்லியன் தேங்காய்களைவிடக் குறைவானவற்றையே 1992 ஆம் ஆண்டில் பெறக் கூடியதாகவிருந்தது. தேங்காயைக் குறைவாக உற்பத்தி செய்யும் ஆண்டில் அதன் கூடுதலான பகுதி வீட்டுத்தேவைக்குப் பயன் படுத்தப்படுவதால், மற்றத்தேவைகளுக்குத் தேவையான தேங் காயின் அளவு குறைகின்றது.

மொத்த வியாபாரத்தில் ஒரு தேங்காயின் விலை சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டில் ரூபா 3/20 ஆக இருந்தபோது சென்ற ஆண்டில் அதன் விலை ரூபா 4/24 ஆக இருந்ததை ஒப் பிட்டு நோக்குகையில் 33 %விகிதத்தால் அதன் விலை அதிகரித் துள்ளதைக் காணமுடிகின்றது. ஒரு தேங்காயின் சராசரி விலை ரூபா 1/93 ஆக 1989 ல் இருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட தாவர நெய்க்கு கூடுதலான வரிகள் விதிக்கப்பட்டதன் மூலம் தெங்குத் தொழிலுக்குக் காப்பு வழங்கப்பட்டதே 1990 ஆம் ஆண்டிற்குப்பின்னர் தேங்காயின் விலை அதிகரித்ததற்குக் காரணமாகவிருந்தது.

1992 ஆம் ஆண்டின் நாலாவது காலாண்டுப் பகுதியான ஆகஸ்ட் திங்களில் ரூபா 4/25 ஆக இருந்த தேங்காய் ஒன்றின் மொத்த வியாபார விலை டிசம்பர் திங்களில் ரூபா 4/80 ஆக அதிகரித்தது. இதன் காரணமாக டிசம்பர் திங்களில் ஒரு தேங் காயின் சில்லறை விலை ரூபா 5/லிருந்து ரூபா 7/50 வரை அதிகரித்தது. பருவகாலத்தில் கிடைக்கும் தேங்காயின் அளவில் மாற்றம் ஏற்படுவதால் ஒரு ஆண்டின் நாலாவது காலாண்டுப் பகுதியில் தேங்காயின் விலை அதிகரிப்பது தெங்குத்தொழிலில் பொதுவான ஒரு நியதியாகிவிட்ட போதிலும், 1992 ஆம் ஆண் டைப்போல் தேங்காயின் சில்லறை விலை முன்னொரு பொழு தும் அதிகரிக்கவில்லை.

1991ம் ஆண்டில் ரூபா 31,123/- ஆக இருந்த ஒரு மெற் றிக் தொன் தேங்காய் நெய்யின் விலை, 1992 ஆம் ஆண்டில் ரூபா 41,234/- ஆக அதிகரித்ததன் மூலம் தேங்காய் நெய்யின் விலை சென்ற ஆண்டு 33% விகிதத்தால் அதிகரித்தது. இந்த விலை அதிகரிப்பிற்கு முன் கூறப்பட்ட காப்பே காரணமாகவிருந் தது. இதனால் அனைத்துலகச் சந்தையிலுள்ள விலையிலும் பார்க்க உள்ளூர் விலை கூடுதலாகவிருந்தது. இதன் காரணமாக அனைத்துலக ரீதியில் போட்டியிடும் ஆற்றலை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் நெய் இழந்தது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# கொப்பராத் தேங்காயின் ஏற்றுமதி

1992 ஆம் ஆண்டின் தேங்காய் நெய்யின் விலை உள்நாட்டில் அதிகரித்துவந்த அதேவேளை, பல்தேசிய சந்தையில் சனவரித் திங்களில் ஒரு மெற்றிக் தொன் 738 அமெரிக்க டொலர்களாகவிருந்த அதன் விலை டிசம்பர்த் திங்களில் 461அமெரிக்க டொலர்களாகக் குறைந்தது.

1992 ஆம் ஆண்டுக்கு முந்திய ஆண்டைவிட 1992 ஆம் ஆண்டில் உலர்ந்த தேங்காய்ப்பூவின்விலை 36% விகிதத்தாலும், கொப்பரைத் தேங்காயின் விலை 22-33% விகிதத்தாலும் அதிகரித்ததற்கு தேங்காயின் விலை அதிகரித்தமையே காரணமாகும்.

1992 ஆம் ஆண்டில் தேங்காய் அல்லாத மற்றைய தெங்குப் பொருட்களும் விலை மாற்றங்களுக்கு உள்ளாயின. மெத்தை செய்வதற்கு உபயோகிக்கப்படும் தும்பு, கபிறு போன்றவற்றைத் தயாரிக்கப்பயன்படும் முறுக்கியதும்பு, தரைமிதி போன்றவற்றிற்கு உபயோகிக்கப்படும் தும்பு முதலியவற்றின் விலையும் அதிகரித்தது. சிரட்டைக்கரியின் விலையேற்றமும் மற்றைய பொருட்களின் விலையேற்றத்துடன் ஒப்பிடக்கூடியதாக இருந்தபோதும், பகுப்படுத்தப்பட்ட கரியத்தின் விலை 1992 ஆம் ஆண்டில் 4% விகிதத்தாலேயே அதிகரித்தது.

மண்நிறமுள்ள தும்பை மிகப்பெரியளவில் ஏற்றுமதி செய்யும் நாடான இலங்கை, 1992 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்த 64,247 மெற்றிக்தொன் நிறையுள்ள தும்பு, நூல், கயிறு ஆகியன முன்னைய ஆண்டில் ஏற்றுமதி செய்ததைவிட 2% விகிதத்தை மாத்திரமே கூடுதலாக ஏற்றுமதி செய்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. இப்பொருட்களின் ஏற்றுமதியில் பெறப்பட்ட வருமானமான 761 மில்லியன் ரூபாய்கள், 1992 ஆம் ஆண்டில் தெங்குப்பொருட்களை ஏற்றுமதி செய்து பெறப்பட்ட வருமானத்தில் 17% விகிதமாகும். மூடை மூடையாகக் கட்டப்பட்ட மெத்தைக்கான தும்பு, மற்றும் கயிறு செய்ய உபயோகிக்கும் முறுக்கிய தும்பு ஆகியவற்றின் ஏற்றுமதி மூலமே 60% விகித வருமானத்தைப் பெறமுடிந்தது.

23,819 மெற்றிக் தொன் நிறையான சிரட்டைப்பொருட்களை 1992 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்ததன் மூலம் தெங்குப்பொருட்களின் ஏற்றுமதியில் பெற்ற வருவாயில் 17 % விகிதமான 784 மில்லியன் ரூபாய்களை நாடு வருமானமாகப் பெற்றது. இதுகாறும் பெற்ற வருமானத்தைவிட ஆகக் கூடுதலான வருமானமான 4584 மில்லியன் ரூபாய்களைத் தெங்குப்பொருட்கள் மூலம் 1992 ஆம் ஆண்டில் பெறமுடிந்தது. தோட்டப் பயிர்களின் ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருவாயில் இரண்டாவது கூடுதலான வருவாயைப் பெற்றுத்தந்து இறப்பரிலும் பார்க்க இவ்வருவாய் கூடுதலாக உள்ளது.

தெங்குப்பயிர்ச் செய்கையில் உரமிடுவதை ஊக்குவிக்கும் முகமாக மானியம் வழங்குவதைவிடத் தெங்குப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உகந்தவிலையைக் கொடுப்பது கூடுதலான பலனைத்தரும என்பதை 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலை உயர்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

புகைக்கூண்டை சுத்தம் செய்யப் போகிறவன் வெற்றி பெற்றானா, தோல்வியடைந்தானா என்பதை விட நிச்சயமானது, அவன் கரிபூசப்படுவான் என்பதே.

-கோரேசு

# கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும் தெற்குப் பிராந்தியத்தில் புதிய போர்கள் ஆரம்பிக்க இருக்கின்றனவா ?

*கலாநிதி சந்திரா முசாவார்*

*(ஐலண்ட் - 17.4.93*

அங்கோலாவில் நடைபெற்ற தேர்தலைப்பற்றியும், அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கும் கிளர்ச்சியாளர்களுடைய படைக்கும் இடையே மீண்டும் நடைபெறும் சண்டைகளைப் பற்றியுமே அண்மைக்காலங்களில் வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நீண்டகாலமாக அங்கோலாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு முக்கியமான காரணமாக கெடுபிடிப் போரே விளங்கியது என்பதை அகில உலகிலுமுள்ள தொடர்பு சாதனங்கள் அறிவிக்கத் தவறிவிட்டன.

இக்கெடுபிடிப் போர் காரணமாக ஆபிரிக்காவிலுள்ள அங்கோலா மாத்திரம் சிதைவுறவில்லை. மொசாம்பிக், சூடான், எதியோப்பியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளும் இதற்குப் பலியாகி இன்னல்களை அனுபவித்துவரும் மற்றைய நாடுகளாகும். தங்கள் கெடுபிடிப் போரைத் தொடர்வதற்கு இந்த நாடுகளையும், மற்றைய நாடுகளையும் வல்லரசுகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டன.

இதனால் இந்நாடுகள் பெரும் விலையைக் கொடுக்கவேண்டியதாகவிருந்தது. உள்நாடுகளில் இடம்பெற்ற அச்சம் தரும் போர் காரணமாகவும், இனங்களுக்குள் ஏற்பட்ட போர் காரணமாகவும், பூர்வீகக் குடிமக்களிடையே ஏற்பட்ட போர் காரணமாகவும் பல மில்லியன் கணக்கான ஆபிரிக்க மக்கள் இறந்துள்ளனர். பெறுமதி மிக்க பயிர்களும், கால்நடைகளும் அழிக்கப்பட்டன. கிராமங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. அப்பகுதியிலுள்ள நிலப்பரப்புக்கள் பயன்தராதவாறு பாழாக்கப்பட்டன.

வல்லரசுகளின் ஒவ்வொரு செயற்பாடும் இறுதியில் வன் செயலைத் தோற்றுவிக்கக் கூடியவகையிலேயே இக்கெடுபிடிப் போரின் போது அமைந்திருந்தது. முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கு அல்லது கம்யூனிச அணிக்கு ஒரு அரசாங்கம் ஆதரவு அளிக்கின்றது என அமெரிக்காவிற்குத் தோன்றினால், அது அந்த நாட்டில் உள்ளதும் அந்த அரசுக்கு எதிரானதுமான ஒரு குழுவுக்கு அல்லது அந்த அரசாங்கத்தின் அயல்நாட்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க ஆரம்பித்துவிடும்.

சிலவேளை அந்த அரசாங்கம் கம்யூனிச அணியின் பக்கம் சாராது தான் சுதந்திரமாக இருப்பதையே நோக்கமாகக் கொண்டு அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியத்திடமிருந்து விலகி நின்றிருக்கலாம். இந்த நாட்டின் விடயங்களில் மறைமுகமாகத் தலையிடுவதற்கு அமெரிக்காவிற்கு இது ஒன்றே போதுமான காரணமாக இருந்தது. அமெரிக்காவின் இராசாங்க அமைச்சராகவிருந்த காலஞ்சென்ற திரு.யோன் வொஸ்ரர் டல்லஸ் அவர்களின் காலத்திற்குப் பின்னர் அணிசேராமை என்பதற்கு மறுபக்கத்தைச் சார்ந்திருத்தல் என்றே விளக்கம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. பல இடங்களிலும் அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் தமது கையாட்கள் மூலம் இங்கு தலையிட்டுள்ளன. அதன் விளைவாக அப்பகுதிமக்கள் பெரும்அழிவுகளைச் சந்தித்தனர்.

கெடுபிடிப் போர் தற்பொழுது முடிவுற்றதனால், இதைப் போன்ற நிகழ்வுகள் இனிமேல் நடைபெறாது என வாதிப்பாருமுளர். ஆனால் சிறிதளவு உண்மையே இதில் உண்டு.

## முட்டாள்த்தனம்.

தனது சித்தாந்தத்தைப் பரப்பவேண்டுமென்ற முட்டாள்த்தனமான அவாவும், பாரிய படை பலமும் கொண்டிருந்த சோவியத் ஒன்றியம் தனக்குப் பதிலாகப் போரை நடாத்துபவர்களைத் தேடும் நிலையில் இப்பொழுது இல்லை. ஆனால் மற்றைய வல்லரசான அமெரிக்கா படையரீதியாக முன்னர் எப்படி ஆற்றல் வாய்ந்ததாகவிருந்ததோ, அதேபோல் இப்பொழுதும் இருக்கின்றது. 20 ஆம் நூற்றாண்டின் ஒரே ஏதேச்சாதிகார நாடாக விளங்குவதாகத் திரு. ஆணல் ரொயின்பீ அவர்களால் வர்ணிக்கப்பட்ட அமெரிக்கா கெடுபிடிப்போரின் மூலகாரணமான உலகின் மீது கட்டளையிடவும், வழிநடாத்தவும், தனது மேலாண்மையைச் செலுத்தவும் நாட்டம் கொண்

டுள்ளது. அமெரிக்காவின் மேலாண்மையைச் சில நாடுகள் சோவியத் ஒன்றியத்தின் உதவியுடன் சிலசந்தர்ப்பங்களில் எதிர்த்ததன் காரணமாகவும், சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவின் மேலாண்மைக்குச் சவாலாக இருந்ததன் காரணமாகவும் உலகில் தென்பாகத்திலுள்ள பல நாடுகளில் ஆயுதப் போராட்டங்கள் தோன்றின.

கெடுபிடிப்போர் முடிவுற்ற பின்னரும் தனது மேலாண்மையை மற்றையநாடுகள் மீது செலுத்த வேண்டும் என்று அமெரிக்கா விரும்பும். உலக வரலாற்றில் மற்ற நாடுகளைச் சுறையாடித்தன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிவரும் அமெரிக்கா, மற்ற நாடுகளின் இயற்கை வளங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பும். தொழில் மயமாக்குவதற்கு உயிர்நாடியாக விளங்கும் உலகிலுள்ள நிலநெய்யைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்த என்னதான் விளைவுகள் ஏற்படினும் அவற்றைப் பொருட்படுத்தாது போரில் ஈடுபட இந்த நாடு விரும்பும் என எதிர்பார்க்கலாம். கெடுபிடிப் போரின் பின், இயற்கை வளத்திற்காக வளைகுடாவில் 1991 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட முதலாவது போர், இக்கருத்தை உறுதிசெய்துள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் பொருளாதார ஆயுத உற்பத்தியிலும், அதன் விற்பனையிலுமே பெரிதும் தங்கியுள்ளது. அமெரிக்க அரசு வழங்கும் வேலைகளில் 20% விகிதமானவை ஏதோ ஒருவிதத்தில் காப்புடன் சம்பந்தப்பட்டுள்ளது. மற்ற நாடுகளுக்கு ஆயுத விற்பனையை மேற்கொள்வதற்கு பல வழிமுறைகளைக் கையாள அமெரிக்கா ஏன் முயல்கின்றது என்பதை இது விளக்குகின்றது. ஆயுத விற்பனைகள், படைக்கலன்களின் பராமரிப்புத் திட்டங்கள், ஆயுதங்களைப் பற்றிய ஆராய்ச்சி ஆகியவற்றை இந்த நாடு தொடர்ந்தும் மேற்கொள்வதை நியாயப்படுத்துவதற்கு ஆயுதப் பூசல்கள் இடம்பெறவேண்டும். அவ்விதம் அவை நடைபெறாவிட்டால் அவற்றைத் தோற்றுவிக்க வேண்டும்.

தெற்குலக நாடுகளில் புதிய போர்கள் தோன்றுவதற்கு மூன்றாவது காரணமும் உண்டு. அகில உலகப் பொருளாதாரத்தில் முக்கியமான இடத்தை அமெரிக்கா வகித்தபோதிலும், ஜேர்மனி மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் சவாலை எதிர்

கொள்ள முடியாத நிலையில் அது உள்ளது போலத் தோன்று கின்றது. இந்த இரு நாடுகளின் பொருளாதார எழுச்சி, அமெ ரிக்காவையும் அதைச்சார்ந்த நாடுகளையும் ஒரு அணியாகவும், ஜேர்மனியையும், ஐரோப்பிய நாடுகளையும் இரண்டாவது அணி யாகவும், யப்பானையும், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை மூன்றாவது அணியாகவும் கொண்ட மும்முனையி லான ஒரு பொருளாதார அணியை அகில உலகிலும் தோற்று விக்கும், பொருளாதாரத்தில் மற்றைய இரு பிராந்தியங்களி லுள்ள பெரிய நாடுகளுடன் அமெரிக்காவால் போட்டியிட இய லாவிடின், அது மேற்கொள்ளக் கூடிய பல முட்டாள்த்தன மான நடவடிக்கைகள் இறுதியில் அகில உலகிலும் பூசல்களை உருவாக்கத் தக்கவையாயிருக்கும்.

இதேவேளை, அமெரிக்கா, ஜேர்மன், யப்பான் போன்ற நாடுகள் தங்கள் பொருளாதார நலனில் ஒரு நாட்டை மற்ற நாடு சார்ந்திருப்பதை ஒருவர் கருத்தில் கொள்ளவேண்டும். நேர டியாக இந்நாடுகள் ஆயுதப்பூசல்களில் ஈடுபடுவதை இந்த நலன்கள் தடைசெய்யக்கூடும். இருப்பினும் இந்த நாடுகள் தங் களுக்கிடையேயுள்ள பகைமையை தெற்கிலுள்ள நாடுகள் மீது திருப்பிவிடக்கூடும். தெற்கிலுள்ள நாடுகள் மீண்டும் இம்மூன்று நாடுகளாலும் சதுரங்கக் காய்களாக பயன்படுத்தப்படுவர்.

பொருளாதார வலுவைப்பெற உலகிலுள்ள நாடுகள் போட்டியிடுவது ஒரு புறமிருக்க, இனரீதியானதும் மதம் சம் பந்தமானதுமான பூசல்கள் முன்னரைவிட அடிக்கடியும், தீவிர மாகவும் கெடுபிடிப்போரின் பின் இடம்பெற இடமுண்டு. இதற் கான அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன. மறைந்தி ருந்த பழைய பகைமைகள் மீண்டும் தோன்றி எண்ணிப்பார்க்க முடியாத அழிவுகளை மனித குலத்திற்கு ஏற்படுத்துகின்றன என்பதை சீர்குலைக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்திலும் சிதை வுற்ற யூகோசிலோவியாவிலும் இடம்பெறும் சம்பவங்கள் எடுத் துக்காட்டுகின்றன.

# கிட்டு எனும் ஓவியர்

(ராணி 18-04-93)

கிட்டு ஓர் ஓவியக் கலைஞனாகவும் வளர்ந்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைத் தனது நாட்டிலிருந்து வெளி யேற்றியபோது, அவர் மறைவாகப் பல நாடுகளில் இருந்த காலம், அவரது கலை உணர்வுகளுக்கு உரம் ஊட்டும் சந்தர்ப் பத்தை அளித்தது எனலாம். கலைச் செயற்பாடுகளில் ஈடுபட அக்காலம் அவனுக்கு ஓரளவு ஓய்வு கொடுத்திருக்கலாம். இயற் கையாக மிக நுணுக்கமான உணர்வுத்தன்மை உடையவர் என்பதை அவருடன் நெருங்குவோர் உடனே புரிந்து கொள்வர். இயற்கையின் அழகை ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இசையில் ஆழமான ரசனை உடையவர். புகைப்படக் கலையில், ஒரு விற்பன்னனைப் போல் செயற்படும் திறனும், அது குறித்த அறிவும் பெற்றிருந்தார். மேலும், நூல்கள், பிரசுரங்கள். சுவரொட்டிகள் ஆகியவற்றை வடிவமைப்பதில் அவருக்கிருந்த கலாரசனை, வாசகர்களின் மனோவியல் பற்றிய அறிவு, நிறத் தெரிவு ஆகியவை அவரின் தனித்தன்மையான அம்சங்கள். இத்தகைய மனத்தளத்திலேயே அவரது ஓவியக் கோபுரம் கட்டி வளர்க்கப்பட்டு வந்தது. மெக்சிக்கோ நாட்டு ஓவியர் ஒருவரிடம் சிறிதுகாலம் முறையாக ஓவியக் கலையைப் பயின்றார். அவ்வோவியனின் பாதிப்பு இவரது ஓவியங்களில் இருந்ததாக எண்ணுகின்றேன். கிட்டு இந்தியாவில் இருந்தபோது, சாளி என்ற இளம் ஓவியனுக்கு ஓர் ஓவிய அறையை ஒதுக்கி ஊக்கப்படுத்தி வந்தார். நான் சென்னை சென்றபோது, சாளியை ஓவியர் சந்தானத்திடம் அறிமுகம் செய்து, பயிலுமாறு செய்தேன். அக்காலத்தில் கிட்டு நவீன ஓவியம் குறித்து கருத்து முரண் பட்டவராக இருந்தார். ஆனால், ஐரோப்பாவில் இருந்த காலத்தில், பிக்காசோவின் ஓவியங்கள் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். ''சவ அறை'' என்ற பிக்காசோவின் ஓவியத்தின் சாயல் அவரது ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்ந்தேன். தனது ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும், அவ்வெளிப்பாட்டிற்கு குறியீடுகளைக் கையாள்வதிலும், தனது கற்பனைகளை உயர உயரப் பறக்கவிட் டுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். ஒரு சித்திரம், ஒரு விடுதலை வீரனின் மரணம், ஏராளம் வித்துக்களைப் பிரசவிப்பதாக

அமைந்துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்ப்பெடுக்கும் பல்வேறு வகை மரஞ்செடி, கொடிகளிலும் அவர் ஆறாத அன்பு கொண்டிருந்தார். அவை அங்கு தனது நாட்டில் பரப்பப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வமாய் இருந்தார். சில ஓவியங்கள் மரபுரீதியாகவும், யதார்த்தமாகவும் அமைந்துள்ளன. ஆயினும், அவற்றிலும் சில அம்சங்களில் பண்புத் தன்மையைக் (Abstract) கலந்துள்ளார்.

வான்கோவின் தாக்கத்தை, ஒரு சில ஓவியங்களிற் காணலாம். தனது கருத்தை ஓவியத்தின் மூலம் தீவிரமாக வெளிப்படுத்துதல் என்பதோடு, அதற்கு மேலதிக அழுத்தம் கொடுப்பதாக, தீவிர நிறச்சேர்க்கையையும், தூரிகை வீச்சையும் கையாள முயன்றுள்ளார். நிறப்பொருத்தம் என்ற விடயத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார். ஆனால் நிறங்களைக் கையாளும் விடயத்தில் அனுபவக் குறைவு காரணமாக, நிற அழுக்கு ஏற்படுவதாக விமர்சனத்துக்கும் உட்பட்டுள்ளார். நிறக் கலவைகளைப் பயன்படுத்துவதில், நீர், எண்ணை நிறங்களை விட அக்கிறிலிக் என்ற நிறக்கலவையையே பெரிதும் பயன்படுத்தி வந்தார். அதன் மீது மினுக்க எண்ணையை தடவிவிடுவார். உடல் உறுப்புக்களை (Anatomy) அதன் அசைவுகளை நுணுக்கமாக வரைதல் என்ற விடயத்தில், இன்னும் ஏராளம் படிக்க வேண்டியிருந்தது. ஆயினும், ஒரு முறை என்னுடன் தொலைபேசியில் பேசும்போது வேடிக்கையாக அவர் கேட்டார். ''இனிமேல் எண்ணை ஓவியர் கிட்டு என்று அழைக்கலாமோ?'' என்று. ''நிச்சயமாக'' என்று தெரிவித்தேன்.

உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்பது முக்கியமானது அல்ல. உங்களுக்கு தெரிந்ததைக் கொண்டு எவ்வளவு செய்து முடித்தீர்கள் என்பதுதான் முக்கியம்.

கோரி மேடாக்க

# நான் மறுபடியும் பிறந்தால் ...

சுபமங்களா (ஏப்ரல்-1993)

*பிடல் காஸ்ட்ரோ, தோமஸ் போர்ஹே — கலந்துரையாடல்*

நிகரகுவாவின் அமைச்சராக 11 ஆண்டுகளிலிருந்த தோமஸ் போர்ஹே ஸான்டினிஸ்டா கெரில்லா தலைவராக இருந்த வேளை 1978-இல் பிடல் காஸ்ட்ரோவை முதன் முதலில் சந்தித்தார். 14ஆண்டுகளுக்குப்பின் மறுபடியும் அவர் பிடல் காஸ்ட்ரோவைச் சந்திப்பதற்காக கியூபாத் தலைநகர் ஹவானாவுக்கு வந்திருந்தார்.

மூன்று நாட்களில் 12 மணி நேரம் பல்வேறு விசயங்கள் குறித்து நண்பர்கள் உரையாடினார்கள்.

அந்த உரையாடலின் விளைவான பேட்டி இது. உலகெங்கும் தேச விடுதலைக்குப் போராடும் புரட்சியாளர்களுக்கு உத்வேக மூட்டும் பேட்டி இது.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த 500 ஆண்டு விழாக் கொண்டாட்டங்களை நிராகரிக்கிறார்கள், இலத்தீன் அமெரிக்கப் புரட்சியாளர்கள். இப்பொழுதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடை முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் நாடுகள் கியூபா, வியட்நாம், வட கொரியா, தற்பொழுது ஈராக் போன்றவை.

நெருக்கடியான காலகட்டத்தினூடே தனது பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் பிடலுக்கு உலகெங்குமுள்ள மூன்றாம் உலக இடதுசாரிகளும் ஐரோப்பிய இடதுசாரிகளும் தார்மீக ஆதரவை வழங்குகிறார்கள்.

ஐந்நூறு ஆண்டுகள் எதிர்ப்பியக்கம் தற்பொழுது ஐரோப்பிய நாடுகளிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இடதுசாரி வட்டாரங்களிலும் மிகவேகமாக நடந்து விடுகிறது.

ஐந்நூறு ஆண்டுகள் எதிர்ப்பியக்கத்தினை நினைவுகொள்ள இம்முக்கியமான பேட்டியைத் தமிழில் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**யமுனா ராஜேந்திரன்**

**கேள்வி:-** சமீபத்தில் நீங்கள் சோவியத் யூனியன் பற்றிப் பேசும்போது அந்தநாடு முதுகில் குத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

அதன் மரணத்துக்கு கோர்பச்சேவ் போன்றவர்களும் சதி செய்தார்கள் என்று சொல்லுகிறீர்களா?

**பதில்:-** இல்லை கோர்பச்சேவை நான் அந்த மாதிரி சொல்ல மாட்டேன்.

சோவியத் யூனியனில் நடந்ததென்னவெனில் கொடுமையான தன்னழிப்பு. சந்தேகமில்லாமல் இந்தத் தன்னழிவுக்கு அந்த நாட்டின் தலைவர்கள்தான் பொறுப்பானவர்கள். சிலர் தன்பிரக்ஞையற்று அதனைச் செய்தார்கள். நிச்சயமாக கோர்பச்சேவ் பிரக்ஞை பூர்வமாக இந்த அழிவைச் செய்தார் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனெனில் கோர்பச்சேவ் சோஷலிசத்தை நெறிப்படுத்துவதில்தான் நோக்கம் கொண்டிருந்தார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

சோவியத் யூனியன் தன்னளவில் தன்னழிவினாலேயே சிதறடிக்கப்படாமல் இருந்திருந்தால் ஒருபோதும் ஏகாதிபத்தியம் அதனை சிதறடிப்பதற்கான வலிமை கொண்டிருக்க முடியாது.

நான் சொல்வது இதுதான்: சோசலிசம் இயல்பில் சாகவே சாகாது. சோஷலிஸம் கொலை செய்யப்பட்டிக்கிறது. இதைத்தான் நான் சொல்கிறேன்.

**கேள்வி:-** பெரும்பாலான இலத்தின் அமெரிக்க புரட்சித் தலைவர்களுக்கு சோஷலிஸத்தின் இந்தச் சமகால நெருக்கடிக்கு அறிவுபூர்வமான காரணகர்த்தா ஸ்டாலின் தான் என்றுபடுகிறது.....

**பதில்:-** ஸ்டாலின் மிகப்பெரும் தவறுகளைச் செய்தார். அதே சமயத்தில் மிகப்பெரும் வெற்றிகளையும் சாதித்தார் என்று நான் நம்புகிறேன்.

வரலாற்று ரீதியில் சோவியத் யூனியனில் நடந்த இந்தப் பிரச்சினைக்கு (Phenomena) ஸ்டாலின் தான் காரணம் என்று முழுக்கவும் அவர் மீது குற்றம் சாட்டுவது பிரச்சினையை மிக எளிமைப்படுத்துவதாகும். ஏனெனில் ஒரு மனிதன் தானே தன்னளவில் இந்த மாதிரிச் சூழ்நிலையை உருவாக்க முடியாது.

ஸ்டாலின் பற்றி நிறையப் பிரச்சினைகளில் நான் விமர்சன ரீதியாக இருக்கிறேன். ஸ்டாலின் மிக அதிகமாக பதவித் துஷ்பிரயோகம் செய்தார் என்று நான் நம்புகிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் வன்முறை மூலம் நிலத்தை சமூக மயப்படுத்த நடந்த முயற்சி மிக மோசமானது. மானுட மதிப்பீடுகள் மற்றும் பொருளாதார அடிப்படையில் மிகமிக அதீதமானது.

ஹிட்லர் ஒரு மிருகபலம் பொருந்தியவனாக வரும்வரை, மேற்கத்திய அதிகாரங்கள் அவனை வளர்த்தது என்பது உண்மையில் மறுக்க முடியாதது. ஹிட்லர் நிஜத்தில் ஒரு ஆபத்து.

ஹிட்லரின்பாலான அசாதாரணமான மேற்கத்திய அதிகாரங்களின் பலவீனத்தை மறுக்க முடியாது. இதுதான் ஹிட்லரின் நாடு பிடித்தலையும் விஸ்தரிப்பையும் ஸ்டாலினின் பயத்தையும் தூண்டியது...

இதன் தொடர்பாக, ஸ்டாலின் எடுத்த நிலைப்பாட்டை நான் என் வாழ்நாள் முழுவதும் விமர்சித்து வருகிறேன்.

காலத்தைக் கடத்துவதற்காக எந்த விலைகொடுத்தும் ஹிட்லரோடு சமாதான உடன்படிக்கைக்குப் போனது உண்மையிலேயே மிக அப்பட்டமான கொள்கை மீறலாகும். இலட்சியங்களை விட்டுக் கொடுத்தலாகும்.

நாங்கள் எமது நீண்ட புரட்சிகர வாழ்வில், ஒப்பீட்டளவில் கியூபாப் புரட்சியின் நீண்ட வரலாற்றில், காலத்தை நீடிப்பதற்காக எங்களின் ஒரேயொரு கொள்கையைக் கூட விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. எந்த நடைமுறை ஆதாயத்துக்காகவும் நாங்கள் விட்டுக்கொடுக்க ஒப்பவில்லை.

அதிகம் பேசப்படும் மாலட்டோவ்-ரிப்பன் டிரோப் (Molotov -Ribbentrop Pact) ஒப்பந்தத்தில் அவர் கையொப்பமிட்டார்.

அந்த அனாக்கிரமிப்பு (non-aggression) ஒப்பந்தம் அவருக்கு கால அவகாசம் தருவதைவிட்டு காலத்தைக் குறைத்தது; ஏனெனில் அது நிச்சயமாக யுத்தத்தைத் தொடக்கி வைத்து விட்டது.

பின்லாந்து மீதான அந்தச் சிறுயுத்தமும் ஒரு மிகப் பெரிய தவறு. கொள்கை ரீதியிலும் சர்வதேசிய உறவுகளின் அடிப்படையிலும் அது மிகப்பெரிய தவறு.

வெற்றிகரமான தவறுகளையும் (Successive mistakes) அவர் செய்தார். உலகின் பெருமபாலான அபிப்பிராயம் சோவியத் யூனியன்பால் விரோதபூர்வமாக ஆகும் அளவு வெற்றிகரமான தவறுகளைச் செய்தார். சோவியத் யூனியனின் நல்ல நண்பர்களாக உலகெங்கும் இருந்த கம்யூனிஸ்டுகளை இக்கட்டில் சிக்க வைத்தார். அந்தச் சம்பவ காலங்களில் எல்லாம் இவைகளையெல்லாம் சிக்க வைத்துவிட்டார்.

இறுதியாக ஸ்டாலினின் குணாம்சம் (Character) எல்லாவற்றையும் சந்தேகிக்கும் அவர் கொடுஞ் சந்தேகக்குணம், அவரை பிறமோசமான தவறுகளைச் செய்ய இட்டுச் சென்றது. அந்தத் தவறுகளிலொன்று, ஜெர்மனியர்களின் சூழ்ச்சி வலையில் விழுந்தது. மிகக் கொடுமையான முறையில் சோவியத் ராணுவம் இரத்தத்தில் மூழ்க வேண்டியிருந்தது. நடைமுறை யுத்தத்தில் சோவியத் ராணுவத்தை கையாலாகாதாக்கியிருந்தது.

கேள்வி:- உங்கள் அபிப்பிராயத்தில் ஸ்டாலினின் சாதனைகள் தான் என்ன?

பதில்:- சோவியத் யூனியனின் ஒற்றுமையை நிலை நாட்டியது. லெனின் தொடங்கி வைத்த கட்சியை ஒற்றுமைப் படுத்தும் பணியை ஸ்தூலமாக்கி நிலை நாட்டியது. சர்வதேசிய புரட்சிகர இயக்கத்துக்கு உத்வேகத்தைத் தந்தார்.

சோஷலிஸத்தை தொழில் மயப்படுத்தியது ஸ்டாலினின் மிகப்பெரிய சாதனை.

நான் நினைக்கிறேன், யுத்தம் ஆரம்பமானவுடன் அவர் சோவியத் யூனியனை நன்கு தலைமை தாங்கினார். இவை அனைவராலும் அங்கீகரிக்கப்படுபவை ஆகும்.

கேள்வி:- இப்போது ஜனநாயகம் பற்றி அதிகமாகப் பேசக் கேட்கிறோம். இடதுசாரிகளின் வட்டாரங்கள் உட்பட ஜனநாயகம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. உங்களின் பார்வையில் ஜனநாயகம் என்பது என்ன?

பதில்:- இங்கே பார் தோமஸ்! மிகச் சுருக்கமான வார்த்தைகளில் ஜனநாயகம் என்பது லிங்கன் சொன்னபடி மக்களின் அரசு, மக்களால் ஆளப்படும் மக்களுக்கான அரசு.

என்னளவில் ஜனநாயகம் என்பது குடிமகனின் அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பதாகும். அந்த உரிமைகளில் சுதந்திரமாயிருப்பதற்கான உரிமை, தன் சார்பு உரிமை, தேசிய பெருமித உரிமை, பரஸ்பர மரியாதைக்கான உரிமை ஆகியன அடங்கும். என்னளவில் ஜனநாயகம் என்பது மனிதர்க்கிடையில் சகோதரத்துவம், நேசம்.

நான் சொல்வேன், முதலாளித்துவ ஜனநாயகம் இந்த எந்த உரிமைகளையும் கொண்டிருக்கவில்லை. மிகச் சிலர் அதிகமான வாய்ப்புக்களோடும் மிகப்பெரும்பாலோர் ஏதுமற்றும் இருக்கின்ற இந்த நாடுகளில், ஒருவர் எவ்வாறு ஜனநாயகம் இருக்கிறது என்று பேசுகிறார் என்று நான் ஆச்சரியம் கொள்கிறேன். என்ன மாதிரியான சகோதரத்துவம் அல்லது சமத்துவம் ஒரு கோடீஸ்வரனுக்கும் ஒரு பிச்சைக்காரனுக்கும் இடையில் நிலவ முடியும்?

எமது சமூக அமைப்பு ஒப்பீட்டளவில் எந்த அமைப்பைவிடவும் ஜனநாயகத்தன்மை வாய்ந்தது என்று நான் நினைக்கிறேன். ஒப்பிட்டுப் பார்க்கவே தேவையற்று, அமெரிக்க நாட்டை விடவும் எமது அமைப்பு மிகமிக ஜனநாயக ரீதியானது ஆகும்.

கேள்வி:- கியூபாப் புரட்சியின் அடிப்படை உயிர் வாழ்வுக்காக பொருளாதாரத் தளத்தில் நடந்து கொண்டிருக்கும் சாராம்சமான போராட்டம் பற்றி நான் இப்போது பேசவிரும்புகிறேன். உடனடியான உங்கள் இலக்கு என்ன?

நீண்ட நோக்கில் உங்கள் இலட்சியம் என்ன?

பதில்:- *1989-ல் ஜூலை 26-ஆம் ஆண்டு விழாவில் (மன்காடா கொத்தளத்தைத் தகர்த்த நாள், ஒரு புரட்சிகர தேசிய விடுதலை நாள்) காமாகுவாவில் (Camaguey) நான் சொன்ன விசயங்கள் மிகப்பல செவிகளுக்கு விநோத மாகக் கேட்கிறது.*

*போராடுவதற்கான எமது தயார்நிலை பற்றிப் பேசியது ஆச்சரியமாகப்படுகிறது.*

*அப்போது பேசிய அந்த வார்த்தைகள் இதோ:*

*"எப்போதைக் காட்டிலும் இப்போது நாங்கள் யதார்த் தமாக இருக்கிறோம். நாங்கள் ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை செய்கிறோம். சோஷலிச சமூகக் கூட்டமைப் பில் (சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் — மொழிபெயர்ப்பாளர்) ஒரு முறிவு ஏற்பட் டால் எமது புரட்சி தொடராது என்ற பிரமை களை வளர்ப்போருக்கு நாங்கள் எச்சரிக்கை செய்கி றோம்.*

*ஏனெனில் நாளை அல்லது ஏதோ ஒரு நாளில் சோவியத் யூனியனில் மிகப்பெரிய உள்நாட்டு கொந்தளிப்பு ஏற் பட்டு அந்த நாடு சிதறிப் போகும் — அது ஒருபோதும் நடக்காது என்று நாங்கள் நம்புகிறோம் — சந்தர்ப் பத்தில் கூட கியூபாப்புரட்சி கியூபா மக்கள் போராட் டத்தைத் தொடர்வர். எதிர்ப்பைத் தொடர்வர்.*

*கவனி தோமஸ்! இவைகளை நான் சோவியத் யூனியன் சிதறிப் போவதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன் சொன்னேன்.*

*ஆமாம். வளர்ச்சிக்கான அனைத்துத் திட்டங்களும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.*

*தோமஸ்! நாங்கள் இப்போது அந்த நெருக்கடிக்கால கட்டத்தின் மத்தியில்தான் இருக்கிறோம்.*

*மிகுந்த மனவருத்தத்துடன் நாங்கள் இப்போது முன் னுரிமைகளை உருவாக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக் கிறோம். மிகமுன்னேயே நாங்கள் 'அசாதாரண கால கட்டத்தை'க் (Special period) கொண்டுவர நிர்ப்பந் திக்கப்பட்டிருக்கிறோம். சமாதான காலத்திலேயே அதைக் கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.*

அசாதாரண காலகட்டத் திட்டத்தை நாங்கள் முன்னமேயே வகுத்து வைத்திருந்தோம். முழுமையான கடல் போக்குவரத்து முற்றுகை (Naval Blockade)] ஏற்படுமானால் அதை எதிர்கொள்வதற்கான திட்டம். ஆனால் இப்போது கடல் போக்குவரத்து முற்றுகை இல்லாமலேயே 'அசாதாரண காலகட்டத்தைக்' கொண்டுவர வேண்டியதாகிவிட்டது. எங்கள் மூலவளங்கள் (Resources) மிக அசாதாரணமான முறையில் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது.

சரியாகச் சொல்ல வேண்டுமானல் எமக்குத் தேவையான எரிபொருளில் 50% சதத்துடன் நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம். எமது நாட்டுக்குத் தேவையான இறக்குமதியில் 40% சதவீதமான பொருட்களோடுதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களது இலக்கு என்ன? இந்த 'அசாதாரண காலகட்டம்' எதிர்த்து நிற்பதற்கு மட்டுமல்ல. எங்கள் வளர்ச்சிக்கும்தான்.

அத்தியாவசியத் தேவையற்ற உற்பத்தி அனைத்தும் வீழும். நடைமுறையில் எமது சமூகக மேம்பாட்டுத் திட்டங்களைக்கூட செயலற்றதாக்க வேண்டிவரும். எங்கள் கட்டட நிர்மாணத் திட்டங்கள், வீட்டு வசதித் திட்டங்கள், குழந்தைப் பராமரிப்பு இல்லங்களுக்கான திட்டங்கள், சிறப்புப் பாடசாலைத் திட்டங்கள், தொழில்நுட்பப் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக வசதித்திட்டங்களை நலியவிட வேண்டும்.

முன்னுரிமையான திட்டங்களை சமூகத்தில் முழு வளர்ச்சியோடு சம்பந்தமானவற்றுக்கு விடவேண்டும். உதாரணமாக உயிர் தொழில்நுட்பம் (Biotechnology) மருந்துத் தொழிற்சாலை, மருத்துவக் கல்வித் தொழிற்சாலை , சுற்றுலாத் திட்டங்கள், உணவு உற்பத்தித் திட்டங்கள் போன்றவைகள் முதலிடத்தை எடுத்துக் கொள்ளும். விஞ்ஞானத் திட்டங்களும் முழு வளர்ச்சியோடு தொடரும்.

ஆகவே எங்கள் சாராம்சமான கேள்வி என்பது அடிப்படை வாழ்வு மட்டுமல்ல, அதோடு மேல்நோக்கி வளர்ச்சியடைவது.

எங்கள் அத்தனை துன்பங்களுக்குஇடையிலும் வளர்ச்சியடைவது.

கேள்வி:- சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடும் புரட்சிக்கு எதிரானவர்கள் மீது 'துப்பாக்கிப்படை'யின் (Firing Squad) தண்டனைகளை கியூபா வழங்காமல் இருந்தால் நல்லது, என்று பலர் சொல்கிறார்...

பதில்:- எவரும் கொலைத் தண்டனையை விரும்பமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் அறிவேன் கியூபாவின் நண்பர்கள் உட்பட பலர் என்னிடமும் இது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் சொல்ல விரும்புவது இதுதான், நடைமுறையிலிருக்கும் சட்டங்களின் படிதான் மிகக் கடுமையான குற்றங்களின் பின்னணியில் மரணதண்டனை செயற்படுத்தப்படுகிறது.

உலக அளவில் மரணதண்டனை ஒழிக்கப்படும் என்று ஒப்பந்தம் ஏற்படுமானால் நாங்களும் அதை ஒழிக்க ஒப்புக் கொள்வோம்.

ஒரு தலைப்பட்சமாக நாங்கள் மரணதண்டனையை ஒழிக்க ஒப்புக்கொள்ள முடியாது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொடர்ந்த பயமுறுத்தல் மற்றும் ஆத்திரமூட்டலுக்கெதிரான வாழ்வா சாவா -எனும் அடிப்படையில், அடிப்படை வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாங்கள் ஒருதலைப்பட்சமாக மரணதண்டனையை ஒழிக்க ஒப்புக் கொள்ளமுடியாது.

கேள்வி:- அமெரிக்காவைக் 'கண்டுபிடித்தார்கள்' (Discovering America) என்று சொல்லிக்கொண்டு நடந்து கொண்டிருக்கும் விழாக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- 'இரண்டு கலாசாரங்கள் சந்திக்கின்றன' என்று சாதுரியமாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சொற்றொடர் எனக்கு ஒருபோதும் சரி என்று படவில்லை. உண்மையில் இது ஒரு கலாசாரத்தின் மீது மற்றொரு கலாசாரத்தின் திணிப்பு. பிறமக்களின் மீது மிக முன்னேறிய ராணுவ தொழில்நுட்பத்தை வைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வன்முறையாளர்கள் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த அடக்குமுறை இது.

இரண்டு கலாசாரங்களின் மாபெரும் இணைப்பின் 500 ஆண்டுகள் என்று பிதற்றுகிறார்கள். எந்த ஒரு தனி நாட்டின் மீதும் வெறுப்புற்று இவைகளை நான் சொல்லவில்லை. மிக நேர்மையாக நான் சொல்கிறேன். நிறவெறி பீடித்த ஐரோப்பியர்களால் அல்ல ஸ்பானிஷ்காரர்களால் கியூபா காலனியாக்கப்பட்டது. அந்தக் காலனியாக்கத்தின் தவிர்க்கவியலாத கலவையாகத்தான் வெல்லமுடியாத இன்றைய எம்மக்கள் உருவாகியிருக்கிறார்கள்.

கேள்வி:- அரசியல் தலைவர்கள் 60 வயதில் ஓய்வுபெற்று விட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- பிரச்சினை சாதாரணமாக ஓய்வுபெறுதல்என்பது அல்ல, ஓய்வு பெறுவதற்கான சாத்தியம். அதுதான் பிரச்சினை இரண்டும் வேறு வேறு விசயங்கள். முழுக்க முழுக்க நேர்மையாகச் சொல்கிறேன். எனது இலக்குகளை பிறர் நிறைவேற்றுவார்களானால் நான் ஓய்வு பெறவே விரும்புகிறேன். எனது சொந்தத் திருப்திக்காக எனது வேலையை நான் செய்யவில்லை.

எனது கடமையாகச் செய்கிறேன். நான் அதை மகிழ்ச்சியாகச் செய்கிறேன்.

எனது தோழர்கள் எதுவரை இந்த யுத்த களத்தில் நான் தேவை என்று நினைக்கிறார்களோ அதுவரை நான் களத்தில் இருப்பேன். அரசியலில் ஈடுபடும் உரிமைகளை வயதானவர்கள் என்பதற்காக மறுக்கக் கூடாது என்று நான் நினைக்கிறேன்.

என் வாழ்வில் முதன் முறையாக இப்போதுதான் நான் என்னை வயதானவன் என்று அழைத்துக்கொள்கிறேன். என்று நினைக்கிறேன்.

கேள்வி:- நான் கேள்விப்பட்டிருக்கிறேன் நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள் - நீங்கள் தீவிரமான அசைக்க முடியாத படிப்பாளி என்று.

பதில்:- ஆமாம் தோமஸ்!

என்வாழ்நாளில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு புத்தகங்களை நான் படிக்கிறேன். படிப்பதற்கு இன்னும் அதிக நேரம் கிடைக்கவில்லையே என்றுதான் எனக்கு

மனது வலிக்கிறது. எல்லாவகையான இலக்கியங் களையும் நான் படிக்கிறேன். எனது காப்பியங்களில் (Classics) பைபிளும் அடங்கும். எனது வார்த்தைப் பிரயோகங்களை அலசுகிற எவரும் பல பைபிள் வார்த்தைகளைக் கண்டு பிடிக்க முடியும். நான் 12 வருடங்கள் மத பாடசாலைகளில் பயின்றேன். லாசல்லி (Lasalle) சகோதரர்களுடன், அதிகமான ரோமன் கத் தோலிக்கப் பாதிரிகளுடன் பயின்றேன். எனக்குப் படிக்க அதிக நேரம் கிடைத்தது, நான் சிறையில் கழித்த 1953 மற்றும் 1955 ஆகிய இரண்டு வருடங்கள்தான் நான் எப்போதும் படித்துக் கொண்டிருக்கிறேன். உதாரணமாக பொலிவர் (Bolivar) சம்பந்தமாக மிகப் பெரிய புத்தகத் தொகுதிகளைச் சேர்த்திருக்கிறேன். நான் பொலிவர் மீது எல்லையற்ற ஈர்ப்பு கொண்டி ருக்கிறேன். மார்ட்சையை அந்த அளவு நான் சொல்ல மாட்டேன். என்னை Sectarian என்றும் பிறர் சொல் லக்கூடும். ஆனால் மார்ட்சையைப் போன்ற அறிவார்ந்த ஆழமானவர் அவரில்லை என்று நினைக்கிறேன். நேற் றிரவு பாட்ரிக்சிற் (Patrick suckind) எழுதிய நறுமணம் Perfume) குறுநாவல் படித்துக் கொண்டிருந்தேன். தனி நபர் நட்பு அல்லாது கேபிரியல் கார்ஸியா மார்க்யூ ஸின் அனைத்துப் புத்தகங்களையும் நான் பார்த்திருக் கிறேன்.

கேள்வி:- நீங்கள் உங்கள் விருப்பமான எழுத்தாளர் என்று நேர்ந்தால் யாரைச் சொல்வீர்கள்?

பதில்:- செர்வாண்டிஸ்

கேள்வி:- எந்தத் தயக்கமுமின்றித்தான் இதைச் சொல்கிறீர்களா?

பதில்:- எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை. அதன் கருத்துக்காக அதன் உள்ளடக்க அழகுக்காக டான் குவிக்ஸாட்டை குறைந்த பட்சம் ஐந்து ஆறு முறை படித்திருக்கிறேன்.

கேள்வி:- கவிஞர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள் பிடல்?

பதில்:- நெருடாவை நான் மிக விரும்புகிறேன் என்று சொல்ல வேண்டும். அவர் கவிதைகள்தான் நான் அதிகம் படித்த கவிதைகள். ஆயினும் நான் நிக்கலஸ் கில்ல னுக்கு முன்னுரிமை தருவேன்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** நீங்கள் பாடுவீர்களா?

**பதில்:-** இசைக்காக தீவிரமான செவிகளை நான் கொண்டிருக்கிறேன். பாட விரும்புகிறேன். ஆனால் அதிகத் திறமை இல்லை.

**கேள்வி:-** குளிக்கும் போது ஷவரின் கீழ்கூட பாடமாட்டீர்களா?

**பதில்:-** ஊஹூம் ஷவருக்குக் கீழ் குளிரில் நடுங்குவேன். எனக்கு இசை மிகப் பிடிக்கும். குறிப்பாக புரட்சிகரப் பாடல்கள் எனக்கு சாஸ்திரீய ஸங்கீதம் பிடிக்கும். ஆயினும் அணிவகுப்புப் பாடல்களுக்கு மனதைப் பறிகொடுப்பேன்.

**கேள்வி:-** நீங்கள் வாழ்வில் செய்தவை எவற்றுக்காவது வருத்தப்பட்டது உண்டா?

**பதில்:-** நாங்கள் தந்திரோபாயத் தவறுகள் (Tactical Mistakes) செய்திருக்கிறோம். அவற்றுக்கு நான் வருத்தப்பட முடியும். ஆனால் ஒன்றில் தெளிவான சிந்தனையோடு இருக்கிறேன்.

புரட்சி முழுவதிலும் நாங்கள் எப்போதும் இலட்சியங்களை மீறியது என்கிற தவறு செய்யவே இல்லை.

நான் மறுபடியும் பிறப்பேனேயாகின்

மறுபடியும்

இதே புரட்சிகரப் பாதையையே தேர்ந்தெடுப்பேன்.

*நன்றி: கார்டியன், லண்டன்*

---

*பணக்காரனாக ஆக முயற்சி எடுத்துக் கொள்வதைக் காட்டிலும், எப்படி வாழவேண்டும் என்பதைத் தெரித்து கொள்வது நல்லது*

*-நார்மன் வின்ஸெஸ்ட்பீல்.*

# தவறாக வழிநடத்தப்படும் யாழ்ப்பாணத்திற்கான உணவு வழங்கல்

(ஐலண்ட் - 25-4-93)

யாழ்ப்பாண மக்களின் உணவுக்காக 1992 ஆம் ஆண்டின் முதல் பத்து திங்களில் 1,419 பில்லியன் ரூபாய்களைச் செலவு செய்த அரசாங்கம், அப்பொருட்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்காக இன்னுமொரு பில்லியன் ரூபாயை செலவு செய்துள்ளது. பொருட்களை இறக்குவதற்காகத் துறைக்கு அப்பால் கப்பல்கள் காத்து நிற்பதனாலேயே இந்தப் பாரிய செலவினம் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் பொருட்களை இறக்கும் பணி தாமதமடைவதன் காரணமாக இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் கப்பல்கள் முழுமையாக உபயோகிக்கப்படாது வெறுமனே காத்திருப்பதால், யாழ்ப்பாணத்திற்கு உணவு வழங்கல் மேற்கொள்வதற்கு நூற்றுக்கணக்கான மில்லியன் ரூபாய்களை அரசாங்கம் வீணே செலவு செய்யவேண்டியுள்ளது.

குடாநாட்டிற்கான தரைப்பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளதாலும், காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து வெளியே செல்லும் பாதைகள் யாவும் விடுதலைப்புலிகளால் மூடப்பட்டுள்ளதாலும், அந்தத் துறைமுகத்தை உபயோகிக்க முடியாததால், பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ள பருத்தித் துறையைப் பயன்படுத்த அத்தியாவசியச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

## கப்பல் சரக்கு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பருத்தித் துறைக்கு அப்பாலுள்ள நடுக்கடலில் கப்பலிலுள்ள பொருள்கள் இழுவைப்படகுகளுக்குள் ஏற்றப்பட வேண்டியிருப்பதுடன், அப்படகுகள் பல மைல்களுக்கு அப்பாலுள்ள கரைக்குப் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டியுமுள்ளது. காங்கேசன்துறை

யைப் போல் பருத்தித்துறையும் ஒரு துறைமுகமாக இல்லாதன் காரணமாகக் கப்பல்கள் கரைக்கு அண்மையாகச் செல்ல இயலாதிருக்கின்றன.

பொருட்களைக் கொழும்பிலிருந்து ஏற்றிவரும் கப்பல்கள் மூன்றும் மிகவும் பெரிதானவையாக இருப்பதாலும், ஒரு கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதற்குக் குறைந்தது ஒரு வாரம் எடுப்பதாலும், பருத்தித்துறையில் பல கப்பல்கள் நிரையாகக் காத்து நிற்கவேண்டியுள்ளது. உதாரணமாக - ''கோமாரி'' (Mercs Komari) என்ற சரக்குக் கப்பலிலிருந்து கோதுமை மாவை மார்ச் திங்கள் 3 ஆம் நாள் இறக்குவதற்கு ஆரம்பித்தபோதிலும் மார்ச் திங்கள் 9 ஆம் நாள் வரை அடுத்த கப்பலான குமணவிலிருந்து (Mercs Kumana) பொருட்களை இறக்கமுடியவில்லை. மார்ச் திங்கள் 17 ஆம் நாள் வரை பொருட்களை இறக்கும் பணியை அடுத்த கப்பலான ''வாதுவை''யிலிருந்து (Wadduwa) ஆரம்பிக்க இயலாதிருந்ததுடன், மார்ச் திங்கள் 30 ஆம் நாள் வரையிலேயே அடுத்த கப்பலிருந்து பொருட்களை இறக்கும் பணியை ஆரம்பிக்க முடிந்தது.

இப்படியான பெரிய கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவது பாரிய செலவினத்தை ஏற்படுத்தும். ஒவ்வொன்றும் தலா 3200 தொன் எடையுள்ள சரக்குகளை ஏற்றக்கூடிய கோமாரி மற்றும் குமண ஆகிய கப்பல்களின் (குமண என்ற கப்பல் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தபோதிலும், அத்தியாவசியச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் உபயோகத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது.) பாவனைக்கு நாளொன்றுக்கு 3000 அமெரிக்கடொலர்களைச் செலவு செய்யவேண்டியிருப்பதுடன், அவற்றுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் அவற்றை இயக்குவதற்கு மேலதிகமாக 2000 டொலர்களை நாளொன்றுக்குச் செலவிடவேண்டியுள்ளது. சென்ற திங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டதும் 4000 தொன் எடையுள்ள பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடியதும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் யாவற்றிலும் பெரிதானதுமான ''வாதுவை'' என்ற கப்பலின் செலவினம் மற்றைய கப்பல்களுக்கு ஏற்பட்ட செலவினத்தைவிட கூடுதலானது என வடமாகாணத்திற்குப் பொறுப்பாகவுள்ள மேலதிக அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகமான எயர் கொமடோர் புத்தி சிறீவர்த்தனா அவர்கள் கூறுகின்றார்.

பருத்தித்துறைக்கு அப்பாலுள்ள கடலில் பெரிய கப்பல் களிலிருந்து பொருட்களை இறக்குவதற்குத் தாமதம் ஏற்பட்ட தால் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 850,000 மக்களுடைய தேவைக்காகக் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்கள் பழுதடைந்த பல சந்தர்ப்பங்களும் உண்டு. நடுக்கடலில் கப்பல் களிலிருந்து பொருட்களை இழுவைப்படகுகளுக்குள் ஏற்றுவது மிகவும் கடினமான பணியாகவிருப்பதுடன், சிறிய கப்பல்களி லிருந்து இறக்குவதைவிட, பெரிய கப்பல்களிருந்து இறக்குவது அதிக நேரத்தை எடுக்கின்றது. "சில வேளைகளில் நாளொன் றுக்கு 500 தொன் எடையுள்ள பொருட்களை இறக்கிக் கடுமை யாக எம்மக்கள் உழைத்தபோதிலும், பொருட்களை இறக்குவ தற்காகப் பல கப்பல்களைக் காக்கவைக்கவேண்டியுள்ளது" என எயர்கொமடோர் சிறிவர்த்தனா அவர்கள் கூறுகின்றார்.

சென்ற ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உணவுப் பற்றாக் குறை நிலவியபோது "வாதுவை" என்ற கப்பலை வாடகைக்கு அமர்த்தியதன் மூலம் அத்தியாவசியச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் இச்சிக்கலை ஓரளவு தீர்த்துள்ளார். யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் கணிப்பின்படி யாழ்ப்பாணத்திற்கு திங்கள் ஒன்றிற்குத் தேவையான 10,000 தொன் உணவுப் பொருட்கள் அண்மைக்காலங்களில் வழங்கப்பட்டுள்ளன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப் பட்ட போதிலும், இவற்றை மலிவாகக் கொள்வனவு செய்வ தற்காகச் சாவுக்கும் அஞ்சாமல் ஏழைமக்கள் யாழ்ப்பாண ஏரி யைக்கடந்து கிளிநொச்சி அல்லது வவுனியாவிற்குச் செல்வதாக நாளாந்த அறிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது.

30 வாகனங்களைக் கொண்ட ஒரு அணியை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கிளிநொச்சிக்கும் வேறொரு அணியை முல்லைத்தீவுக்கும் அனைத்துலக நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுப்பிவருகின்றார். மன்னார் பிரதான நிலப்பரப்பில் வசிக்கும் மக்களுக்கு வழங்குவதற்காக இன்னுமொரு அணி ஐக்கிய நாடுகள் சபையின் மனித நேயதுயர்துடைப்பு ஸ்தாபனத்தின் (UNHCR) உதவியுடன் மடுவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

"நிலப்பரப்பிலுள்ள பாதைகள் திறந்திருந்தபோது திறமை யாக உணவு வழங்கலை மேற்கொண்டதுபோல், 100 கப்பல்களை உபயோகித்தாலும் யாழ்ப்பாணத்திற்கான உணவு வழங்கலை கடல் மார்க்கமாகத் திறமையாக நடாத்த முடியாது" என

94679

அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகமான திரு.கிறிஸ்தி சில்வா அவர்கள் கூறியுள்ளார். ''தரைமூலமான பாதை இல்லாததனால் கிளிநொச்சிக்கு செல்லும் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப்புலிகளைச் சம்மதிக்கவைக்க நாங்கள் முயல்கின்றோம்'' எனவும் இவர் கூறியுள்ளார்.

ஆனையிறவு மற்றும் பூநகரிக் கூடாகச் செல்லும் பாதைகளே இந்த இரண்டு தரைப்பாதைகளாகும், இப்பகுதிகளிலிருந்து படையத்தை விலக்கிக் கொள்ளும் வரை இந்தப்பாதைகளூடாக பொருட்களை எடுத்துச் செல்வதை விடுதலைப்புலிகள் ஒப்பவில்லை.

''விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் காங்கேசன் துறையிலிருந்து செல்லும் பாதையை மீண்டும் திறப்பதற்கு நாங்கள் விரும்புகின்றோம்'' எனக்கூட்டுப்படைத்தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நாளின் அங்க மன்ன அவர்கள் கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும், காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து செல்லும்பாதைகளை மீண்டும் திறந்தாலும், உணவு வழங்கலுக்காக உபயோகிக்கப்படும் மூன்று கப்பல்களும் மிகவும் பெரியவையாக இருப்பதால் இவை எதுவும் துறைமுகத்திற்குள் செல்லமுடியாது. இக்கப்பல்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதே உண்மையாகும்.

1800 தொன் எடையுள்ள பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடியதும், நாளொன்றுக்கு 2300 அமெரிக்க டொலர் செலவிடவேண்டியதுமான எம். வி. மிரினால் M. V. Mrinal என்ற கப்பலும், மண்ணெய்யை மட்டும் ஏற்றிச்செல்வதற்காகப் பயன்படுத்தப்படுவதும், நாளொன்றுக்கு 5200 அமெரிக்க டொலர் செலவிட வேண்டியதுமான 'நில்கிரி' Nilgiri என்ற கப்பலுமே இந்தப் பணிக்காக உபயோகிக்கப்படும் மற்றைய கப்பல்களாகும். ''திங்களொன்றுக்கு 5000 பீப்பாய் மண்ணெய்யை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்கம் எங்களைப்பணித்துள்ளதால் 'நில்கிரி'யை வாடகைக்கு அமர்த்தியுள்ளோம்'' என எயர் கொமடோர் சிறிவர்த்தனா அவர்கள் கூறியுள்ளார். 'எங்களைப் பொறுத்த மட்டில் செலவைப்பற்றி நாம் அக்கறை கொள்ளவில்லை. பொருட்களை அங்கு கொண்டுசெல்வதே எங்கள் குறிக்கோளாகும்'' எனவும் அவர் கூறியுள்ளார்.

''எங்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி சிறிதளவு வெற்றியைக் கொடுத்துள்ளது. 200 - ரூபாயாகவிருந்த ஒரு லீற்றர் மண்ணெய்யின் விலை 100/- ரூபாவாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண மக்கள் ஓரளவு மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்'' என இவர் மேலும் கூறியுள்ளார்.

## அரசாங்கம்

இருப்பினும், உணவு வழங்கல் அரசாங்கத்திற்கு மிகவும் கூடுதலான செலவினத்தை ஏற்படுத்திவருகின்றது. மண்ணெய் கொண்டுவரப்படும் கொள்கலன்களைத் திருப்பிப் பெறமுடியாதிருப்பதாலும், அவற்றை விடுதலைப்புலிகள் உபயோகிப்பதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும் அரசாங்கம் அவற்றை அரைக்கலன்களாகவெட்டுகின்றது. இந்த அரைக் கலன்களைத் தண்ணீர் சேமித்து வைப்பதற்காக யாழ்ப்பாண மக்கள் பயன்படுத்துவதாக அறியமுடிகின்றது.

பருத்தித்துறைக்கு அண்மையாக 'நில்கிரி' என்ற கப்பல் செல்ல முடியாததனால், கடலுக்குள் போடப்படும் கொள்கலன்கள் பின்னர் கரைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றன.

பருத்தித்துறையில் பொருட்களை இறக்குவது பெரிய சிக்கலாகவுள்ளது. கொழும்பிலிருந்து வருவதற்கு 2 நாட்களுக்கும் குறைவான நாட்களை எடுக்கும் ஒரு கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதற்கு இருவாரங்கள் இக்கப்பல் தரித்து நிற்க வேண்டியுள்ளது. பெரும் பாரமான அரிசிமூடைகளையும், மா மூடைகளையும் கப்பலிலிருந்து இழுவைப்படகுகளுக்குள் ஏற்றுவது சுலபமான காரியமல்ல. காலநிலையும் இதைத் தீர்மானிக்கும் ஒரு அம்சமாகும். காலநிலை சரியில்லாவிடில் ஒருவேலையும் நடைபெறாது. கடல் நீரால் உணவுப் பொருட்கள் பழுதடையக்கூடிய அபாயமும் உண்டு. வடகீழ் பருவக்காற்றும் இந்த நடவடிக்கைக்கு இடையூறாகவிருக்கின்றது.

பருத்தித்துறையிலுள்ள இரு இழுவைப்படகுகளும் 100 தொன் எடையுள்ள பொருட்களை மாத்திரம் ஏற்றிச் செல்லக் கூடியனவாக இருப்பதுடன், இவற்றை மற்றக் கலன்களாலேயே கரைக்கு இழுத்துச் செல்லவேண்டியுள்ளது. பொருட்களை நடுக்கடலில் மாற்றுவதற்குப் பாரம் தூக்கிகள் இல்லாததனால் கையினாலேயே அவை இறக்கப்படுகின்றன. சரக்குகளைச் சேமித்து வைப்பதற்கான வசதிகள் அவ்விடத்தில் இல்லாததனால் நேராகவே அவை வண்டிகளுக்குள் ஏற்றப்படுகின்றன.

இரவு நேரம் மேலும் கூடுதலான சிக்கல்களை உருவாக்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றியுள்ள நீர்ப் பரப்பு தடைசெய்யப்பட்ட பிரதேசம் ஆகையாலும், மாலை 5 மணிக்கு கப்பலின் வேலைகள் நிறுத்தப்படுவதாலும், அதில் பணியாற்றுபவர்கள் காங்கேசன்துறைக்குச் சென்று மறுநாள் காலை வரை துறைமுகத்திற்கு வெளியே தங்கள் இரவைக் கழித்தபின் மறுநாட்காலை பருத்தித்துறை திரும்பியதும் காலை 7.30 மணியிலிருந்து இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

பருத்தித்துறையைப் போலல்லாது, காங்கேசன்துறை, பொருட்களை இறக்குவதற்கு நல்ல சூழலைக் கொண்டுள்ளது. கரையில் பாரம்தூக்கிகள் இருப்பதுடன், ஒரே நேரத்தில் இரண்டு கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான குதங்களும் அங்கே உண்டு. காங்கேசன்துறை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி ஆகையால், கையாடலைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவதுடன், விரயமாகும் செலவினத்தையும் வெகுவாகக் குறைக்கமுடியும்.

இருப்பினும், காங்கேசன்துறைக்கான பாதை இந்தத்திங்கள் திறந்துவிடப்படும் என்ற நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கையின் பேரில் காங்கேசன்துறையிலுள்ள குதங்களுக்கு அனுப்பப்பட்ட 2000 தொன் எடையுள்ள அரிசியும், மாவும் பழுதடைய ஆரம்பித்துள்ளதாகவும், அவை அங்கிருந்து அகற்றப்படுவதாகவும், கூறப்படுகின்றது.

வடக்குக்கு அனுப்பப்படும் பொருட்கள் யாவும் உணவுப் பொருட்கள் மாத்திரம் அல்ல. அரிசி, மா, பருப்பு, சீனி, தேயிலை மற்றும் சீரகம், மல்லி போன்ற சரக்கு வகைகளுடன், சவர்க்காரம் தேங்காய், தீப்பெட்டி, தேங்காய்நெய் அப்பியாசக் கொப்பிகள், உரம், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மருந்து வகைகளும் அங்கு அனுப்பப்படுகின்றன.

## ‘சந்தேகத்துக்கிடமான கப்பல்கள்’

அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கான சேவையில் கடந்த காலத்தில் சில சந்தேகத்துக்கிடமான கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அப்பாலுள்ளதும், அரசாங்கத்தின் கட்டு பாட்டில் உள்ளதுமான தீவுகளுக்குப்

பொருட்களை விநியோகம் செய்த கப்பலான 'தாரா' (Tara) பல சிக்கல்களைச் சந்தித்தபின் கடலில் செல்வதற்கு உகந்த தில்லை எனக்கருதப்பட்டு தற்பொழுது திருக்கோணமலையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

தீவுகளில் வசிக்கும் 10,000 மக்களுக்கு உணவு வழங்கல் மேற்கொள்ளும் முக்கிய பணிக்கு "தாரா" என்ற கலனை உப யோகித்தது விசித்திரமானதாகும். 500 தொன் எடையுள்ள பொருட்களை அது ஏற்றிச் செல்லக்கூடியது எனக்கருதப்பட்ட போதிலும், அதன் உருவமைப்பு காரணமாக அவ்வளவு எடை யுள்ள பொருட்களை அது ஏற்றிச் செல்லக்கூடியதாக இருக்க வில்லை.

அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் ஈடுபடுத்தியபின் கொழும்பு துறைமுகத்தில் சென்ற டிசம்பர் திங் களில் மூழ்கிய கப்பலான எம்.வி பாரசு சி.எச் (MV'PharesCH' மற்றைய ஒரு புதிரான கலனாகும்.

தனக்குத் தேவையான கலன்களை இலங்கை கப்பல் கூட் டுத்தாபனத்தின் ஊடாக வாடகைக்கு அமர்த்தும் அத்தியாவ சிய சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஈடுபடுத்தப்பட்ட எம்.வி. 'ரைபான்' (MV Taipan) என்ற கப்பலும் கொழும்பில் 1991 ஆம் ஆண்டில் மூழ்கும் தறுவாயிலிருந்தது.

மன்னார்த் தீவுக்கும், கல்பிட்டிக்குமிடையே பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகச் சென்ற மாதம் வாடகைக்கு அமர்த் தப்பட்ட ஓ. எம். எஸ்-1 (OMS-1) என்ற படகு ஒரு சில பய ணங்களையே செய்துமுடித்துள்ளது. இந்தப்படகைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நாளொன்றுக்கு 750 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றது. அடுத்த திங்கள் தென்மேற்குப் பருவக்காற்று ஆரம்பமாகும் பொழுது இப்படகைச் சேவையில் ஈடுபடுத்தமுடி யுமா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் பிரதான நிலப்பரப்புக் குச் செல்வதற்கு உபயோகிக்கக்கூடிய படகுகளில் எம.வி "நிக்கு றோமா" (MV Ngroma) வும் ஒன்றாகும். ஒவ்வொரு திங்கட் கிழமை இரவுகளிலும் இப்படகு 145 பிரயாணிகளுடன் திருக் கோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்கின்றது

நாளொன்றுக்கு 1750 அமெரிக்க டொலர்கள் இதற்குச் செலவு செய்யப்படுகின்றது. தனக்கெனச் சொந்தமாக ஒரு படகைக் கொள்வனவு செய்து காலகதியில் பெரும் இலாபத்தைப் பெறக் கூடிய அரசாங்கம் ஏன் அதைச் செய்யாதிருக்கின்றது என்பது சந்தேகத்தை எழுப்புகின்றது.

## ஊழல்

துன்புறும் மக்களின் துயர்துடைக்க மேற்கொள்ளும் பணிகள் கூட சில சந்தர்ப்பங்களில் ஊழலால் பாழடிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட பல பில்லியன் பெறுமதியான பொருட்கள் மாயமாக மறைந்த அதிர்ச்சி தரும் செய்தியை ஒரு திங்களுக்கு முன் அத்தியாவசிய சேவைகள் செயலாளர் நாயகம் வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பிலிருந்து அனுப்பப்படும் வழங்கல் பொருட்களை யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அனுப்பப்பட்ட தொகையைவிட மிகவும் குறைவான பொருட்களையே பெற்றுள்ளார். இடையில் ஏதோ ஒரு இடத்தில் வைத்து யாரோ ஒருவர் இப்படியான கையாடலைச் செய்துள்ளார். இந்தக் கையாடல் ''கொழும்பில் நடைபெற்றதா அல்லது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதா அல்லது இந்தப் பொருட்கள் அம்பாந்தோட்டையில் இறக்கப்பட்டதா அல்லது வழியில் வேறொரு இடத்தில் இறக்கப்பட்டதா என்பது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது'' என அத்தியாவசியச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிமனையில் கடமையாற்றும் மேலாளர் ஒருவர் கூறினார்.

தற்போது, புதுமுறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பொருட்களை நிறுத்துப் பார்ப்பதற்குத் தராசும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கப்பலிலும் அரசாங்க அதிபர் ஏறி அவற்றிலுள்ள பொருட்களைச் சரிபார்த்து கையொப்பம் இடுகின்றார்.

காணாமல் போன பொருட்களைப் பற்றி விசாரணையை மேற்கொள்ள புலனாய்வுத் துறையினர் அதேவேளை அழைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையின் கிழக்குமாகாணத்தில் கதிரவன் மறைந்ததும் ...

-ஏ. எம். மாக்கான் மரிக்கார்

(ஐலண்ட் - 25-4-93)

கதிரவன் மறைந்ததும் அமைதியிழந்து பீதிக்குள்ளாகும் சம்பிகா வீரசிங்கா, இரவு முழுவதும் ஏக்கத்துடனேயே உறக்க மின்றித் தனது காலத்தைக் கழிப்பார். இந்த 21 வயதான பெண் வாழும் சிற்றூரில் படைய பாசறை ஒன்று இருந்தபோதி லும், அவர் நிம்மதியாக உறங்குவதற்கு அது உதவுவதாகஇல்லை. பொழுது எப்போது புலரும் என்பதிலேயே அவர் கருத்தாக விருப்பார்.

சூரியன் உதிக்கும் முன், தனது சிற்றூரின் மேல் பறந்து செல்லும் பறவைகள் ஒலியெழுப்பத் தொடங்கியதும் தனது கண் களை மூடி உறங்குவதற்கான மனோதிடத்தை இவர் பெறுவார். மூன்று அறைகளைக் கொண்ட சிறிய வீட்டில் தனது தாயார், சகோதரி, மற்றும் மருமகள் ஆகியோருடன் வசித்துவரும் சம் பிகா, தனது குடும்பத்திலுள்ள ஏனையோர் விழித்தெழும் வேளையில், உறங்குவதற்குச் செல்வார்.

இளைய மகளான சம்பிகா 'கடந்த இரண்டு திங்களாக வீட்டில் உறங்குவதையிட்டு 50 வயதான அவரின் தாயார் பபி காமினி மகிழ்வுற்றார். முன்பு கதிரவன் மறைவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் தனது இரவு உணவை உண்ணும் சம்பிகா, தனது இரவு நேரத்தைக் கழிப்பதற்காக கல்பிற்றிக் கலையிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு நடந்து செல்வார்.

மரத்தாலான செயற்கைப் பாதத்தைத் தனது இடது காலில் பொருத்தியுள்ள சம்பிகா, இந்தப் பயணம் மிகவும் வேதனை நிறைந்த ஒன்றாகவிருந்தது எனக்கூறுகின்றார். கல் பிற்றிக்கலையில் உறங்கிய பொழுது தனது செயற்கைப் பாதத் தைக் கழற்றி வைத்துவிட்டு உறங்குவதில் தனது காப்புக்கு ஆபத்து ஏதும் இருந்ததாக இவர் உணரவில்லை. ஆனால் இப்

பொழுது அந்த நிலையில்லை. இரவில் தனது செயற்கைப் பாதத்தைத் தான் அகற்றுவதில்லையெனவும், இதனால் ஏற்படும் உறுத்தலும், தான் துயில் கொள்ளாதிருப்பதற்கு மற்றொரு காரணம் எனவும் இவர் கூறுகின்றார். "அது இல்லாது தன்னால் ஓடமுடியாதெனவும், ஓடுவதற்குத் தான் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்" எனவும் கூறும் இவர், இதன் காரணமாகவே தான் அதை அகற்றிவைப்பதற்கு விரும்பவில்லை எனவும் கூறுகின்றார். காலைப்பொழுது புலர ஆரம்பித்தவுடனேயே அவரது செயற்கைப் பாதம் அகற்றப்பட்டு அவர் நிம்மதியாக உறங்கக்கூடிய வசதி ஏற்படுகின்றது.

விடுதலைப்புலிகள் இரவில் தாக்கக்கூடும் என அவர் கவலைப்படுகின்றார். கல்லோயாத் திட்டத்திலுள்ள குடியேற்ற சிற்றூரான சின்னவத்தை என்ற அவரின் சிற்றூரின் மீது சென்ற முறை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அவர் அச்சமடைவதற்குக் காரணம் உண்டு. 1990 ஆம் ஆண்டு யூன் திங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் அவருடைய மைத்துனர் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அவருடைய பாதம் அகற்றப்பட்டது.

அந்தந் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட தழும்புகளைத் தாங்கிய வேறு பலரும் இச்சிற்றூரில் உள்ளனர். இக்குடியேற்றப் பகுதியிலுள்ள 55 வீடுகளில் வசிக்கும் பல குடும்பங்கள் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்களில் நடாத்தப்பட்ட தாக்குதலை விட இந்தத் தாக்குதல் மிகவும் கொடூரமானது எனக்கூறித் தங்களுக்கு ஏற்பட்ட பட்டறிவுகளைக் கூறுகின்றனர். அந்த இரண்டாவது தாக்குதலுக்குப் பின்னரே இக்குடியேற்றத் திட்டத்திற்கு இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள கல்பிற்றிக்கலை என்ற இடத்திலுள்ள பாடசாலை ஒன்றில் அமைக்கப்பட்ட ஏதிலிகள் தங்ககத்திற்கு காப்புத்தேடி இச்சிற்றூர் மக்கள் ஓடிச் சென்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்த தங்ககத்தில் வசித்து வந்த இம்மக்கள் படையினர் இச்சிற்றூரில் பாசறையொன்றைச் சென்ற ஆகஸ்ட் திங்களில் அமைந்ததன் பின்பே தங்கள் இச்சிற்றூருக்குத் திரும்பிச் சென்றனர்.

கிழக்கு மாகாணத்தில் போர் முனை எனக்கூறக்கூடிய பகுதிக்கு மத்தியிலேயே இந்தக் குடியேற்றச் சிற்றூரான சின்னவத்தை அமைந்துள்ளது. அண்மைக்காலமாக இச்சிற்றூர் மீது நேரடித் தாக்குதல்கள் நடைபெறவில்லையாகிலும், இச்சிற்றூர் வாசிகளுக்குச் சொந்தமான கால்நடைகள் விடுதலைப்

புலிகளால் கவரப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அத்துடன் சில இரவுகளில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்குமி டையே நடைபெறும் சூட்டுச் சம்பவங்களையும் இவர்கள் கேட்பதுண்டு.

இம்மக்கள் தங்கள் சிற்றூருக்கு மீண்டும் திரும்பி வந்த போதிலும், தாங்கள் முன்னர் வாழ்ந்த வாழ்க்கையைப் போல் மீண்டும் வாழ விருப்பமில்லாதவர்களாக இருக்கின்றார்கள். காப்பு இல்லையென்ற அச்சமே இதற்கு முக்கியமான தடையாக உள்ளது. இச்சிற்றூரைச் சுற்றியுள்ள. பயிரிடப்படாத பரந்த நெல்வயல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. இந்தச் சிற்றூருக்குச் செல்லும் பாதை நெடுகிலுமுள்ள ஏக்கர் கணக்கான வயல்களில் பொன்நிறமான நெற்கதிர்களை அன்று பார்த்த எம் கண்களால் இன்று களைகளையும், காட்டுச் செடிகளையுமே காணமுடிகின்றது.

'இச்சிற்றூர் மக்களின் போக்கை மாற்றுவதே இக்கிராமத்தில் அமைந்துள்ள படையத்தின் பொறுப்பாகவுள்ள மேலாளரின் குறிக்கோளாகவிருக்கின்றது. பயிர்ச்செய்கையில் ஈடுபட விரும்பும் சிற்றூரைச் சேர்ந்தவர்களுக்கு படையம் காப்பு வழங்கும் என அவர்களை நம்பவைப்பது சிரமமாகவிருக்கின்றது' என லெப்ரினன்ட் ஜே ஏ.ஜெயரத்தினா அவர்கள் கூறுகின்றார். 'இக்குடியேற்ற சிற்றூருக்கு மேற்காகவுள்ள ஒரு சிறு நிலப்பரப்பில் அவர்களை மரக்கறிச் செய்கையில் ஈடுபட வைத்ததே தன்னால் இதுசாறும் மேற்கொள்ளக் கூடிய பெரிய பணியாக விருந்தது'' எனவும் இவர் கூறுகின்றார்.

இச்சிற்றூர் மக்கள் தங்கள் வாழ்விற்கு அரசாங்கத்திடமிருந்து திங்கள் தோறும் பெறும் உதவிப்பணத்திலேயே தங்கியுள்ளார்கள். சுமார் 1200/- ரூபாய்களைக் கொண்ட இந்த ''ஏதிலிகள் உதவிப்பணம்'' அவர்கள் இடம்பெயர்ந்து சென்ற நாளிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது. இத்துடன் யூன் திங்களில் நடாத்தப்பட்ட தாக்குதலின் போது அழிவுக்குள்ளான ஒவ்வொரு வீட்டையும் திருத்தியமைப்பதற்காக இச்சிற்றூருக்குத் திரும்பிவந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 15,000/- ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கமச்செய்கைக்கான உபகரணங்களையும், சமையல் பாத்திரங்களையும் வழங்கியதன் மூலம் செஞ்சிலுவைச் சங்கமும் இவர்களுக்கு உதவியுள்ளது.

இக்குடியேற்றப் பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் இனச் சிக்கல் காரணமாக உருவாகியுள்ள போரில் முக்கியமான பங்கை வகிக்கின்றார்கள். இச்சிற்றூர் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளில் தங்கியிருக்கிறார்களா என்பதை உறுதி செய்வதற்கும், எவரும்இச் சிற்றூரைவிட்டு இரவு நேரத்தில் வெளியேறுவதைத் தடுப்பதற்கும் காவல்துறையினரும் படையினரும் இரவுநேரத்தில் வீடு வீடாகச் சென்று சோதனை செய்கின்றனர்.

இவர்களுக்கு இந்த நடவடிக்கை எதுவித சிக்கலையும் ஏற்படுத்தவில்லை. இருப்பினும், தங்கள் சிற்றூரில் படையப் பாசறை இருக்கும்வரை மாத்திரமே தாங்கள் அங்கு தங்கியிருக்கவுள்ளதாக அவர்கள் கூறுகின்றார்கள். ''படையபாசறை அகற்றப்பட்டால், தாங்கள் இச்சிற்றூரை விட்டுச் செல்லப்போவதாக'' 48 அகவையுடைய ஆரியசேனா கூறுகின்றார்.

இக்குடியேற்றத் திட்டத்தில் வாழும் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் போருக்கு முன் எப்படி நல்லுறவுடன் வாழ்ந்தார்களோ அதேபோல், அவர்கள் இப்பொழுதும் வாழத்தக்க வகையில் அவர்களுக்கிடையேயுள்ள உறவுகள் சீர்செய்யப்பட வேண்டும். இந்த இரு இனங்களுக்கிடையே நிலவிய சகோதரத்துவ உணர்வை 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஏற்பட்ட சம்பவங்கள் இல்லாது செய்துவிட்டன. முன்னர் நண்பர்களாயிருந்த தமிழ்மக்கள் இப்போது தங்கள் மந்தைகள் புல்மேய்வதைப் பார்வையிடுவதற்கு வெளியே வரும்போது மாத்திரமே சிங்கள மக்களால் அவர்களைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. இந்த மேய்ச்சல் நிலம் சிங்கள மக்கள் வாழும் இடத்திலிருந்து 100 அடி தூரத்தில் உள்ளது.

இருந்த போதிலும், இவ்விரு சமூக மக்களும் கூடிக்குலாவி மகிழ்ந்த காலமொன்றும் இருந்தது. தமிழ் மக்கள் வாழும் பகுதியில் சந்தை இருந்ததனால், தங்கள் விளைபொருட்களைச் சந்தைப்படுத்தும் பொருட்டு சிங்கள மக்கள் அப்பகுதிக்கு அடிக்கடி போகவேண்டியிருந்தது. மருந்தகம், அஞ்சலகம், நீராடும் சிற்றாறு ஆகியனவும் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் இருந்ததன் காரணமாகவும் அவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டியிருந்தது.

இக்குடியேற்ற சிற்றூரின் பெயரான சின்னவத்தைகூட தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இவ்விரு சமூகங்களுக்குமிடையே உள்ள இதுபோன்ற

வாழ்க்கை ஒழுங்கு கல்லோயாத்திட்டத்தில் ஒன்றும் புதிதல்ல இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 42 குடியேற்ற சிற்றூர் களில், 16 சிற்றூர்களில் சிங்கள மக்களும், தமிழ்மக்களும் கலந்து வாழ்கின்றார்கள்.

''சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் கட்டாயப் படுத்தி அவர்களுக்கிடையே உறவை வளர்க்க நாம் எப்போதா வது கருதியிருக்கவில்லை. ஆனால் காலஞ் செல்லச் செல்ல சிநேக உறவுகள் வளரத்தொடங்கின'' என கல்லோயா அபிவி ருத்திச் சபையின் முன்னாள் நில அளவையாளரான தனபாலா நாணயக்காரா அவர்கள் கூறுகின்றார். சில சந்தர்ப்பங்களில் இரு சமூகங்களுக்குமிடையேயும் திருமணம் ஏற்படத்தக்க வகை யில் அவர்களிடையே புரிந்துணர்வு இருந்தது என அவர் மேலும் கூறினார்.

இருப்பினும் இச்சிற்றூரிலுள்ள சிங்கள மக்களின் கூற்று, இச்சிற்றூரிலுள்ள அரைவாசிப்பேரின் கருத்தைப் பிரதிபலிப் பதாகவிருந்தால், 1990 ஆம் ஆண்டு யூன் திங்கள் வரை நிலவிய சுமுக நிலையை மீண்டும் எட்டுவது கடினமாகவிருக்கும். விடு தலைப் புலிகள் செய்தது தங்கள் நினைவில் எப்போதும் நிலைத் திருப்பதால், முன்னர் எப்படி இந்த இரு சமூக மக்களும் நெருக் கமாக வாழ்ந்தார்களோ அதேபோல் மீண்டும் வாழ்வது என்பது சாத்தியமில்லை என 45 வயதான அலிசுநோனா கூறுகின்றார்.

---

*மனித வாழ்க்கையில் இரண்டே சோகங்கள் மட்டுமேஉண்டு. ஒன்று, நாம் ஆசைப்படுவேது கிடைக்காமலிருப்பது. மற் றொன்று நாம் ஆசைப்படுவேது கிடைத்துவிடுவேது.*

*- பெர்னார்ட்ஷா -*

# அங்கோலாவில் நடைபெற்றவை மொசாம்பிக்குக்குப் பாடமாக அமைகின்றன.

*மாசம்பா தவிரெனிக்கா*
*ஐலண்ட் (14- 4- 93)*

சமாதானத்தைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையி னால் அங்கோலாவிற்கு அனுப்பப்பட்டவர்கள் பெரும் தோல் வியைத் தழுவிக் கொண்டார்கள். அங்கோலாவில் அவர்கள் இழைத்த தவறுகள் போல, மொசாம்பிக்கிலும் இழைக்கலாம் என திரு. மாசிம்பா தவிரெனியிக்கா அவர்கள் கவலை கொண் டுள்ளார். தேர்தல் நடைபெறும்வரை வன்முறை எதுவும் தலை தூக்காது தடுத்து ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையிடம் போதிய வலு இல்லாமையால், பாரிய செலவினம் ஏற்படுவதையும் பொருட்படுத்தாது அதிக ளவிலான படையினரையும், பார்வையாளர்களையும் அது அங்கு பணிசெய்ய அமர்த்தவேண்டியுள்ளது.

முன்னைய யூகோசிலாவியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளுக்குப் பின், ஐக்கிய நாடுகள் சபை அதன் மூன்றாவது பெரிய சமாதானப்படையான 8000 க்கும் அதிகமான படை யினரையும், படைத்துறையைச் சாராத பார்வையாளரையும் மொசாம்பிக்குக்கு அனுப்ப மேற்கொண்ட தீர்மானம் அங்கோ லாவில் சந்தித்த தோல்வியை இங்கு சந்திக்கக் கூடாது என்று அது முடிவு செய்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. சமாதா னத்தை நிலைநாட்டுதல், மனிதாபிமான துயர்துடைக்கும் பணிகளுக்குக் காப்பு வழங்குதல், போரினால் சின்னாபின்ன மாக்கப்பட்டிருக்கும் இந்தநாட்டில் அடுத்த ஆண்டு ஒக்டோபர் திங்களில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் முதலாவது தேர் தலை மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளை ஐக்கிய நாடுகள் சபை ஆற்றவேண்டியுள்ளது.

தேர்தலுக்குப் பின் அங்கோலாவில் தோன்றிய நெருக்கடி நிலையும், சமாதானத்தீர்வொன்றை அங்கு எட்டமுடியாதிருப்

பதும், மொசாம்பிக்கிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக விருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார் வையில் செப்தம்பர் திங்களில் நடாத்தப்பட்ட தேர்தலில் தோல் வியைத் தழுவிக் கொண்ட யுனிற்றா (Unita) நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், அதன் அரைவாசிக்கு மேலான பகுதியை ஆயுத வன்செயல்கள் மூலம் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது.

தான் நினைத்தபடி நடப்பதற்கு யுனிற்றாவை அனும தித்தால் சுதந்திரமானதும் நேர்மையானதும், அனைத்துலக ரீதியாகக் கண்காணிக்கப்பட்டதும், சனநாயக ரீதியாக நடாத்தப் பட்ட துமான தேர்தலின் முடிவுகளை ஏற்காத பாரிய எதிர்விளை வுகளை ஏற்படுத்தும் முன்மாதிரியை அனுமதித்தது போலாகும். தன் மேற்பார்வையில் நடாத்தப்பட்ட தேர்தலின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாத நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இருப்பது, இது போன்ற பணிகளை இவ்வுலக நிறுவனத் திடம் ஒப்படைத்த நாடுகளுக்குத் தவறான கருத்தை ஏற்படுத்த ஏதுவாகவிருக்கின்றது.

அங்கோலாவிலுள்ள எம். பி. எல். ஏக்கு (MPLA) வெற்றி யைக் கொடுத்ததும், முதன் முறையாகப் பல கட்சிகள் பங்கு பற்றியதுமான தேர்தலின் முடிவுகளை திரு. சவிம்பி அவர்கள் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து அக்டோபர் திங்களில் திடீரென வெடித்த வன்செயல்கள் காரணமாக, 2000க்கு அதிகமான மக் கள் இறந்துள்ளனர்.

## சண்டை

போர்த்துக்கேயரின் முன்னைய காலனித்துவ நாடான மொசாம்பிக்கில் தீர்வு எதுவும் எட்டமுடியாது சண்டை உக் கிரமடைந்துவரும் இவ்வேளையில், ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரிவோர் அங்கு செல்வதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டு வருகின்றார்கள். மொசாம்பிக்கில் அண்மையில் முடி வுற்ற போருக்கும் அங்கோலாவில் இடம்பெற்ற போருக்கும் கெடுபிடிப்போரே காரணமாகவிருந்தது .திரு. அயன் சிமித் அவர்களின் தலைமையிலான றொடிசியாவால் (தற்போது சிப் பாப்வே), உருவாக்கப்பட்டதும் 1980 ஆம் ஆண்டு சிம்பாப்வே சுதந்திரம் அடைந்ததும் தென் ஆபிரிக்காவிடம் ஒப்படைக் கப்பட்டதுமான மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணி (Renamo) அமெரிக்கா மற்றும் போர்த்துக்கேய வலதுசாரிக் குழுவிடமிருந்து ஆதரவைப் பெற்றுவருகின்றது.

அங்கோலிய மக்கள் ஒருவரோடொருவர் சண்டையில் ஈடுபட்டுவரும் வேளையிலும், தேர்தல் முடிவுகளை சண்டையில் ஈடுபட்டிருக்கும் திரு. சவிம்பி அவர்களை ஏற்கச் செய்வதற்கு இராசதந்திரிகள் முயன்றுவரும் வேளையிலும், யுனிற்றாவுக்கு பெரும் ஆதரவை வழங்கிவரும் அமெரிக்கா இதில் தலையிடாது நடுநிலையைக் கடைப்பிடிக்கின்றது. சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல் ஒன்றின் மூலம் உருவாக்கப்படும் அரசாங்கத்தை அங்கீகரித்து முழு அளவிலான இராச தந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தப்போவதாக அங்கோலிய மக்களுக்குத் தேர்தலுக்கு முன் திரு. புஷ் அவர்களின் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென கெடுபிடிப்போரின் பின் அங்கோலா சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை விமர்சிப்பவர்கள் வலியுறுத்துகின்றார்கள். அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் பொருட்டு, அங்கோலா நாட்டின் புதிய அரசை அங்கீகரிக்கும் நடவடிக்கையை அமெரிக்காவில் புதிய அரசாங்கம் விரைவாக மேற்கொள்ள வேண்டுமென நெருக்குதல் கொடுக்கப்பட்டுவருகின்றது.

ஆட்சிபீடமேற யுனிற்றாவை அனுமதிப்பதானது, வாக்குச்சீட்டு மூலம் பெறமுடியாத ஆட்சியை, துப்பாக்கிக் குண்டுகள் மூலம் பெறமுடியும் என்ற கருத்தை மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணி கொள்ள இடமளிப்பது ஆபத்தான முன்மாதிரியை உருவாக்க வழிவகுக்கும். திரு. சவிம்பி அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைபோல் தானும்மேற்கொண்டு அரச மேலாண்மையை ஏன் கைப்பற்றக்கூடாது என, மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணியின் தலைவரான திரு. அல்பொன்சோ டிலாகம Alfenso-(Dhlakama) அவர்களை இது சிந்திக்கத் தூண்டும்.

பல்தேசிய சமூகம் அங்கோலாவின் நெருக்கடியை கையாண்ட தவறான முறை சில கேள்விகளை எழுப்பச் செய்கின்றது. யுனிற்றா வெற்றி பெற்று அதை எம்.பி.எல்.ஏ ஏற்க மறுத்திருந்தால் அனைத்துலக சமூகத்தின் செயற்பாடுகள் எப்படியாக இருந்திருக்கும்?

யுனிற்றாவின் தோல்வியையிட்டுத் திரு.புஷ் அவர்களின் நிர்வாகம் கவலையடைந்திருந்தது என எழுந்த சந்தேகத்தை அகற்றுவது கடினமாகும்.

தன் நாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் முழுக்கவனத்தையும் அமெரிக்கா செலுத்திவருகின்றது. அங்கோலாவில்

இழைத்த தவறுகளைத் திருத்திச் சனநாயகத்தைக் காக்கத் தக்க வகையிலும், தங்களுக்கு என்ன நேருமோ என்று அச்சமுறும் மொசாம்பிக் மக்களின் அச்சத்தை நீக்கத்தக்க வகையிலும் நடவடிக்கையை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையையே உலக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அங்கோலா இன்னும் ஒரு யூகோசிலாவியா போலாவதைத் தடுப்பதாயின், 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதும், யுனிற்றா ஏற்றுக் கொள்ளப் பட்டு கைச்சாத்திடப்பட்டதுமான உடன்படிக்கைக்கு அது மதிப் பளிக்கக் கட்டாயப்படுத்தும் வகையில் செயற்றிறன் வாய்ந்த நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளவேண்டும்.

## மாற்றம்

1989 ஆம் ஆண்டு நம்பீயாவில் தான் மேற்கொண்ட பணிமூலம் வெற்றிகரமாக அந்நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த உலக நிறுவனம், அங்கு மேற்கொண்ட பணிக்கு முற்றிலும் எதிர்மாறாக அங்கோலாவின் அரசியல் மாற்றம் சம்பந்தமான விடயங்களைக் கையாண்டுள்ளது. 10 மில்லியன் மக்களைக் கொண்ட அங்கோலாவில் நடைபெற்ற தேர்தலைக் கண்காணிக்க 480 பேரை மாத்திரம் அனுப்பியிருந்த ஐக்கிய நாடுகள் சபை, 1.8 மில்லியன் மக்களைக் கொண்ட நம்பியாவில் நடைபெற்ற தேர்தலைக் கண்காணிக்க 6000 பேரை அனுப்பியிருந்தது.

அங்கோலாவில் தான் இழைத்த தவறுகளையும், அதனால் ஏற்பட்ட பாரிய விளைவுகளையும் நன்கு உணர்ந்து கொண்டதனால் மொசாம்பிக்கின் அரசமாற்றத்தை நல்ல முறையாகச் செய்து முடிக்க ஐக்கிய நாடுகள் சபை ஆயத்தமாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவரான அல்டோ அஜெலோ அவர்கள் மொசாம்பிக் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்திவருகிறார். படையமும், காவல்துறையும் இணைந்த ஒரு படையை முறையாக நிலை நிறுத்தாமல் தேர்தலை நடாத்துவதில்லை எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இருப்பினும், பாரிய பொருளாதார வீழ்ச்சியையும், சீர்குலைக்கப்பட்ட உள்ளக அமைப்பையும், ஒழுங்கற்ற படைய அமைப்பையும், கொண்ட மொசாம்பிக்கில், அங்கோலாவில் சந்தித்த சவால்களைவிட அதிகளவிலான சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. அரசாங்கத்துடன் ஒக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பின் ஒருவா

ரந்தானும் ஆகுமுன், ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணி அந்நாட்டின் நான்கு நகரங்களிற்குள் படையெடுத்ததன்மூலம் மொசாம்பிக்கின் முக்கியமான ஏற்றுமதிகளைச் சீர்குலைத்துள்ளது. போரைநிறுத்தம்செய்த பின்னரும் நாட்டின் மற்றப்பகுதிகளில் சிறு சிறு சண்டைகள் இடம்பெற்றுள்ளன. நல்ல வகையில் அமையாத சமதானம்இப்பொழுது அங்கு நிலவுகின்றது.

போர் நிறுத்தம் மீறப்பட்டபோது எதுவும் செய்ய இயலாத நிலையில் ஐக்கிய நாடுகள் சபையிருந்தது. மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணி போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டிருந்தபோது கிளர்ச்சிப்படையினரும், அரசபடையினரும் ஒன்றாகச் சந்திக்கக்கூடிய 49 நிலையங்களைக் கண்காணிக்க 20 படைய மேற்பார்வையாளரை மாத்திரமே மொசாம்பிக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக்குப் பொறுப்பாகவிருந்த ஒனுமொஸ் (Onumoz) என்ற அமைப்பு அமர்த்தியிருந்தது. திரு.அசெலோ அவர்களின் தலைமையில் இன்று 100க்கும் குறைவான படைய மற்றும் பொதுமக்களைக் கொண்ட மேற்பார்வையாளர்கள் ஒனுமொசிடம் உண்டு. சுமுகமான மாற்றம் ஏற்படுவதை உறுதி செய்யும் முகமாகக் காப்புச் சபையினால் அனுமதிக்கப்பட்ட முழுப்படை அணியையும், அதன் செலவினமான 331 மில்லியன் டொலர்களைக் கருத்தில் கொள்ளாது சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பூற்றொசுகாலி அவர்கள் விரைவில் மேற்கொள்ளவேண்டும்.

## புறக்கணிக்கத்தக்கது-

அங்கோலாவிலும், முன்னைய யூகோசிலாவியாவிலும் ஏற்பட்ட மனித இழப்புப்போல் இங்கும் ஏற்படவிருப்பதால் மனித உயிர்களின் விலையுடன் இச்செலவினத்தை ஒப்பிடுகையில் இந்தச் செலவுத்தொகை புறக்கணிக்கத்தக்க ஒன்றாகவே இருக்கின்றது. யுனிற்றாவைப் போலல்லாது, மொசாம்பிக் தேசிய எதிர்ப்பு அணி ஒரே இனத்தைச் சார்ந்தவர்களைக் கொண்டிருக்காததாலும், ஒழுங்கற்றதாகவுள்ளதாலும் அதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது கடினமாகும். உயிர்வாழ்வதற்கான ஒரேயொரு வழி துப்பாக்கியை வைத்திருப்பது என்பதே நியதியாகிவிட்ட இந்த நாட்டில் மேலும் சிக்கல்களை

உருவாக்கும் வகையில், பல ஆயுதம் தாங்கிய கும்பல்கள் நாட்டில் தன்னிச்சையாக நடமாடிவருகின்றார்கள்.

மொசாம்பிக்கில் சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு சிறிதளவிலான அழுத்தத்தையே அனைத்துலக சமூகம் கொடுப்பதாக சிம்பாப்வேயில் தனது தலைமையகத்தைக் கொண்ட தென்னாபிரிக்க ஆய்வு மற்றும் ஆவணச்சான்று நிலையம் குறை கூறுகின்றது (African Research and Documentation Centre (Sardc) அனைத்துலக சமூகம் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள இயலாத நிலையில் அல்லது மேற்கொள்ள விரும்பாத நிலையில் உள்ளதென அங்கோலா, மற்றும் மொசாம்பிக் நாடுகளின் மக்கள் கொண்டுள்ள அச்சத்தையே, இந்த நிலையத்தைச் சேர்ந்தவர்களும் பிரதிபலிக்கின்றார்கள். மக்களின் ஆணைக்கு முதன்மைகொடுப்பதுடன் சனநாயகம் தழைத்து ஓங்கவும் வாய்ப்பு அளிக்கப்படல் வேண்டும்.

## தமிழ்த்தாகம்

(அமரர்) ராஜபாரதி, மட்டக்களப்பு.

கோடையிலே எரிவெயிலிற் காயும் போது
கொப்பளிக்குந் தமிழ்வெள்ளம் தோயவேண்டும்
வாடைதரு மூதலிலே நடுங்கும் போது
வயந்ததமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பர் கரையும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓய வேண்டும்!

# சாரண இயக்கத்தின் தந்தை பேடன்பவல்பிரபு

(தினகரன் 2-3-9.3)

"நான் மகிழ்ச்சி மிகுந்த வாழ்க்கையை வாழ்ந்து விட்டேன். நீங்கள் ஒவ்வொருவரும் அத்துணை மகிழ்ச்சி மிகுந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே என் பேரவாவாகும். இன்பத்துடன் வாழ்க்கையைச் சுவைத்து மகிழ்வதற்காகவே இறைவன் இவ்வு லகை இரம்மியமாகப் படைத்தான். என்று நான் கருதுகிறேன். பொருளுடைமையினாலோ செய்யும் தொழில் வெற்றியினாலோ அன்றிப் புலனுகர்ச்சியினாலோ மகிழ்ச்சி உண்டாவதில்லை. உடல் நலம், உடல் திண்மையும் உடையவர்களாக ஆக்கிக் கொள்வதே மகிழ்ச்சியை நோக்கிச் செல்லும் பாதையின் முத லடியாகும். அங்ஙனம் செய்வதனால் நீங்கள் வளர்ந்து மனித ராகும் போது பயனுள்ளவர்களாகவும் வாழ்க்கையைச் சுவைக் கக் கூடியவர்களாகவும் இருப்பீர்கள்."

இது தனக்கென வாழாது பிறருக்குரியவராய்ச் சிறுவர் களைப் பக்குவமாக்கி உலகனைத்தையும் படர்ந்துள்ள மனிதகுலத் துக்கே தன்மையான நிழலைத் தரும் தன்மையாய் அமைந் துள்ள சிறப்பு வாய்ந்த புனித இயக்கமான சாரண இயக்கத் தைத் தோற்றுவித்த பேடன் பவல் பிரபு கூறிய கருத்தாகும்.

1908 ஆம் ஆண்டு பேடன் பவல் பிரபுவால் தொடங்கப் பட்ட இச் சாரணர் இயக்கம் சிறுவர்களை எதிர் காலத்துக்குச் சிறந்த குடி மக்களாய் விளங்கச் செய்யும் நோக்கத்தையுடை யதாகும். சமூகத்திலே தன்னலம் மிகுந்த பொதுநலங் கருது வோர் தொகை குறைந்து வரும் இக் காலத்தில் சிறார்களை தன்னலமற்றவர்களாகவும் பிறருக்குப் பயன்படத் தக்கதாகவும் வாழப் பயிற்றுவிப்பதே சாலச் சிறந்த வழியென்று கொண்ட கொள்கையான இயக்கம் இவ்வியக்கம்.

சாரணர் படையை நிறுவி அதற்கென ஓர் இயக்க நெறியை அமைத்து உயிரும் ஊக்கமும் அளித்த பெருவள்ளல் பேடன் பவல் என்னும் இப் பெரியார் தாமாக ஆக்கிய "இளைஞர் சாரணியம்" என்னும் பனுவலின் தொடக்கத்தில் இவ்வாறு கூறுகின்றார். "ஒவ்வொரு இளைஞனும் யாதாயினுமோர் வகை யிலே தாய் நாட்டுக்குப் பணி செய்வதற்கு விழைகின்றான்.

என நான் கருதுகிறேன். அவன் அவ்விழாவை இனிது நிறை வேற்றத் தனிவழி ஒன்றுண்டு. அதுதான் அவன் ஒரு சாரண னாக அமைதலாம்'' என்பதாகும்.

றொபட் ஸ்ரீவின்சன் ஸ்மித் பேடன் பவல் வணக்கத்துக் குரிய பேராசிரியர் பேடன் பவல் அவர்களின் ஏழு பிள்ளைக ளுள் ஐந்தாவது பிள்ளை. 18 57 பிறந்தார். தந்தையார் கால மாகியதும் தமையனாகிய வாறிங்டன், கொன்வேய் என்ற பயிற்சிக் கப்பலில் பதவி பெற்றுச் சென்றார். அந்த நாள் தொடக்கம் அவர் தனது தம்பியாரையும் விடுமுறை நாட்க ளில் தம்முடன் அழைத்துச் சென்று கடல் வாழ்வு தரும் களிப் பையும் வனப்பையும் அவர்களுக்குக் காட்டினார். அப்போது தான் இளைஞரான பேடன் பவல் பெரியோர் ஏவல்களை விரை வில் செய்யும் பயிற்சி பெற்றார்.

தமது பன்னிரெண்டாவது வயதில் கல்விகற்க பள்ளியில் சேர்க்கப்பட்ட பவலின் துடிப்புக்கு அப்புதிய இடம் வெளி வாழ்வு புதுமை வேட்கைக்கு உணவளிப்பதாக அமைந்திருந்தது. சாட் டார் ஹவுஸ் என்றது அப் பள்ளிக்கருகில் உள்ள கரப்பை நிலம் அவருக்குப் பழக்கப்பட்டதாக இருந்தாலும் அங்கு சென்று வனவிலங்குகளின் வாழ்க்கை விநோதங்களைப் பார்த்து மகிழ்ந் தார்.

குறு முயல்களைத் துரத்திப் பிடித்தல், கட்டுமரம் அமைத் தல் முதலியவற்றைச் செய்தும் பள்ளி வாழ்வில் எல்லோராலும் போற்றப்படும் ஓர் உத்தமமான மாணவராய் பாட்டிசைத்தல் படம்வரைதல், அரங்கிலாடல், என்பவற்றில் திறமைபெற்றும் செம்மையெய்தினார். இவையனைத்தும் அவர் வாழ்வை வளம் படுத்தின.

1876ல் இராணுவத்தில் சேர்ந்த இவர் இந்தியா, ஆப்கா னிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் பணி புரிந்து 1908ல் லெப்டினன் ஜெனரல் பதவி பெற்றார். இக்காலத்திலேயே ஒற்றனொருவனின் வீரச் சம்பங்களெனும் நூலை ஆக்கினார். 1899ல் சில காலம் ஆறுதல் பெற இந்தியாவிலிருந்து தாய் நாடாகிய இங்கிலாந்துக்குச் சென்றபோது சேனை வீரர்களுக்கு வழங்கிய பேருரைகளடங்கிய ''சாரணியத் துணைகள்'' என் னும் கை நூலையும் கொண்டு சென்றார். அந்நூல் அச்சு நூலா குமுன் மீண்டும் தென்னாபிரிக்கப் போர் முனைக்குச் சென்று வெற்றிவகை சூடி மீண்டார். அவ்வீரரை வரவேற்று குதிரைப்

படையின் தலைவராக்கினார்கள். அப் பதவியேற்ற அவர் பெரும் பணி புரிந்தார்.

புத்தூக்கம் பெற்ற பவல் சாரண இயக்கத்துக்கு புதிய ஆக்கத்தைக் கொடுத்தார். 1907 ல் பிறவுன்சித் தீவில் பல வகைச் சிறுவர்களைக் கூட்டி அன்போடு கூறிய அறிவுரைகளையும், புனைவுக் கதைகளையும் இணைத்து ''இளைஞர் சாரணியம்'' என்ற நூலையும் ஆக்கினார். அவ்வேளையில் அறுபதினாயிரம் சிறுவர்கள் இவ்வியக்கத்தில் உறுப்பினர்களாயினர். அவர்களுக்குச் சின்னம் அங்கி முதலியனவும் வழங்கினார்.

சாரணர் பல பிரிவினராகவுள்ளனர் சிறுவர்களுள் ஏழு தொடக்கம் பன்னிரெண்டு வயது வரையுள்ளோர் ''ஓநாய்க் குருளையர்'' என்றும் 11-18 வரையுள்ளோர். சாரணரென்றும் 18 க்கு மேற்பட்டோர் ''ரோவர்'' என்றும் பெயர் பெறுவர். சிறுமியருள் 7-12 வரையுள்ளவர் ''புல் புல்'' அல்லது ''பிறவுணியர்'' என்றும், 12-18 வரையுள்ளவர் பெண் சாரணர் என்றும் அழைக்கப்படுவர். சாரணராவதற்குத் தனது பெற்றோரின் இசைவை எழுத்து மூலம் பெற்றே சாரணராதல் வேண்டும்.

''என்னால் கூடுமான வரையில் சமயம், அரசு, தேசம், இவைகளுக்கு என் கடமைகளைச் செய்யவும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் எனது கௌரவத்தின் மீது நான் பிரதிக்ஞை செய்கிறேன்'' என்பதே அவ் உறுதி மொழியாகும்.

ஒரு சாரணர் எல்லோருக்கும் நண்பராகவும், மற்றைய ஒவ்வொரு சாரணனுக்கும் அவன் எந்த தேச, வகுப்பு சமயத்தைச் சேர்ந்தவனாலும் உடன் பிறந்தோனாகவும் இருப்பான். பெண்கள், குழந்தைகள் முதலியோர் நோயாளர் ஆகியோர் இடத்தில் மரியாதையாகவும் விநயமாகவும் நடந்து கொள்வான். பிறருக்கு உதவியாக இருந்தமைக்கோ, பிறருக்கு மரியாதை காட்டி நடந்தமைக்கோ பிரதிபலனை எதிர் பார்க்க மாட்டான். மனம், வாக்குக் காயத்திலே தூய்மையுடையவனாக இருப்பான். தீயது பேசும் பேதையர் எவரையும் அவன் மதிக்க மாட்டான்' தீயது எதனையும் பேசவோ சிந்திக்கவோ செய்யும் தூண்டுதலுக்கும் ஆசைக்கும் அவன் தன்னை விட்டுக் கொடுக்க மாட்டான். தூய்மையான உள்ளத்தோடு ஆண்மையுடையவனாகவும் இருப்பான்.

சாரணர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றப் பலவித பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அவற்றை நான்கு பிரிவுகளாகக் கொள்ளலாம். கூர்ந்து அவதானித்தால் தன்னம்பிக்கையுடன் திறம்படச் செயலாற்றலாகிய நன்னடத்தைப் பயிற்சி முதலாவதாகும். வாழ்க்கையில் பயன்படத்தக்க தொழிலைப் பழகுவது இரண்டாவது பயிற்சியாகும். உடல் பயிற்சியால் உடல் நலம் பேணுதல் மூன்றாவதாகும். தீயணைத்தல், முதலுதவி செய்தல், உயிர் காத்தல் போன்ற பொது நலச் சேவையில் ஈடுபடுவதற்கான பயிற்சி நான்காவதாகும்.

பண்பும், பயனுமுள்ள வாழ்க்கையை மேற்கொண்டொழுகும் சாரணரின் குறிக்கோள் வாசகம் ''தயாராக இரு'' என்பதாகும். மனதாலும், சரீரத்தாலும் தன் கடமையைச் செய்வதற்குத் தயாராக ஒவ்வொரு சாரணனும் இருக்க வேண்டும். என்பதே இப் புனித வாசகத்தின் பொருளாகும். இதற்கேற்ப உலகனைத்தும் பரப்பி புகழ் பெற்ற பேடன் பவல் பிரபுவின் எப்போதும் வாழ்வில் ஒளியைக் காண்பதேயல்லாது இருளைப் பாராதீர்'' என்பதற்கேற்ப அவர் வழி நின்று வாழ்வோமாக இவர் 22-2-1957ல் பிறந்து 8-2-1941ல் மறைந்தாலும் இவரது புகழும், இயக்கமும் என்றும் மறையாது என்பது உறுதி.

*நீ எந்தக் குடும்பத்தில் பிறந்தாயென்பது முக்கியமில்லை, நீ எப்படிப்பட்ட குடும்பத்தை உருவாக்கப்போகிறா யென்பதே முக்கியம்.*

*- சிங் லார்ட்னர்.*

# பயங்கரவாதிகள் 6500 உயிர்களைப் பலி கொண்டனர்

## வாசுதேவ கேட்ட கேள்விக்குப் பிரதமர் பதில்

*(தினகரன் 11-03-93)*

**பா**ராளுமன்றத்தில் ஒத்தி வைப்பு நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்காரவினால் எழுப்பப்பட்ட வினாவுக்கு பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா அளித்த விடை வருமாறு;

பாராளுமன்ற உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்கார அவர்கள் முன்னொரு காலத்தில் வாழ்ந்ததாகக் கூறும் றிப் வான் விங்கல் என்பவரைப்போன்று நீண்ட நித்திரையிலிருந்து துயிலெழுந்துள்ளார் போலும். எனவே, அவருடைய வினாவுக்குரிய விடயங்களின் பின்னணியை சிறிதளவிலாவது ஞாபகப் படுத்த வேண்டுமென நான் கருதுகின்றேன். 1988, 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் இந்த நாடு முழுவதிலும் தலைவிரித்தாடிய கொடுங்கோல் இருந்ததென்பதை மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினரும் ஏனைய சிலரும் மறந்துள்ளனர். அந்தக் கொடுங்கோன்மையின் தீவிரம் காரணமாக கொழும்பு 05 இல் வதிவிடங்களைக் கொண்டவர்களும் ஹோட்டல்களுக்குச் சென்று அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் இருந்தனர். பிரயாணம் செய்யும் போது ஜீப் வண்டியில் பொருத்தப்பட்டிருந்த இரும்புத்தகட்டினால் அமைக்கப்பட்ட பேழை ஒன்றினுள்ளேயே கிடந்தனர். இப்போது அந்தச்செய்திகள் யாவற்றையும் மறந்துள்ளனர். அச்செய்திகளுள் சிலவற்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அன்று பயங்கரவாதிகளால் பலி கொண்ட அப்பாவி உயிர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 6500 ஆகும். அரசியல்வாதிகள், இராணுவஉத்தியோகத்தர்கள் ஆகியோர் நீங்கலாக சுமார் 3000 - ற்கும் மேற்பட்ட அப்பாவிப்பொது மக்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குவர். இந்தக்கொலைகளுக்கு வகை கூற வேண்டியவர்கள் மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களது வினாவோடு சம்பந்தப்பட்ட நபர்கள் மத்தியில் தான் இருக்கிறார்கள். அங்ஙனம் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப்பொதுமக்கள் யாவர்? அவர்களுடைய எண்ணிக்கை யாது?

(அ) அரசியல் கட்சி உறுப்பினர்களும் அவர்தம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும்

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் | - 1783 |
| சிறீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் | - 102 |
| சிறீலங்கா மகாஜனக்கட்சி உறுப்பினர்கள் | - 35 |
| கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர்கள் | - 14 |
| நவ சமசமாஜக்கட்சி உறுப்பினர்கள் | - 03 |
| லங்கா சமசமாஜக்கட்சி உறுப்பினர்கள் | - 02 |

ஆ) அரசாங்க உத்தியோகத்தர்கள், படைதாங்கு சேவைகள், மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய அப்பாவிப்பொதுமக்கள்

| | |
|---|---|
| அரசாங்க சேவையாளர்கள் | - 485 |
| பொலிஸ் உத்தியோகத்தர்கள் | - 324 |
| படைதாங்குசேவை உத்தியோகத்தர்கள் | - 202 |
| மாகாணசபை பிரதிநிதிகள் | - 64 |
| தகவல் கொடுத்தோர் | - 253 |
| அரசியல்வாதிகள் | - 06 |
| சாதாரணப் பொதுமக்கள் | 3070 |
| தொழிற்சங்கவாதிகள் | 27 |
| பௌத்த பிக்குமார்கள் | 30 |
| கத்தோலிக்க மதகுருமார்கள் | - 02 |
| பல்கலைக்கழக பேராசிரியர்கள் | - 02 |
| பாடசாலை அதிபர்கள் | - 50 |

| | | |
|---|---|---|
| செய்தித்தொடர்பாளர்கள் | - | 04 |
| சட்டத்தரணிகள் | - | 10 |
| மருத்துவர்கள் | - | 04 |
| எந்திரிகள் | - | 03 |
| தோட்ட அதிகாரிகள் | - | 18 |
| பிரபல வர்த்தகர்கள் | - | 06 |
| பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்தினர் | - | 92 |
| படை தாங்கு உத்தியோகத்தர்களின் குடும்பத்தினர் | - | 70 |
| ஏனையோர் | - | 2752 |

அடுத்தபடியாக பொதுச் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதத்தினை அதாவது அரசாங்க அலுவலகங்கள், தொழிற்சாலைகள் மின்மாற்றிகள், தொலைபேசி மார்க்கங்கள், வானொலி நிலையங்கள், பாலங்கள், அரச வாகனங்கள் முதலிய பொது மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத பொதுச்சொத்துக்கள் அனைத்தினதும் பேரழிவினைப்பற்றி நான் இங்கே குறிப்பிடுதல் வேண்டும். அவ்வழிகள் சிலவற்றின் விபரங்களை கீழே தருகின்றேன்:

| | | |
|---|---|---|
| இ. போ. ச. பஸ்வண்டிகள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 28 |
| தனியார் பஸ் வண்டிகள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 01 |
| புகைவண்டிகள்: | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 24 |
| அரசாங்க வாகனங்கள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 10 |
| அரசாங்கக் கட்டிடங்கள்: | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 96 |
| தொலைபேசி சேவைகள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 20 |
| மின்வலுச்சேவைகள்: | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 25 |
| தேயிலைத்தொழிற்சாலைகள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 04 |
| விவசாய ஆதனங்கள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 20 |
| சுரங்கத்தொழில் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 62 |
| நிருவாக அமைப்புகள் | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 16 |
| சேவைத்துறை: | ஏற்பட்ட அழிவு ரூபா கோடி | 05 |

இவ்வளவு மாபெரும் தேசிய குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளவர்களைப்பற்றித் தான் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் இந்த வினாவை

எழுப்பியுள்ளார். இத்தகையோர்கள் சம்பந்தமாகவும் தாங்கள் எடுத்த நடவடிக்கை யாது? ஆரம்பத்தில் 19,000 றகும் மேற்பட்டவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இருந்தனர். இப்பொழுது 1,190 மட்டுமே இருக்கின்றனர். அவர்கள் கொலை, கொள்ளை, வீடுகளுக்குத் தீவைத்தல் போன்ற பாரிய குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்களே. அவர்களைப் பற்றி புலனாய்வு செய்து வழக்குத்தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனைகள் கிடைத்தவுடனே அவற்றுக்கு இசைவாக நடவடிக்கை எடுக்கப்படும். பாரிய குற்றங்களைப் புரிபவர்களுக்கு எதிராக அந்த விதத்தில்தான் நடவடிக்கை எடுக்கப்படுமென்பது சட்டத்தரணி என்ற வகையில் மாண்புமிக்க உறுப்பினர்க்கு தெரியும். அந்த நடைமுறை தெரியாதவாறு கள்ளத்தனமாக இத்தகைய வினாக்களை எழுப்புதல் தவறானதாகும். ஜே. வீ. பீ. பயங்கரவாதிகளால் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட அப்பாவிகளுக்குக்கிட்டாத நீதியான சந்தர்ப்பத்தை அந்தப் பயங்கரவாதிகளுக்கு இந்த அரசாங்கம் வழங்கியுள்ளதென்பது முழு உலகமும் அறிய வேண்டும். ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டிருந்தவர்களுள் 9382 பேர்கள் ஏற்கனவே புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நல்ல குடிமக்களாக மீண்டும் சமூகத்தில் பிரவேசித்துள்ள முறை பின்வருமாறு:

1. கல்விகற்கும் பொருட்டு பாடசாலைகளிற் சேர்ந்தவர்கள் 624
2. கல்விக்காக பிரிவேனாக்களுக்குச் சேர்ந்தவர்கள் - 14
3. கல்வியின் பொருட்டு சர்வகலாசாலையில் சேர்ந்தவர்கள் 30
4. அரசாங்க சேவையில் மீள அமர்த்தப்பட்டவர்கள் (விசேட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி) - 1251
5. ஜப்பான் நாட்டின் மேற்படிப்புக்காகச் சென்றவர்கள் - 72
6. விவசாயத்துறையைச்சேர்ந்தவர்கள் - 3965
7. சுயதொழில் செய்வோர் - 2697
8. தனியார் நிறுவனங்களின் சேவையாளர்கள் - 562
9. கடற்றொழில் செய்பவர்கள் - 102

| | | |
|---|---|---|
| 10. வெளிநாட்டுத் தொழில் புரிபவர்கள் | - | 22 |
| 11. தரைப்படைகள்/வான் படையைச் சேர்ந்தவர்கள் | - | 42 |
| 12. பிக்கு வேடம் தரித்தவர்கள் | - | 05 |
| 13. கிறிஸ்தவ மதகுருமார்களாகளாகச் சென்றவர்கள் | - | 01 |
| மொத்தம் | | 9382 |

மேலும் 1084 பேர்கள் இப்பொழுது புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்ஙனம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கு மேலதிகமாக நீதிமன்றத்தினால் 968 பேர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனரென்பதையும் பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுக் குழுவின் சிபார்சுவின் வண்ணம் மேலும் 4503 பேர்கள் நேரடியாகவே விடுதலை செய்யப்பட்டுள்ளனரென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்

முழுச்சமூகத்தையும் பாதிக்கும்வகையில் மாபெரும் தேசிய அழிவினை ஏற்படுத்திய கும்பல் தொடர்பில் இவ்வளவு நீதியான முறையில் நடவடிக்கை எடுத்த வேறுநாடு உலகில் உண்டா என்பது மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே ஐயத்துக்கிடமான தாகும்.

நிலைமை அப்படியிருக்க நாட்டில் வழங்கும் சட்ட திட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்கத்தின் பூரண பாதுகாப்பின் கீழுள்ள, ஒப்புநோக்குமிடத்து சிறிய எண்ணிக்கையினராகவும் உள்ள சிலரைத்தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குறுகிய அரசியல் லாபம் தேடும் முயற்சியானது கடந்த காலச்சம்பவங்களை இன்றும் மறக்காதுள்ள இந்த நாட்டுப் பொதுமக்களினதும் கண்டனத்துக்கு ஆளாகும் செயல் என்பதை நான் இறுதியாகக் கூற விரும்புகிறேன்.

---

சமூகம் குற்றங்களை தயார் செய்கிறது
குற்றவாளி அதை செய்து முடிக்கிறான்.

-வி. ஆல் ஃ பிரீ.

# தமிழிசை என்றால் எது?

மீ. ப. சோமு
(கல்கி - 20-2-92)

மிகவும் தொன்மைவாய்ந்த நம்முடைய இராகங்கள் சிலவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், அவற்றின் ஒலிச் சட்டத்திற்குள் உயிர்த்துக் கொண்டிருக்கிற முதிர்ந்து கனிந்து பழுத்த சுவையுணர்வு, நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. ஒரு சங்கராபரணம், ஒரு தோடி, ஒரு காம்போதி, ஒரு பைரவி இதற்கு எத்தனை வயதிருக்கும் என்று சிந்தனை செய்து பாருங்கள். நேற்றோ முந்தநாளோ தோன்றிய இராகம் இல்லை ஒரு சாவேரி! பல நூறு ஆண்டுகளாக நமது சமுதாயத்தின் நாவிலும் செவியிலுமாகப் புரண்டு எழுந்து நடனம் ஆடி உல்லாசங்களையும் உருக்கங்களையும் இந்த இராகங்கள் தங்கள் ஒலி மேனியிலே மெருகேற்றிக் கொண்டிருக்கின்றன! இப்படியே ஒவ்வொரு இராகத்துக்கும் வயது என்ன என்று கேட்டால், பல நூற்றாண்டுகளையே சொல்ல வேண்டியிருக்கிறது! அத்தனை முதிர்வு கொண்டு பழுத்த பழமாக அவை கனிந்திருக்கின்றன. ஒவ்வொரு ராகமும் பல்லாண்டு பல்லாண்டுகள் மனித உள்ளத்தின் கற்பனையிலே லயமாகி நின்று ஒலித்தவம் செய்து, ஒரொரு வண்ணத்தையும் வடிவத்தையும் சித்தி செய்து கொண்டுள்ளது!

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்ந்தோமானால், தேவாரம் தோன்றிய காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பண்கள் என்று அழைக்கப் பெற்ற இராகங்கள் இசை ஞானியரின் நாதக் கருவிலே சூலாகி, உரம் பெற்று, வடிவம் தாங்கி, வெளிவந்து, செவிப் புலனிலே நடனம் புரிந்து, தமிழ் மக்களின் சமுதாயத்தைக் கலையின்பத்திலே ஆழ்ந்து திளைக்கச் செய்துள்ளன! தியாகராஜர், முத்துசுவாமி தீக்ஷிதர், சியாமா

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சாஸ்திரி முதலான இசை மேதைகள் இவ்வாறு நமது தமிழகத்தில் வழிவழியாக வழங்கி வந்துள்ள இந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் ஒலிப்படைப்புக்களைச் செய்தார்கள். இவ்வாறே சைவ சமய ஞானிகளாகிய தேவார மும்மூர்த்திகளும், அவர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கி வந்த, பண் முறை என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பெற்ற இராக மரபைக் கையாண்டே, தமிழ் வேதமாகிய தேவாரப் பதிகங்களை அருளினார்கள். ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்த பாசுரங்களும் இந்த அடிப்படையிலேயே எழுந்தன. ராகங்களை அவர்கள் உண்டாக்கவில்லை.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் இருந்தே இராக முறையைப் பண்முறை என்றும், இராகங்களைப் பண்கள் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். முழு வடிவமும், முழுமையான அகல நீளமும் கொண்ட தாய் இராகங்களைப் பண்கள் என்றும், இவற்றிலிருந்து பிறக்கிற சேய் இராகங்களைப் பண் திறம், பண்திறத் திறம் என்றும் நம் முன்னோர்கள் அழைத்தார்கள். பண் கலந்த பாடல்களைப் பண்ணத்தி என்று தொல்காப்பியர் கூறுகிறார். இந்தச் சொல்லுக்குப் பொருள் கூறுகிற இளம்பூரணர் பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்களே பண்ணத்தி என்கிறார். அதோடு இந்தப் பண்ணத்திப் பாடல்களுக்கு உதாரணமும் கூறுகிறார் இளம்பூரணர். ''அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலான இசைத்தமிழில் ஓதப்படுவன'' என்று சான்று செப்பி விளக்கம் சொல்கிறார் இளம்பூரணர். பண்ணத்திக்கு உரைவிளக்கம் செய்கிற பேராசிரியர் கூறுகிறார்: ''அவையாவன, நாடகச் செய்யுளாகிய பாட்டும், மடையும், வஞ்சிப் பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலியன.'' இது தொல்காப்பிய உரையிலே பேராசிரியரின் விளக்கம்.

ஆகவே கீர்த்தனங்கள், பதங்கள் என்பது போலப் பண்ணோடு கலந்த இந்த வகையான இசைப் பாடல்கள் சங்க காலத்து நாடக அரங்குகளிலும், இசை அரங்குகளிலும், ஏராளமாக வழங்கி வந்தன என்றும், இலக்கண நூலிலே இவற்றுக்குச் சூத்திரம் வகுக்க வேண்டிய அளவுக்கு அவை வழக்கத்தில் இருந்தன என்றும் அறிகிறோம்.

பரிபாடல் போன்ற பழைய நூல்களில் வருகிற பண்கள் தவிர, இவ்வகையான பண்ணத்திகள் நாடக நடன, இசை அரங்குகளிலும், ஆலய வழிபாடுகளிலும் ஏராளமாக வழங்கி

வந்திருக்கின்றன. நடனங்களுக்குரிய பல பல தாளக்கோவைகளும், சொற்கட்டுகளும், இசைத் துணுக்குகளும் எல்லாமே சேர்ந்து, தமிழிசை மரபை வளப்படுத்தின. உருப்படி என்று நாம் சொல்லுகிற சொல் ''உருக்கள்'' என்றே பழந்தமிழ் நூல்கள் அழைக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்து ஒருமித்து வளர்ந்த கலையே தமிழ் நாட்டின் இசை நெறியாகும்.

''பேணி இசை வளர்க்கும் நந்திபெம்மான் பேரரங்கு''

என்று நந்திவர்மபல்லவனுடைய இசை அரங்கத்தை வர்ணிக்கிறது நந்திக் கலம்பகம். சங்கீதம் என்ற கலை, அரச ஆதரவில் எப்படிப் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டது என்பதையே இது போன்ற குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன. அரசவைகளிலும், நாடக மேடைகளிலும், நாட்டிய அரங்குகளிலும், தேவாரத்தையா பாடி வந்தார்கள்? தேவாரத்தில் உள்ள பண்கள் மட்டுந்தானா இங்கெல்லாம் வழங்கிவந்தன? இல்லவே இல்லை!

'பல்லியம் என்ற பழைய சொல் இசைக்கருவிகளைக் குறிக்கிறது. இத்தகைய வாத்திய இசையிலும் பண்கள், பண்திறங்கள், பண்திறத் திறங்கள் கற்பனை வளத்தோடு வழங்கி வந்தன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

''சேணுயர் நெறிமுறை திறம்பல் இன்றியே

பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணுடை வீணை''

என்பது கம்பர் பாடல். வீணையிலே எப்படிப் பண்கள் செம்மையோடு ஒலித்தன என்பதைக் கவிச்சக்கரவர்த்தியின் இந்தப் பாடலிலே பார்க்கிறோம்.

தேவாரங்களிலும் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களிலும் வழங்கி வருகிற பண்முறை சில தனிப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. வேதத்தை ஓதுவதற்கு ''சிக்ஷா'' என்று இருப்பதுபோல, ''கட்டளை'' என்ற ஒருமுறை இந்தப் பதிகங்களை நெறிப்படுத்தியிருக்கிறது. மற்ற இசைப் பாடல்கள் எல்லாம் நடனமுறை என்றும், நாடக மரபு என்றும், இசை வழி என்றும் பல பெயர்களில் அழைக்கப்பெறுகிற நெறிமுறையிலே பாடப்பட்டு வந்தன.

வங்கியம் என்றும் ஏழில் என்றும் அந்தக் காலத்தில் அழைக்கப்பட்ட கருவியே நாகஸ்வரம், இந்த நாகஸ்வரம் தமிழ் நாட்டின் தனிப்பெரும் சிறப்புக்கு உரிய வாத்தியம், இதிலும் புல்லாங்குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளிலும், பல்வகை யான தாள அடைவுகளையும், வரிசைகளையும் நெறிப்படுத்து கிற முழவின் வகைகளிலும், குரலிசையோடு சேர்ந்து நம் இசைக் கலையின் நெறிமுறைகள் வளர்ந்தோங்கிக் கிளைவீசிப் படர்ந் திருக்கின்றன.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஓர் அரிய ஆராய்ச்சி நூல் வெளியிட்டிருக்கிறார்கள். "கர்நாடக சங்கீத ராகங்கள்" என்று பெயர். இந்த நூல் எந் தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் தமிழகத்தின் இசை மர பாகிய தமிழிசையின் நெறி முறைகளைத் தக்க ஆதாரங்களு டன் விளக்குகிறது. தமிழிசை என்றால் தேவாரத்தில் வழங் குகிற பண்கள் மட்டுமே என்று தவறாக எண்ணுகிறவர்கள் இந் நூலைப் படித்துப் பார்க்க வேண்டும்.

தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் இசையானது கலையின்பத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு தோன்ற வில்லை. இந்த மறைப் பாடல்களின் ஆதார சுருதி பக்தியாகும்- இறையுணர்வாகும். பாடுகிற கலைஞருக்கும், கேட்கிற ரசிகருக் கும், இருசாராருக்குமே இந்த இசை தருகிற அடிப்படையான சுவை, பக்திச் சுவையாகும். எட்டுச் சுவைகளையும் தாண்டி அவற்றுக்கு அப்பாலும், அவற்றை உள்ளடக்கியும் நிற்கிற சமன் அல்லது சாந்தமாகிய ஒன்பதாவது சுவை, இந்தப் பக்திப் பண் களின் இசைக் கலைக்கு அஸ்திவாரமாகும். இந்தப் பயபக்தி யோடு கூடிய உணர்வை, நம் பழந்தமிழ் இலக்கண ஆசிரியர், கள் "உட்கு" என்ற ஒரு பழைய தமிழ்ச் சொல்லால் அழைக் கிறார்கள். "உட்கு" என்பதே, இந்த இசையின் உயிர்நாடி யாக ஒலிக்கிறது.

நம் நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஞானத் துறை யிலே அநுபூதி பெற்ற மகான்கள் என்பதோடு கூட இசை துறையிலும் ஆற்றல் நிரம்பிய கலைஞர்கள். தியாகராஜர், முத் துசுவாமி தீக்ஷதர் போன்ற இசை மேதைகளும் அப்படியேதான். இவர்கள் எல்லாம் மொழிப் புலவர்களோ அல்லது இசைப் புல வர்களோ மட்டும் இல்லை. அவர்களை வாக்கேயகாரர்கள்

என்று அழைக்கிறோம். அதாவது கவிக்கலையும் இசைக்கலை யும் இரண்டும் இணைந்து செயற்படுகிற அரிய வாக்குப் பெற் றவர்கள் அவர்கள். சொல் முந்தியதா அல்லது இசை முந்தியதா என்று சொல்லமுடியாதபடி இரண்டும் சேர்ந்து ஒரே நோக்கில் தோன்றுகிற வல்லமை படைத்தவர்கள் இவர்கள். இப்படிப் பட்டவர்களின் பாடல்களிலெல்லாம் இசைக்கு எவ்வளவு முக்கி யம் உண்டோ அவ்வளவு முக்கியம் சொல்லுக்கும் உண்டு. ஒன் றைவிட ஒன்று உயர்ந்தது என்றோ, ஒன்றைவிட ஒன்று தாழ்ந் தது என்றோ சொல்ல முடியாதபடி ஒருடல் ஒருயிராகப் பிறந்த பாடல்கள் அவை. நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கீத மும் மூர்த்திகள் ஆகியோர் அருளிய பாடல்கள் எல்லாம் இசையை யும் சொல்லையும் இணைபிரிக்க முடியாதபடி ஒருமித்துப் பிறந்த இன்கவிகள் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் சொல் தருவதும், அதற்கு மற்றொருவர் இசை தருவதும் பிசகில்லை. அடியார்க்கு நல்லாரே இந்த மரபுக்கு இலக்கணம் வகுக்கிறார். என்றாலும், இப்படி இரண்டு கலை ஞர்கள் ஒத்துழைப்பதற்கு அவசியம் இல்லாதபடி, சொல்பிறந்த போதே அதன் இசையும் பிறந்து இசை வடிவிலேயே தோன் றிய பாடல்களே திருமுறையும் திவ்வியப் பிரபந்தம் முதலிய பாடல்களும். சொல்லின் தந்தையே இசையின் தந்தையாகவும் திகழ்கிறார்.

திருமுறைப் பண்களின் ஒலி அமைப்பிலே பன்னிரண்டு இசையியல்புகள் பொருந்தியுள்ளன. அந்தப் பாடல்கள் தோன் றிய போதே இந்தப் பன்னிரண்டும் அவற்றோடு இரண்டறக் கலந்து அமைந்து விட்டன. அந்தப் பன்னிரண்டு எவை என் றால் முதல், முறை, முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு மெலிவு சமன், வரையறை, நீர்மை, நிறம் ஆகியவை.

முதல் என்பது இந்தப் பண் சுமந்த பாடல்களை எந் தச் சுவரத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்கிற ஆதார நிலை. இதற்குத் தமிழாசிரியர் கூறுகிற பெயர் முதல் என்பது. முடிவு என்று சொல்வது இந்தப் பண்களிலே உள்ள, 'நியாசங்கள்" என்று இக்காலத்தில் அழைக்கப் பெறுகிற. அழுத்த நிலைகள். அந்தந்தப் பண்களின் உயிர் ஊற்று இந்த ஒலி நிலைகளிலே தான் தனித்தன்மையோடு சுரக்கிறது. ஒரு பசுவுக்குப் பால் சுரக்கும் இடம் முழங்கால் இல்லை, கொம்பு இல்லை. மடி யிலே கறந்தால் பால் சுரக்கிறது. இப்படியேதான் ஒவ்வொரு

இராகத்துக்கும் மடி என்ற சுவையுணர்வின் ஒலிச்சுரப்பு இருக்கிறது. அந்த இடத்திலே குரலை அழுத்தும் போது அல்லது இசைக்கருவியிலே அழுத்தம் கொடுக்கும் போது அந்தஇராகத்தின் ஜீவன் அதன் உயிர்நிலையிலே ரச ஊற்றாகச்சுரக்கிறது.இந்த ஊற்று ஒவ்வொரு ராகத்துக்கும் ஒவ்வொருதனித்தன்மையோடுகூடியது. இந்த அழுத்தநிலையைத்தான் தமிழ்நாட்டுஇசைவாணர்கள் முடிவு என்ற சொல்லால் அழைத்தார்கள். வடமொழியில் உள்ள சங்கீத சாத்திரங்களில் ராக லக்ஷணங்களைக் கூறும்போது பஹுத்வம் அல்பத்வம் என்று இரண்டு சொல்வார்கள். இவையே அந்தக்காலத்துத் தமிழ் இசைப் புலவர்களால் நிறை குறை என்று அழைக்கப்பெற்ற பழந்தமிழ் இலக்கணச் சொற்கள். இவற்றைப்போலவே மந்தரம் தாரம் என்றும் இரண்டு பண்புகள் பேசப்படுகின்றன. இவையே மெலிவு, வலிவு என்று யாழின் மறை நூல்களான பழந்தமிழ்ச் சுவடிகள் பேசுகின்றன. கிழமை என்பது பண்களின் ஜீவசுரம். சமன் என்பது சமசுரங்கள். வரையறை என்பது இராகங்களின் ஆரோகண அவுரோகணக் கிரமங்களில் ஒரு பண்ணை இன்னொரு பண்ணோடு மயங்காமல் காக்கிற கட்டுப்பாடு! முறை என்பது நாதம் ஒலிக்கிற பாங்கிலே அளவுகளை இயக்குகிற ஒலிச் சட்டமாகும். இவையெல்லாவற்றையும் விட மிகவும் சிறப்பான ஒரு தன்மை திருமுறைப்பண்களுக்கு உண்டு. அதை ''நீர்மை'' என்று அழைத்தார்கள். நீர்மை என்பது ஒவ்வொரு பண்ணுக்கும் உள்ள தனித்தன்மையான சுவையுணர்வு. ஒரு பண் ஒலிக்கும் போது அதைக் கேட்பவர்களின் உள்ளத்தில் அப்போது தோன்றுகிற சுவையின் துடிப்பு, ரசானுபவம் இருக்கிறதே, இதையே ''நீர்மை'' என்ற சொல்லால் அழைக்கின்றன பழந்தமிழ் இசைச்சுவடிகள். இந்த நீர்மையின் நுட்பத்தை அடிக்கோடு போட்டுக்காட்டுவதுபோல அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் ஓர் இடத்தில் சொல்கிறார்: ''உருக்களை (அதாவது உருப்படிகள் என்று இன்று நாம் அழைக்கிற இசைப்பாடல்களை) இசை கொள்ளும் படியும் இரதம் பொருந்தும் படியும் புணர்க்க வேண்டும். ''இது அடியார்க்கு நல்லாரின் வாக்கியம். இப்படி இசை பொருந்தி அமையும் போது அதன் ''நீர்மை'' முழு ஆற்றலும் பெறுகிறது. இந்த நீர்மை கெடாமல் சொற்களுக்குள்ளே இராகம் இசையும் போது தாள இயலிலே அதைப் பொருத்துகிற ஆற்றல் இருக்கிறதே, அதற்கு ''நிறம்'' என்று பெயர் தந்தார்கள் நம் முன்னோர்கள்.

இந்தப் பன்னிரெண்டு பண்புகளும் ஆழ்வார்களும் நாயன் மார்களும் அருளிய இசைப்பாடல்களில் ஈராறு கண்களோடு நின்று ஒளிவீசுகின்றன. சொற்களுக்குள்ளே கண் வளர்கிறஇசை ஊற்று பன்னிரெண்டு ஊற்றுக்கண்களிலே பொங்கிச் சுரந்து இசை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடி வருகிறது. இதுவே இந்தத் திருமுறைப் பாடல்களின் உயர்தனிப் பெருமை.

இந்தப் பன்னிரெண்டு பண்புகள் தவிர இந்தப் பாடல் களின் எழுத்து இயலிலுமே இசையின் இயக்கத்திற்குச் சில விதி முறைகள் அமைந்துள்ளன.

தமிழ் எழுத்துக்களின் ஒலி நீளத்துக்கு அளவைகளாக மாத்திரைகளின் கணக்கை அறுதியிடுகிற தொல்காப்பியர் இந்த மாத்திரை அளவுகள் இசைப்பாடல்களிலே மட்டும் வேறு வித மாக இருக்கும் என்று ஒரு சூத்திரத்தில் மொழிகிறார்.

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப; இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்!

என்கிறார். ''சிவணிய'' ''நரம்பின மறைய'' என்றெல் லாம் ஒரே சங்கீத இனிமையோடு இந்தச் சூத்திரமே ஒலிக்கி றது. இலக்கிய முறையிலே எழுத்துக்களுக்குச் சொன்ன மாத்தி ரைகள், இசைப்பாடலில் வேறுவிதமாக இருப்பதை, உயிர் எழுத்துக்களுள் மெய்எழுந்துக்களும் நீண்டு ஒலிப்பது உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

இந்த எழுத்தொலி மாறுபாடு தவிர, சொற்கள் தங்கள் மிடுக்கிலும் வேகத்திலும் தாள இயலினால் மாறுபாடுகள் கொள்வது இசைப்பாடலின் இன்னொரு தனிப்பண்பு. இனி, உயிர்நிலையான சுரங்கள் உயிர் நிலையான சொற்களிலே தோயும் வண்ணம் அமைவது இன்னொரு சிறப்பு. அதோடு வேறொரு பெருமையும் தேவார திவ்வியப் பிரபந்தப் பாடல் களுக்கு உண்டு. அதாவது பாடல் தோன்றுகிற திணை, காலம், ஆகியவற்றுக்குப் பொருந்துகிற பண்ணிலே இந்தப் பாடல்களின் இசை அமைந்திருக்கும். அதோடு கூட, அந்தப்பாடலின் யாப் பிலே உள்ள ''ரிதும்'' என்கிற தாள இயலோடு, பண்ணின் தாளமும் இணைந்து இயங்கும்.

திருமுறைப்பாடல்களின் அடிப்படையான நாதம், இறை யுணர்வாக இருப்பதால் இந்தப் பாடல்களின் அமைப்பிலே இத்

PUBLIC LIBRARY
JAFFNA.

தனை இயல்புகளோடு இன்னொரு உயர் தனி இயல்பு, இவற்றுக்கு என்றே அமைந்த ஒப்பற்ற சிறப்பாக விளங்குகிறது. அதுவே இந்தச்சொற்களுக்குள்ள மந்திர ஆற்றல்.

வியாழக்குறிஞ்சி, என்று ஒரு பழைமையான பண் இருக்கிறது. இது ஒலியின் சட்டத்திலே தனியான ஆற்றல் கொண்ட ஒலிக்கோவை. இது போலவே அந்தாளிக் குறிஞ்சி என்று ஒரு பண். இந்த இரண்டும் இக்காலத்தில் ஸௌராஷ்ட்ரம் என்றும், சாமாராகம் என்றும் வழங்குகிற ராகங்கள். இந்தவியாழக்குறிஞ்சி அந்தாளிக்குறிஞ்சி முதலிய பண்களை மந்திரப் பண்கள் என்றே அழைப்பதுண்டு. இன்று விஞ்ஞான இயலிலே மிகவும் முன்னேறியுள்ள ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒலியின் ஒரு குறிப்பிட்ட வடிவத்துக்கு எத்தகைய பேராற்றல் இருக்கிறது என்பதை நவீனக் கருவிகள் கொண்டு ஆராய்ந்து (Suggestopaedia) 'ஸஜஸ்டொபீடியா' என்ற விஞ்ஞானத் துறையை வளர்த்து வருகிறார்கள். அத்தகைய ஆற்றலுடைய இத்தகைய பண்களிலே "ஆணையிற் கிளந்த மறை மொழி" என்று சொல்லப்படுகிற பாடல்கள் எழுந்துவரும் போது அவற்றின் ஆன்ம வல்லமை திகரற்று ஒளி வீசுகிறது.

இத்தகைய இசைப்பண்பும் இலக்கியப் பண்பும் இணைந்த அரிய பாடல்கள் ஆயிரக்கணக்காக நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள் நம் தந்தையர்கள். இவையெல்லாம் நிலையான மேன்மையும், விலைமதிப்பற்ற பெருமையும் கொண்ட இசைச்சுரங்கங்கள்!

இந்த இசைச்சுரங்கங்கள் அனைத்தும் சேர்ந்த இசைப் பண்ணையே தமிழிசை என்பது. அது தமிழகத்தின், தமிழ் மக்களின் இசை!

"ட்யூட்டிகோரின்" என்றும் "ட்ராங்க்குபார்" என்றும் "போர்ட்டோ நோவோ" என்றும் பெயர் சூட்டிவிட்டால் நம் தமிழ் ஊர்கள் இங்கிலாந்து ஆகிவிடுமா? இன்றைய இசையுலகில் வழங்கி வருகிற ராகப் பெயர்களும், பிற இசைச் சொற்களும் இதே கதைதான் என்பதை மறந்து விடக் கூடாது. தமிழிசைச் சங்கத்தின்பண் ஆராய்ச்சி அரங்கிலே கடந்த அருபத்தைந்து ஆண்டுகளாக சங்கீத வித்வான்களும் தமிழ்ப் புலவர்களும் கலந்து நடத்தி வந்துள்ள ஆராய்ச்சியின் விளைவாக தேவாரத் திருமுறையில் வழங்கி வருகிற சாதாரி முதலிய இருபத்திரெண்டு பண்களும் இன்று வேறு பெயரில் வழங்கி வருகிற பந்துவராளி முதலிய நம்முடைய கர்நாடக சங்கீத ராகங்களே

என்பதைச் சந்தேகமின்றி முடிவு கட்டியிருக்கிறார்கள். இந்த முடிவு மேற்சொன்ன உண்மையை உறுதிப்படுத்துகிறது.

தமிழிசை, எங்கும் போய் விடவில்லை. அது அழிந்து விடவில்லை. திருமறைக்காடு வேதாரண்யம் ஆகியிருக்கிறது. அவ்வளவே!

வானம் போன்று விரிந்ததும் கடல் போன்று ஆழமானதும். இந்த நிலவுகம் போன்று தொன்மையானதும் ஆகும் தமிழிசை. அது தேவாரம் மட்டுமில்லை. நாகஸ்வரம், வீணை நாடக மேடை, நாட்டிய அரங்கம், அரசதை என்று கிளை வீசி விழுது விட்டுப் படர்ந்த ஆலமரம். அது சாதி சமய வேறுபாடின்றித் தமிழர்களாகிய நம் அனைவருக்கும், சொந்தமான மரபுவழிச் சொத்து! அதைப் பாதுகாத்துப் பேணுவது தமிழ் நாட்டின் வழித் தோன்றல்களாகிய பொது மக்களின் கடமையும் பெருமையும் உரிமையும் ஆகும்.

---

தொலைக்காட்சி அறிவு வளர்ச்சி சாதனமென்பதில் சந்தேகமில்லை. எங்கள் வீட்டில் யாராவது தொலைக்காட்சியைப் பார்க்க ஆரம்பித்தால் நான் பக்கத்து அறைக்குச் சென்று புத்தகம் படிக்க ஆரம்பித்துவிடுவேன்.

- க்ரௌச்சோ மார்க்ஸ்

# போருக்காக ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் திங்களொன்றுக்கு 1,877-/ ரூபாவைச்செலவு செய்கின்றான்

- கருணா நிக்கசெற்றிய

(சண்டே ரைம்சு- 2-5-93)

வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் போரைத் தொடர்ந்தும் நடாத்துவதால் ஏற்படும் செலவினத்தை நாம் எவ்வளவு காலம் தாங்கிக்கொள்ள முடியும்? மக்களின் இழப்பும், பணச் செலவினமும் ஆண்டுதோறும் கூடுகின்றதே தவிர நிரந்தரமான சமாதானத்தை எட்டுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

இந்தப்போரை நிறுத்தவேண்டுமென பெரும்பாலான மக்கள் விரும்பிய போதிலும், தனிமனிதர்களான அவர்களால் இதைச் செய்யவியலாது இருக்கின்றது. இந்தப்போரை ஒரு முடிவுக்குக்கொண்டுவர உண்மையாகவே அரசியல் வாதிகள் முயல்கின்றார்களா? எனப்பலர் கேட்கின்றார்கள். நாடு எதிர்கொள்ளும் மற்றைய சிக்கல்களிலிருந்து மக்களைத் திசை திருப்புவதை நோக்கமாகக்கொண்டு அனைத்துக்கட்சிகளின் தலைவர்களும் போரை ஆயுதமாகப்பயன்படுத்துவதாக மக்கள் கருதுகின்றார்கள். செல்வாக்கான சிலர் போர் மூலம் பணம் சம்பாதிக்கின்றார்கள். இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வொன்று காணப் போவதாகப் பெரிதாக இப்போது பேசப்பட்ட போதிலும், நடைபெறவிருக்கும் தேர்தலை மனதில் கொண்டே இப்படிப் பேசப்படுகின்றது எனச்சிலர் கருதுகின்றனர்.

இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் இந்தப்போருக்காக மனித வளத்தையும், பணத்தையும் செலவிடுகின்றான். இப்போரினால் ஏற்படும் பாரிய இழப்புக்களை நாம் கருத்தில் கொள்வோமாகில், செயல்திறன் வாய்ந்த தீர்வு ஒன்றைக்காண

உடனே நடவடிக்கை மேற்கொள்ளுவோம் என்பதனாலேயே இந்தப் போரைப்பற்றி மேலும் எழுத வேண்டியுள்ளது.

## மனித இழப்பு

6000க்கும் மேற்பட்ட பொதுமக்களும், படைவீரர்களும் இந்தப் போரின் காரணமாகச் சென்ற ஆண்டு சாவைத் தழுவிக்கொண்டார்கள். இப்படியாகச் சாவைத்தழுவிய ஒவ்வொருவரும் யாரோ ஒருவரின் மகன் அல்லதுமகள், கணவன் அல்லது மனைவி, தந்தை அல்லது தாயாக இருந்திருப்பார்.

மேலும் 6000 பேர்வரை காயமடைந்ததுடன், அவர்களில் பலர் நிரந்தர ஊனத்துடன் வாழ்வதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டியுமுள்ளது.

இலங்கைக்குள் ஏற்கனவே இடம்பெயர்ந்த 500,000க்கும் அதிகமான மக்களுடன், மேலும்பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் அநேகர் தங்கள் குடும்ப உறுப்பினர் சிலரையும், தங்கள் சொத்துக்களையும் இழந்ததுடன் வாழ்க்கை நடாத்துவதற்கான தங்கள் வசதிகள் யாவற்றையும் இழந்துள்ளனர்.

வடக்கிலும், கிழக்கிலும் தங்கள் வதிவிடங்களைக் கொண்டவர்கள், குறிப்பாக இப்பொழுதும் அங்கு வாழ்பவர்களே பெரும்பாலும் மனித இழப்புக்கு ஆளாகின்றார்கள். போராளிகளைச் சேர்க்கவிரும்பும் தீவிரவாதக்குழுக்களால், இழப்பைச்சந்திக்கும் இந்தப் பொதுமக்களை அனுகக்கூடியதாகவிருக்கின்றது. காப்புப்படைவீரர்களதும், அவர்களுடைய குடும்பங்களதும், நண்பர்களதும் மனித இழப்பு மூலமே தெற்கிலுள்ள மக்கள் பாதிப்படைகிறார்கள்.

ஜாதிக விமுக்திப் பெரமுனையின் நடவடிக்கையைத் தொடர்ந்தும், இனச்சிக்கல்களால் தோன்றிய வன்முறைகளைத் தொடர்ந்தும் கடந்த 10 ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் பாரிய மனித இழப்புகள், மக்கள் கொல்லப்படுவதையிட்டும், காயப்படுத்துவதையிட்டும் பொதுமக்கள் பழக்கப்பட்டு விட்டார்கள் என்பதைஎடுத்துக்காட்டுகின்றது. வன்செயல்கள் காரணமாகத் தாங்கள் நேரடியாகப் பாதிப்படைந்தாலொழிய வன்முறையைப் பற்றிய செய்திகளையிட்டு மக்கள் அக்கறை காட்டுவதில்லை. இந்தப் போருக்காக இலங்கையிலுள்ள ஒவ்வொரு

குடும்பமும் எவ்வளவு பணத்தைச் செலவிடுகின்றது என்பதைத் தெரியப்படுத்தினால் ஒருவேளை இவர்கள் இதில் அக்கறை கொள்ளக்கூடும்.

## பொருளாதார ரீதியான செலவினங்கள்

உத்தேச மதிப்பீட்டின்படி, மறைமுகமாகவும், நேரடியாகவும் போருக்காக 1992 ஆம் ஆண்டில் செலவு செய்த செலவினம் 81 பில்லியன் ரூபாவாகும். (81, 000,000, 000, ரூபா)

| நேரடிச்செலவினம் | எவ்வளவு மில்லியன் |
|---|---|
| (சமாதான காலத்தய காப்புச் செலவினங்களை உள்ளடக்காத) இலங்கையின் காப்புச்செலவினம் | — 23.0 |
| தமிழ் மற்றும் முஸ்லிம் குழுக்களின் காப்புச்செலவினம் (மேலே கூறப்பட்டதன் 30% விகிதம் என மதிப்பீடு செய்யப்பட்டது.) | — 6.9 |
| கொல்லப்பட்ட அல்லது காயப்பட்டவர்களுக்கான நட்டஈடு | — 0.4 |
| இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்கல் மேற்கொள்வதற்கான செலவினம் | — 2.4 |
| புதிதாக இடம்பெயர்ந்த 50,000 பேரையும் எதிர்காலத்தில் மீளக்குடியமர்த்துவதற்கான செலவினம் | — 1.0 |

### ஒவ்வொரு தனிமனிதனின் உற்பத்தித்திறன் தலா 24,166 ரூபாய் எனக்கணிக்கப்பட்ட மறைமுகமான செலவினம்.

| | |
|---|---|
| இலங்கைக்குள் இடம்பெயர்ந்துள்ள 600,000 பேரின் உற்பத்தித்திறன் சமாதான காலத்தினது போலல்லாது அரைவாசி குறைக்கப்பட்டு அல்லது இல்லாத தாக்கப்பட்டு உள்ளதால் | — 7.2 |

வடக்கிலும் கிழக்கிலும் தங்கள் வாழ்க்கைக்கான
தொழில்முறைகளை இழந்துள்ள மக்கள் (இப்படியான
வர்கள் 700,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது)- — 16.9

ஏதிலிகளாக இலங்கைக்கு வெளியேயுள்ள மக்கள்
(தென்னிந்தியாவில் 200,000 மேற்குநாடுகளில்
200,000)- — 9.7

இலங்கைக்கு வெளியே வாழ்ந்துவருகின்ற போதிலும்
மீண்டும் இலங்கைக்கு வரக்கூடிய மக்கள் (மதிப்பீடு
220,000) — 5.3

இலங்கை படையத்தில் அதிகரிக்கப்பட்ட படையினர்
65 000, விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய குழுக்களில்
அதிகரிக்கப்பட்ட போராளிகள் 30,000 — 2.3

போர் காரணமாக உல்லாசப்பயணிகள் இங்கு வராத
தினால் இழந்த வருமானம்.
மதிப்பீடு செய்யப்பட்ட உல்லாசப் பயணிகளின் எண்ணிக்
கையான 293, 867x20, 320 ரூபாய்கள் 6.0

81.1

இந்த எண்கள் சரியானதா எனக்கேட்கும் உரிமை எவ ருக்கும் உண்டாகிலும், குறைவான எண்களே இங்கு தரப்பட் டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். அழிவுக்குள்ளான சொத்துக்களினதும், கட்டமைப்புகளினதும் பெறுமதி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவரும் 800,000 பேரின் உற்பத்தித்திறன் குறைக்கப்பட்டமை. அரச சார்பற்ற நிறுவனங் களின் துயர்துடைக்கும் பணி மற்றும் புனர் நிர்மாண வேலை, சமாதானப்பேச்சுவார்த்தைகள், வெளிநாடுகளில் உள்ள இராச தந்திர சேவைக்கு ஏற்பட்ட அதிகப்படியான செலவினம், நாட் டிலுள்ள திறமைசாலிகள் மற்றும் தேர்ச்சி பெற்ற மனித ஆற் றல்களின் இழப்பு ஆகியவை இங்கு மதிப்பீடு செய்யப்பட வில்லை. வளைகுடா நாடுகள் மற்றும் மேற்குலக நாடுகளி லிருந்து பெறப்படும் வெளிநாட்டுப்பணம். எங்கள் வெளிநாட் டுக்கையிருப்பை அதிகரிக்க உதவுவதால், எங்கள் மக்களின் ஒரு பகுதியினர் வெளிநாடுகளில் இருப்பது எங்களுக்கு நன்மையயப் பதாக இதைச் சமன்படுத்த முயலும் சிலர் கூறக்கூடும்.

இந்தப்போரில் ஏற்படும் செலவினத்தை நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் ஏற்கின்றார்கள். வருமான வரி மீதான தண்ட வரி, தொழில் தாபனங்களில் உற்பத்தி மீதானவரி, இறக்குமதி வரி, ஏற்றுமதிப்பொருட்கள் மீதானவரி, கடன்கள் மீதானவரி போன்ற நேரடியான மற்றும் மறைமுகமான வரிகள் மூலம் இந்தப் போராட்டத்திற்கான நிதியை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்கின்றது. வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நிறு வனங்கள் பெறும் இலாபத்தின் ஒரு விகிதம், வட மாகாணத்தை விட்டு வெளியே செல்லும் பயணிகளுக்கு வழங்கப்படும் அனுமதி மூலம் பெறப்படும் பணம் ஆகிய நேரடியான மற்றும் மறை முகமான வரிகளை வடக்கிலும் கிழக்கிலும் அறவிடுவதன் மூல மும், போக்குவரத்துச்சேவைகள், வெளிநாடுகளுக்கு மக்களை அனுப்பிவைத்தல், போதைமருந்து மற்றும் வாகன விற்பனை கள், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சிகள், வெளிநாடுகளில் முக்கியமாக மேற் குலக நாடுகளிலும், வளைகுடா நாடுகளிலும் திரட்டப்படும் நன்கொடைப்பணம் ஆகியவைகள் மூலமும் பெறப்படும் நிதி மூலம் தீவிரவாதிகள் தங்கள் செலவினத்தை ஈடுசெய்கிறார்கள். இது எதை எடுத்துக்காட்டுகின்றது?

இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் போரின் செல வினத்திற்காக தலா 22,528/- ரூபாயை 1992 ஆம் ஆண்டில் அல்லது ஒவ்வொரு திங்களும் 1,877 ரூபாயைக் கொடுத்து உதவி யுள்ளது.

போர் தோற்றுவித்த பற்றாக்குறை மற்றும் பலவரிகள் காரணமாக விலை அதிகரித்துள்ள உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகத்தங்களின் வருமானத்தில் பெரும் பகுதியைச்செலவிடும் ஏழைமக்களே போருக்கான பாரிய செல வினத்தால் அல்லலுறும் மக்களாகும். தாங்கள் உயிர் தப்பி வாழ்வதற்குத்தேவையான அத்தியாவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணத்தைப்பெறுவதற்காக வடக் கிலும், கிழக்கிலும் வாழும் மக்கள் தங்கள் உடைமைகளை விற்க அல்லது ஈடுவைக்க வேண்டியுள்ளது. போர் ஒரு முடிவுக்கு வந்தாலும் கூட உடைமைகள் இல்லாதுவிடின் இந்த மக்கள் தங்கள் சாதாரணமான வாழ்க்கையை ஆரம்பிக்கஇயலாதிருப்பர்.

வறுமையான நாடாகிய இலங்கை 81 பில்லியன் ரூபாய் களைப்போருக்காகச் செலவு செய்வது நாட்டின் முழுமொத்த உற்பத்தியின் 19% விகிதத்தை செலவு செய்வதாக இருக்கும்.

அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட 1993 ஆம் ஆண்டிற்கான செலவினம் 127 பில்லியன் ரூபாய்களாகும். 1992 ஆம் ஆண்டின் முதல் 9 திங்களில் அரசாங்கத்தின் மொத்தக்கடன் 32 பில்லியன் ரூபாய்களால் அதிகரித்திருந்தது.

தெற்கில் 1992 ஆம் ஆண்டில் 14.20% விகித பண வீக்கம் ஏற்பட்டதென தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. போரின் காரணமாகவும், உலகவங்கி தன் கட்டமைப்பை மாற்றியமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவுமே இப்பணவீக்கம் ஏற்பட்டதென மக்கள் குறை கூறுகின்றார்கள். ஆனால் இதற்கு முக்கியமான காரணமாகவிருப்பது போரே. சமாதானம் ஏற்படுமேயானால் காப்புக்காகச் செலவிடப்படும் நிதி சேமிக்கப்படுவதைத்தொடர்ந்து உற்பத்தி பெருகுவதுடன் வெளிநாட்டு முதலீடும் அதிகரிக்குமாகையால் உலக வங்கியிடமிருந்தும், அனைத்துலக நாணய நிதியத்தினரிடமிருந்தும் பெருந்தொகையான நிதியைக் கடனாகப் பெறவேண்டிய அவசியம் ஏற்படாது. இலங்கைக்குப் பயன்தரக்கூடிய பொருளாதாரக் கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டுமேயல்லாது மேற்குலக நாடுகளுக்கும், உலக வங்கிக்கும் பயன்தரக்கூடியவைகளே அல்ல. அத்துடன் நடைமுறையிலுள்ள கட்டமைப்பை மாற்றியமைப்பதனால் ஒரு சமூகத்திலுள்ள ஏழைமக்களே அதிக துன்பங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.

ஜனசவிய போன்ற திட்டங்கள் மூலம் தெற்கிலுள்ள ஏழைக்குடும்பங்களுக்கு உதவுவதாகக்கூறுவதும், சிங்களவர்களின துமான அரசாங்கம், போரைத்தொடர்வதன் மூலம் அந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை இல்லாதாக்குவதும், ஏழைமக்களைப் போருக்கு உதவி வழங்கச் செல்வதும் கேலிபான விடயமாகும். கடந்த 20 ஆண்டுகளில் சிற்றூர்களில் ஏழைமக்கள் கூடியுள்ள 5 நாடுகளில் இலங்கையும் ஒன்று என விவசாய முன்னேற்றத்திற்கான அனைத்துலக நிதியம் கூறுகின்றது.

---

எல்லாமே முன்பு சொல்லப்பட்ட விஷயங்கள்தான். ஆனால் யாரும் அதைக்கேட்காததனால் மீண்டும் பின்னாலே சென்று முதலிலிருந்து அதைச்சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆந்த்ரே மீட்

# திரு. லலித்தின் கொலை புதிராகவே உள்ளது

(சண்டே ரைம்சு - 2-5-93)

இவ்வாரத்தில் இடம்பெற்ற திரு. லலித்அத்துலத்முதலி அவர்களின் கொடூரமான கொலை காரணமாக நாட்டுமக்கள் அதிர்ச்சியுற்றும் துயரடைந்துமுள்ள இவ்வேளையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள புலன் ஆய்வாளர்கள் இக் கொலைக்கான தடயங்களைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

கிரிலப்பனையில் தனது கட்சியின் பேரணியொன்றில் ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் மாலை 8. 45 மணியளவில் உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான திரு. லலித் அத்துலத்முதலி அவர்கள் கொல்லப்பட்டார். அவர் உரையாற்றத் தொடங்கி ஏழு நிமிடங்கள் கூட ஆகமுன் அவரது வலது புறத்தில் 10, 15 அடி தூரத்திலிருந்த கொலைகாரன் அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளான். தனக்கு ஏற்பட்ட காயத்தின் தாக்கத்தை உணர்ந்துகொண்டு முன்னாள் தேசிய காப்பு மந்திரியான அவர் தன்னைச் சுற்றி நின்றவர்களிடம் 'என்னை விரைவாக எடுத்துச் செல்லுங்கள்' எனக்கேட்டுள்ளார். இருப்பினும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே அவர் இறந்துள்ளார்.

திரு. அத்துலத்முதலியவர்கள் கொலையுண்ட செய்தி பொதுமக்களுக்குத் தெரியவந்ததும் இந்தக் கொலைக்கு யார் பொறுப்பு என்பதையிட்டு குற்றச்சாட்டுக்களும், எதிர்க் குற்றச்சாட்டுக்களும் எழுந்தன. மே திங்கள் 17ஆம் நாள் நடாத்தப்படவிருந்த மாகாணசபைத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டத்தக்க நிலையில் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இருந்த வேளையிலேயே இந்த நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளான மறுநாள் காலை 11மணி யளவில் குப்பை கூழம் அகற்றும் ஒரு நகரசபைத் தொழிலாளி கிரிலப்பனையிலுள்ள முகலன் வீதியில் ஒரு உடலைக்கண்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்த உடலுக்கு உரியவரே திரு. அத்துலத் முதலி அவர் களைக் கொன்றதாக அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்தன. இறந்தவரின் சடலத்துடன் காணப்பட்ட தேசிய அடையாள அட்டையில் ''அப்பையா பாலகிருட்ணன்'' என்ற பெயர் காணப் பட்டது. தொடர்பு சாதனங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்தன.

காணப்பட்ட உடலுக்கு உரித்தானவர் ''அப்பையா பால கிருட்ணன்'' அல்ல எனவும், அவருடன் காணப்பட்ட தேசிய அடையாள அட்டை போலியானது எனவும் காவல்துறை விசா ரணையாளர்கள் வெகுவிரைவில் அறிந்து கொண்டார்கள்.இருப் பினும் இந்த விடயம் உடனே வெளியிடப்படவில்லை.

காப்புச் செயலாளரான திரு. சிறில் றணதுங்காவும் காவல் துறை மா அதிபர் ஏர்னர்சு பெரேரா அவர்களும் ஏப்ரல் 26ஆம் நாள் கலந்துகொண்ட கூட்டத்தில் இத்தகவலை எதிர்க்கட்சியின ருக்குத் தெரியப்படுத்தினார்.

எதிர்க்கட்சியினருக்கும் காவல்துறை மா அதிபருக்கும் இடையே முந்தியவாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் திரு. அத்துலத்முதலி அவர்களின் கொலையைத்தொடர்ந்து காவல்துறை மா அதிபரையும் காப் புச் செயலாளரான ஜெனரல் றணதுங்க அவர்களையும் எதிர்க் கட்சியினர் சந்திக்க விரும்புவதாகக் கலாநிதி விக்ரம வீரசூரியா அவர்கள் காப்பு செயலாளருக்குத் தொலைபேசி மூலம் அறிவித் திருந்தார்.

## அரசியல் தொடர்புகள்

இதேவேளையில் இக்கொலையைப் பற்றிய விசாரணையை மேற்கொள்வதற்காக ''ஸ்கொலன்ட் யாட்'' புலனாய்வாளரை (Scotland Yard) அரசாங்கம் அழைத்தது. இந்தச் சந்திப்பின் போது இதைப்பற்றிக் குறிப்பிட்ட கலாநிதி வீரசூரியா அவர் கள், கொலைக்கு 10 நாட்களுக்கு முன் ஸ்கொற்லன் யாட் அழைக்கப்பட்டதென்று ஒரு செய்தி உலாவுவதாகக் கூறினார்.

இதைக்கேட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் துணைக்காவல்துறை மா அதிபர் இக்னேசியசு கனகரத்தினம் உட்பட அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அனைவரும் சிரிக்க ஆரம்பித்ததும் ''விக்கிரமா விளையாட்டுத்தனத்தை விடுத்து விடயத்திற்கு வாரும்'' என ஜெனரல் றணதுங்கா அவர்கள் கூறினார்.

ஒரு கொலைகாரன் தனது அடையாள அட்டையைத் தன்னுடன் எடுத்துச் செல்வான் என்று நினைப்பது விசித்திரமானதென இக்கட்டத்தில் கலாநிதி வீரசூரியா அவர்கள் குறிப்பிட்டார். ''அந்த விடயத்தில் நான் உங்களைத் திருத்தவேண்டியுள்ளது. அது போலியான அடையாள அட்டை'' என காவல் துறை அதிபர் கூறினார்.

இவருடைய இந்தக் கூற்று எதிர்க்கட்சியினரை ஆச்சரியமடையச் செய்தது. ''அப்பையா பாலகிட்ணன்'' என்பவரே கொலைபுரிந்தவரென ஏற்கனவே அரச தொடர்பு சாதனங்கள் தெரியப்படுத்தியுள்ளதால், இந்தச் செய்தியை ஏன் அவர் வெளியிடக்கூடாது என அவர்கள் காவல்துறை அதிபரைக் கேட்டார்கள். தேவையற்று தமிழ்மக்கள் மீது பழி சுமத்தியது எனவும் அவர்கள் கூறினர்.

கொலைஞனின்அடையாளத்தைப்பற்றிய தகவல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குக் காவல்துறையினரால் வழங்கப்படவில்லை எனவும், இந்தத் தகவலை அவர்கள் எப்படிப் பெற்றுக்கொண்டார்கள் என்பது பற்றித் தனக்குத் தெரியாதெனவும் காவல்துறை மா அதிபர் எதிர்க்கட்சியினருக்குக் கூறினார். அடையாள அட்டை விடயம் மறுநாள் வெளியிடப்பட்டது. ஆனால் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டவரை அடையாளம் காணமுடியவில்லை. அதே நேரத்தில் லெப்ரினன்ட் ஜெனரல்டென்சில் கொப்பேகடுவா அவர்களின் கொலைக்குத்தாங்களே பொறுப்பு என உரிமைகோரிய விடுதலைப் புலிகள் திரு. அத்துலத்முதலி அவர்களின் கொலைக்கும் தங்களுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என அறிவித்தனர்.

கொலை புரிந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டவரை இனம் காண்பதில் மாத்திரமல்லாது இவர்தான் அதை உண்மையில் செய்தாரா என்பதிலும் சர்ச்சை தோன்றியுள்ளது.

இதன் காரணமாகவே இந்த விசாரணை செல்லும் திசை கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

கொலை புரிந்தவராகக் கூறப்பட்டவரின் சடலத்தைக் கண்டுபிடித்த சூழ்நிலையையும், இவர் தான் உண்மையான கொலையாளி என நிரூபிப்பதற்காக மேற்கொள்ளும்விசாரணைகளும் எதிர்க்கட்சியினரையும், பொதுமக்களில் ஒரு சாராரையும் சந்தேகமுறச் செய்துள்ளது. இதை உறுதி செய்ததன் பின்னரே இக்கொலையின் பின்னணியில் சதித்திட்டம் எதுவும் இருந்ததா என்பதை விசாரணையாளர்கள் ஆராய்வர்.

கொலை செய்ததாகக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரே திரு. அத்துலத்முதலிஅவர்களைச் சுட்டதாக நேரில் கண்ட சில சாட்சிகள் கூறியபோதிலும் சிலர் அதை ஏற்க மறுத்துள்ளார்கள்.

திரு. அத்துலத்முதலி அவர்கள் உரையாற்றிய கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய திரு. ஏ. ஜி. பிரேமதாசா, 'அப்பையா பாலகிருட்ணன்' என்பவரே கொலை செய்தவரென இனங்கண்டவர்களில் ஒருவராவர். அவர் மேடையின் நடுவில் உட்கார்திருந்தார். தாக்குதலை நடாத்தியவன் நிலத்தில் மேடைக்கு வலது புறமாக நின்றதாகச் சாட்சியம் கூறவந்த அனைவரும் கூறியிருந்தனர். காவல்துறையினருக்குத் தன் வாக்குமூலத்தை முன்னர் கொடுக்க முன்வராத திரு. பிரேமதாசா, கிரிலப்பனையிலுள்ள முகலன் வீதியில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதெனக் கேள்விப்பட்டதும் தன்னிச்சையாக வாக்குமூலம் ஒன்றைக் கொடுக்க முன்வந்தார். அது நடந்தது ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் காலை 11 மணியளவில் ஆகும்.

கொலை செய்தவராகக் கூறப்பட்டவரின் சடலமே அது என்ற திரு. பிரேமதாசாவின் வாக்குமூலத்தை காவல்துறை மேலாளர் பதிவு செய்தார். கொலை இடம்பெற்ற இடமான கிரிலப்பனையில் உள்ள காவல்துறையினராலின்றி வெள்ளவத்தைக் காவல்துறையினராலேயே இந்த வாக்குமூலம் பெறப்பட்டதாகக் கூறப்பட்டது.

கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டவரை இவர் இனங்கண்டதாகத் தொடர்பு சாதனங்கள் தெரியப்படுத்தியதும், சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மூத்த உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்ட திரு. பிரேமதாசா, சடலத்தைத் தான் அடையாளம் காட்டவில்லை எனவும், தான் அடையாளம் காட்டியதாகக் கூறும் காவல்துறையினரின் அறிக்கை தான் கைச்சாத்திட முன்பு தனக்கு வாசித்துக்காட்டப்படவில்லைஎன

வும் கூறினார். தனது கூற்றை மெய்ப்பிப்பதற்காகச் சத்தியக் கடதாசி ஒன்றையும் அவர் சமர்ப்பித்திருந்தார்.

இருப்பினும் அந்தநேரத்தில் முகலன் வீதிக்கு வந்திருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகை ஆசிரியர்கள்பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்ட காவல்துறை மேலாளர் ஒருவரைச் சகோதரராகக் கொண்ட திரு. பிரேமதாசா 'அப்பையா" தான் கொலை செய்தவர் என அடையாளம் காட்டியதாகக் கூறியுள்ளார்கள். திரு. பிரேமதாசாவின் முரண்பாடான வாக்கு மூலம் அவருடைய சாட்சியம் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்கக்கூடியது என்டதைச் சிந்திக்க வைக்கின்றது. அவருடைய முன்னைய அரசியல் தொடர்புகளும், அவருடைய சகோதரர் ஒருவர் காவல்துறை மேலாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப் பட்டதும், அவரின் சாட்சியத்தின் நம்பகத்தன்மையைக் கேள்விக் குரியதாக்குகின்றன. கொழும்பு கிழக்கில் சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைட்பரப்பாளராகவிருந்தவரும். கொலை செய்தவரைக்கண்டவருமான சாலிகா முனசிங்க என்பவர் மற்றவர்கள் அப்பையா தான் கொலை செய்ததாகக் கூறிய போதிலும் அப்பையா அதைச் செய்யவில்லை எனக் கூறுகின்றார்.

கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் இருப்பதால் அடையாளம் காணும் பிரச்சினையை சமாளிக்கமுடியாதிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில்ஏப்ரல்திங்கள்24ஆம் நாள் 'அப்பையா' வின் சடலத்தைப் பரிசோதித்தவரான மேலதிக நீதவான் எம். ஏ. சில்வா அவர்கள் விடுத்ததும், இதுகாறும் வெளியிடப்படாததுமான கருத்துக்கள் சில உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

அவர் பின்வருமாறு கூறியுள்ளார்: "இன்றைய நாள் 12—45 பணியளவில் 7216 என்ற எண்ணையுடைய காவல் துறை கொன்ஸ்ரபின் குமாரசிங்க என்பவருடனும் சுருக்கெழுத்தாளர் நயனா கெமாந்திரீயுடனும் செயலக வாகனமொன்றில் கிரிலப்பனையிலுள்ள முகலன் வீதியூடாக 100 யார்கள் வரை பயணம் செய்தால், அந்த வீதிக்கு இடதுபக்கமாகக் கொழும்பு தெற்கு கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரைக் கொண்ட பலகை

ஒன்றை ஒருவர் காணலாம். இந்தக் கட்டடத்தின் இடப்பக்க மாக இறந்தவர் வீழ்ந்து கிடந்தார். அவரின் கால்கள் மடிந்து கிடந்தன. அவரின் சிரம் சுவரை முட்டிக்கொண்டிருந்தது. கறுப்பு நிற மயிரைக் கொண்ட அவர் கறுப்புநிறமானவர். தனது முகத் திலிருந்த பருக்களை அவர் உடைத்திருந்ததால் அவரின் முகத் தில் கறுப்பு அடையாளங்கள் நிறையக்காணப்படுகின்றன. அவ ருக்கு 25 திலிருந்து 30 வயது வரை இருக்கும். நீலநிற கரட் ரீசேட் (Harrod's T - Shirt) ஒன்றை அவர் அணிந்துள்ளார். அதற்கு உள்ளே வெள்ளை நிற உள்ளங்கியை அணிந்துள்ளார்."

"நீலநிற ரெற்றோன் நீளக் காற்சட்டை ஒன்றை அணிந் துள்ள அவர், அதற்குக் கீழ் சிவப்பு, கறுப்பு, மற்றும் பச்சை நிறங்களிலான உட்காற்சட்டையை அணிந்துள்ளார். அவருடைய உள்ளங்கி இரத்தத்தில் தோய்ந்திருக்கின்றது. இடுப்புப் பகுதி யும், சஸ்பெண்டரும் கூட இரத்தத்தில் தோய்ந்துள்ளன. சிர சுக்கு இடப்பக்கமாகக் காதுக்கு மேலாக மூன்று காயங்கள் இருக்கின்றன. அவை அடியினாலோ அல்லது கடினமான மேற் பரப்பின் மீது மோதியதாலோ ஏற்பட்டவையாக இருக்கலாம்.

"காதுக்குள் புகுந்த இரத்தம் காதைச்சுற்றிவர உறைந்து விட்டது. கண்ணுக்குள் புகுந்த இரத்தம் கண் இமையைச்சுற்றி உறைந்து கெட்டியாக இருக்கின்றது. சடலத்தின் பின்புறத்தை நான் பரிசோதித்தேன்."

"காற்சட்டையை இறுக்கமாக வைத்திருப்பதற்காகச் சுற் றியிருந்த பட்டியைத் தளர்த்தி மேலும் பரிசோதித்தேன். உள் ளணி முழுவதும் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. பரிசோதனை யைத் தொடர்ந்தபோது பிட்டத்திற்கு மேலாகவும் இடுப்புக்கு அண்மையாகவும் உடலைத் துளைத்துச் சென்றிருந்த காயத் தைக் காண்கிறேன். அந்தக்காயம் 3/4 அங்குல சுற்றளவாக விருந்தது. உடலை அசைத்தபோது இரத்தம் சொட்டுச்சொட் டாக வெளியேறியது. துப்பாக்கிச் சூட்டின் காரணமாகவே இந்தக்காயம் ஏற்பட்டதென ஒருவர் கூறலாம். இடதுகால் தொடைப்பக்கமாகக் காற்சட்டைசெங்குத்தாகக் கிழிக்கப்பட்டி ருந்தது. உடலை மீண்டும் அதன் முகப்பக்கமாகத் திருப்பினேன். பின்புறத்திலுள்ள காயம் முன்புறமாகத் துளைத்துச் சென்ற தற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. மூக்கிலிருந்து சளி வந்துகொண்டிருந்தது. வாய்க்குள்ளும் சளி இருந்தது. ரீசேட் டைக்குள் 10/- ரூபா தாளொன்று இருந்தது."

உடலைத் திருப்பியபொழுது இரண்டு, 2/- ரூபாய் நாணயங்களும், இரண்டு 1/00 ரூபாய் நாணயங்களும் காற்சட்டைப் பைக்குள் இருந்ததைக்கண்டேன் உடலிலிருந்த இடத்திற்குஇடதுபுறத்தில் சுமார் 4 அடிக்கு அப்பாலிருந்த சுவரின் மீது 3 அடி உயரத்தில் இரண்டு இடத்தில் இரத்தக்கறை பட்டைபட்டையாக இருந்தது. 6 அடி உயரம் 3 அடி அகலமான அச்சுவரில் இறப்பதற்கு முன்னர் அந்த மனிதன் சாய்ந்து கொண்டு நின்றிருந்தான் போலத் தோன்றுகின்றது. இரண்டு இரத்தக் கறைகளுக்குமிடையே உள்ள தூரம் சுமார் 10 அங்குலமாகும். இரு கறைகளும் ஒன்றுக்கொன்று ஒத்திருந்தது. உடலின் இடப்பக்கமாகச் சுமார் 1 1/2 அடி தூரத்துக்கு அப்பால் குப்பைத் தொட்டி ஒன்று இருக்கின்றது. மூத்த காவல்துறை மேலாளர் ரஞ்சித் சபரக்கோனும் மற்றைய மேலாளர்களும் அந்தஇடத்தை வந்தடைந்தனர். திரு. லலித் அத்துலத்முதலி அவர்களின் கொலை சம்பந்தமாகச் சாட்சியம் கூறிய நணதுங்கா என்பவரை காவல் துறை மேலாளரான லூ கொடை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். உடலை நன்கு பார்வையிடும் படி அவர்கேட்கப்பட்டார். இறந்த மனிதனை இனங்காணும்படியும் கேட்கப்பட்டார். திரு. லலித் அத்துலத்முதலி அவர்களைச் சுட்டுக் கொன்றவன் இந்த மனிதனே என அவர் கூறினார். அவருடைய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என அவருக்கு அறிவிக்கப்பட்டது.

காலஞ்சென்ற திரு. அத்துலத்முதலி அவர்கள் தாக்கப்பட்டபோது காயத்துக்குள்ளான காப்பு மேலாளர் உட்படஅவரின் காப்பு மேலாளர் யாவரும் கொலையாளியைத் தாங்கள் எவரும் கடவில்லையெனக் காவல்துறையினருக்கு அறிவித்திருந்ததே இந்த விடயத்தை இதுவரை சிக்கலாக்கி வந்தது.

''அப்பையாவின்'' உடலில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் இருந்ததால், இந்த விடயத்தில் முன்னேற்றம் எதையும் காண முடியாதிருந்தது.

அந்த நிகழ்ச்சியில் காயப்பட்ட காப்பு மேலாளர் கொலையாளியைச் சுட்டிருந்தபோதும் அனுமதிப்பத்திரமில்லாத துப்பாக்கியால் அதை அவர் செய்ததால் பயம் காரணமாக அதை ஏற்றுக்கொள்ள அவர் முன்வரவில்லை என்பதே உண்மையாகும்.

## ஒப்புதல் பெறாத ஆயுதங்கள்

போதுமான காப்பை, காப்பு அமைச்சிடமிருந்து பெறுவதற்குத் திரு. அத்துலத்முதலி அவர்கள் தவறியதனாலேயே ஒப்புதல் பெறாத ஆயுதங்களைக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. முன்னாள் தேசியக்காப்பு மந்திரியான இவர், காப்பு மந்திரியைத்தனக்கு காப்பு வழங்கவேண்டுமெனக் கோரியிருந்த போதிலும், கட்சித் தலைவர்களுக்கும் காப்பு வழங்குவதில்லை எனக்கூறி இவரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. ஈ. பீ. டி. பீ. யினர் இருப்பதன் காரணமாகத் தனக்குப்காப்பு வழங்கப்படவேண்டுமென இவர் மீண்டும் வலியுறுத்திக்கூறியதன் பின்பே சுழல் துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதல் இவருக்கு வழங்கப்பட்டது.

தனது சொந்தக்காப்பைத்தானே உறுதிசெய்யவேண்டுமென்ற நிலை ஏற்பட்டதாலேயே இவர் ஒப்புதல் பெறாத ஆயுதங்களை எடுத்துச் செல்லவேண்டியிருந்தது.

தானே துப்பாக்கியால் சுட்டதாகக்காப்பு மேலாளர் ஏற்றுக்கொள்ளும் அவரது வாக்கு மூலத்தைப்பதிவு செய்து வைப்பது நடைபெற்றுவரும் விசாரணைக்கு முக்கியம் என்பதால், ஒப்புதல் பெறாத சுடுகலனை வைத்திருப்பதற்கு எதிராகக் குற்றம் சுமத்தப்படமாட்டாதெென அவருக்கு உறுதியளித்த சனநாயக ஐக்கியதேசிய முன்னணியினர், அவரை உண்மையைக் கூறும்படி கேட்டுக்கொண்டனர்.

புலனாய்வுத்துறையின் துணைக்காவல்துறை மா அதிபர் அமரசேனா இராஜபக்சவுடன் இந்த விடயம் தொடர்பாக கலாநிதி வீரசூரியா அவர்கள் சென்றவாரம் உரையாடியுள்ளார்.

கொலையாளியைத் தான் சுட்டதாகக் காப்புமேலாளர் ஏற்றுக்கொள்வது அவருக்கு ஒரு சிக்கலையும் தோற்றுவிக்காதெனவும் உண்மையிலேயே அவருடைய துணிவுக்காக அவருக்குப் பாராட்டு விருது வழங்கவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பின்போது துணைக்காவல்துறை மா அதிபர் கூறியுள்ளார். அவ்விதமான ஒரு சூழ்நிலை தோன்றினால், காப்பு மேலாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யவேண்டாம் எனச்சட்டமா அதிபர் திலக் மாரப்பான அவர்களுக்குத் தான் சிபார்சு செய்வார் எனவும் திரு. இராசபக்ச அவர்கள் கூறியுள்ளார்.

அதன்பின் ஸ்கொற்லண்ட்யாட் புலனாய்வாளரைச் சந்திக்கவேண்டுமென்ற திரு. அத்துலத்முதலி அவர்களின் குடும்பத்தினதும், சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினதும் விருப்பத்தை கலாநிதி வீரசூரியா தெரிவித்தார். அது பற்றித்தங்களுக்கு ஆட்சேபமில்லை எனவும் பிரித்தானிய தூதுவருடன் தொடர்புகொண்டு ஆவனசெய்யும்படியும் காவல்துறையினர் சனநாயக ஐக்கியதேசிய முன்னணிக்குக் கூறினர்.

தானே சுட்டதாக காப்பு மேலாளர் ஏற்றுக்கொள்ளவும் துப்பாக்கியை ஒப்படைக்கவும் எடுத்த தீர்மானம் காப்பு மேலாளரிடமிருந்து ஒப்புதல் பெறாத துப்பாக்கி மூலம் உடலிலிருந்த காயம் ஏற்பட்டதா என்பதை அறிவதற்கும் அப்பையாதானா உண்மையான கொலையாளி என்பதை இனங்காண்பதற்கும் உதவுவதால் பல உண்மைகள் வெளிவரும் என்பதில் சந்தேகமில்லை.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் இந்தத் துப்பாக்கியை ஸ்கொற்லண்ட்யாட் புலனாய்வுத் துறையினருக்கு நேராகவே கையளிப்பர். தான் சுட்ட மனிதன் 'அப்பையா' தானா எனக்கூறக்கூடிய நிலையில் காப்பு மேலாளரும் ஒரு வேளை இருப்பார். ஆனால் இது குறித்து இன்னும் விசாரிக்கப்படவில்லை. அவர் இதுகாறும் கூறியதெல்லாம் தான் சுடவில்லை என்பதே. அதையும் மருத்துவமனையிலேயே கூறியுள்ளார். அதே நேரத்தில் ஸ்கொற்லண்ட் யாட் புலனாய்வுக் குழுவும் இலங்கைப் புலனாய்வாளர்களும் தனித்தனியாகவே விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்கள்.

## ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை

ஸ்கொற்லண்ட் யாட் புலனாய்வாளர்கள் இலங்கைக்குத் திங்கட்கிழமை வந்தவுடனேயே தங்கள் சொந்த ஆய்வை மேற்கொள்வதற்காக திரு. அத்துலத்முதலி அவர்களின் உடலைக் கேட்டபோது அது அவரின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அது சாத்தியப்படாது எனவும் இலங்கைப் புலனாய்வாளர்களால் கூறப்பட்டது.

''அப்பையா'' காணப்பட்ட இடத்திற்குச்சென்ற பிரித்தானிய விசாரணையாளர்கள் சுவர்மீது காணப்பட்ட இரத்தக் கறையைச்சுரண்டி எடுத்ததுடன் அப்பையாமீது பிரேதப்பரிசோ

தனை ஒவ்வொன்றையும் செவ்வாய்க்கிழமை நடாத்தியுள்ளார்கள். இதற்கு முதல்நாள் இந்தப்பிரேதப் பரிசோதனையை மேற்கொண்ட சட்ட வைத்திய மேலாளரான த அல்விஸ் அவர்கள் தான் மேற்கொண்ட பரிசோதனையின் அறிக்கையின் பிரதியை ஸ்கொட்லண்ட்யாட். குழுவினருக்கு புதன்கிழமை வழங்குவதாகக் கூறினார்..

ஆனால் ஆய்வறிவு சார்ந்த சாட்சியங்கள் யாவற்றையும் ஸ்கொற்லண்ட்யாட் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். தற்கால முறையிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்கள் இலங்கையில் இல்லாததால் அவர்கள் சில கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. பரிசோதிப்பதற்காகத் தாங்கள் எடுத்த பொருட்களின் மாதிரிக் கூறுகளைத்தங்கள் சொந்த ஆய்வுகூடங்களில் பரீட்சிப்பதற்காக ஸ்கெட்லண்ட்யாட் குழுவினர் லண்டனுக்கு அனுப்பியுள்ளார்கள்.

அரசாங்க ஆய்வுப்பணியகத்திடமிருந்து இந்தக் கொலை சம்பந்தமாக வேறுவிதமான தகவல்கள் வருகின்றன.

திரு. அத்துலத்முதலி அவர்களின் கொலையைத்தொடர்ந்து கொலைநடந்த இடத்திற்குச் சென்ற குற்றப்புலனாய்வுத்துறையினர் கொலையாளியின் துப்பாக்கியிலிருந்து வெளியேறியதாகத் தாங்கள் கருதும் நாலு வெற்றுத் தோட்டங்களைக் கண்டு எடுத்துள்ளனர்.

''அப்பையா'' விடம் காணப்பட்ட துப்பாக்கியினால் சுடப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த வெற்றுத் தோட்டாக்களும், திரு. அத்துலத்முதலி அவர்களின் உடலில் காணப்பட்ட சன்னமும் ''அப்பையா' விடம் காணப்பட்ட துப்பாக்கியும் அரசாங்க ஆய்வுப்பணிமனையினால் ''பரவின் பரிசோதனை''க்கு (Paraffin Test) உள்ளாக்கப்பட்டது.

''அப்பையா''வுக்கு அண்மையாக இருந்த துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டவை போல் இந்த வெற்றுத் தோட்டாக்கள் தோற்றியபோதிலும், திரு. அத்துலத்முதலி அவர்களின் உடலில் காணப்பட்ட சன்னம் அதே துப்பாக்கியால் சுடப்பட்டதாகத் தெரியவில்லை அரசாங்க ஆய்வுப்பணிமனையின் ஆரம்பக்கண்டுபிடிப்பிலிருந்து தெரியவருகின்றது.

இந்தக்கண்டுபிடிப்புக்கள் ஸ்கொற்லண்ட்யாட் புலனாய் வாளர்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. ஆனால் ஆதாரம் எதுவுமின்றி வெறுமனே அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளத்தயாரில்லை.

பரவின் பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் அது நூற்றுக்கு நூறுவீதம் சரியாக இருக்காதெனவும் ஸ்கொற்லண்ட்யாட் புலனாய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உலோகத் துணிக்கைகளைப் பரிசோதனைக்குட்படுத்த வேண்டுமெனவும், அப்படியான பரிசோதனையை இலங்கையில் மேற்கொள்ளமுடியாது எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். தங்கள் ஆய்வுகூடங்களில் பரிசோதனை செய்வதற்காக இவற்றை லண்டனுக்கு எடுத்துச் செல்லவிருப்பதாகவும் இவர்கள் கூறினார்.

அத்துடன் திரு. அத்துலத்முதலி அவர்கள் இறுதியாகப் பேசிய பேச்சுப் பதிவு செய்யப்பட்ட பதிவு நாடாவையும் புலனாய்வு செய்யவேண்டியுள்ளது. இந்த நாடாவில் துப்பாக்கிச் சூடு பதியப்பட்டிருக்கும். துப்பாக்கிச் சூடுகள் ஒரு துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டதா அல்லது இரண்டு துப்பாக்கிகளிலிருந்து சுடப்பட்டதா என்பதை அறிவதற்கு இது உதவும்.

அறிவியல் ரீதியான அம்சங்கள் பற்றிய விசாரணைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் அதேவேளையில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணிகள், அதற்கான சூழ்நிலைகள் மற்றும் அது சம்பந்தமாகக் கிடைத்துவரும் எண்ணிலடங்காத முறையீடுகள் பற்றியும் உள்ளூர் விசாரணையாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்கள்.

கூட்டம் நடாத்தப்பட்ட இடத்தில் காப்பு ஒழுங்குகளைக் காவல்துறையினர் மேற்கொள்ளத் தவறிவிட்டனர் என்ற சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரின் குற்றச் சாட்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு அம்சமாகும். ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் இடமாற்றம் செய்யப்பட்டவரும், கிரிலப்பனை காவல் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தவருமான றனகல்ல என்பவர் காப்பு எதுவும் வழங்கவேண்டாமெனத் தன்னை ஒரு மூத்த காவல்துறை மேலாளர் பணித்ததாக இந்த விசாரணையின் போது கூறியதாகத் தெரிகின்றது. அந்த மூத்த காவல்துறை மேலாளரின் சாட்சியத்தைப் பதிவு செய்யும்படி திரு. கோர்பி ஜயசூரியா தற்போது பணிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையைப் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டுவரும் சில மேலாளர்களின் நம்பகத் தன்மையில் எதிர்க் கட்சி வட்டாரங்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

தனது ஓய்வுபெறும் வயதைத் தாண்டியபின் ஒரு சிறப்பு ஒப்பந்தத்தின் கீழ் கடமையாற்றுபவரும், அரசாங்கத்தில் அவருக்குள்ள நம்பிக்கை காரணமாகக் குற்றப் புலனாய்வுத்துறை இலங்காவின் துணைக்காவல்துறை மா அதிபர் பதவியை வகிப்பவருமான திரு. இராசபக்ச அவர்களுக்கு எதிரான முறைப்பாடு ஒன்றை இதுவிடயமாக எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

## முக்கியம் வாய்ந்தவர்கள்

தன்னுடைய நண்பர் ஒருவரின் வீட்டில் இரவு விருந்தில் மற்றும் 10 பேருடன் திரு. இராசபக்ச அவர்கள் கலந்து கொண்டிருந்த வேளையில், திரு. அத்துலத்முதலி சுடப்பட்டார் என்ற தகவல் அவருக்கு இரவு 9 மணியளவில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்பும் துணைக்காவல்துறை மா அதிபரான இவர் விருந்தை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளார். குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாகவுள்ள உயர் பதவியிலுள்ள ஒரு காவல்துறை மேலாளர் இந்தச் செய்தியைக் கேட்டவுடன் குற்றச்செயல் இடம் பெற்ற இடத்திற்கு ஏன் விரைந்து செல்லவில்லை என்ற கேள்வியை எதிர்க்கட்சியிலுள்ள அரசியல்வாதிகள் எழுப்ப இருக்கின்றார்கள்.

இந்தக் கொலைக்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கில் திரு. அத்துலத்முதலி அவர்களின் சாவு நிகழ்ச்சியின் போது வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தைக்கூடவிசாரணைக்கு எடுத்துக் கொண்டது விசாரணையாளரின் நேர்மையை எடுத்துக்காட்டுகின்றது.

இந்தக் கொலைக்குக் காரணமாக முக்கியமானவர்களே இருந்ததாக இந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரியப்படுத்தியிருந்தது. அத்துலத்முதலி அவர்களை இருவர் கொன்றதாகவும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இருவரில் ஒருவர் கொழும்பு மாவட்டத்திலுள்ள செல்வாக்கான அரசியல்வாதி ஒருவருடன் நெருங்கி உறவாடுபவர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

திரு. அத்துலத்முதலி அவர்களைச் சுட்டவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்ட இருவரில் ஒருவர் கைக்குண்டொன்றை வைத்திருந்ததாக அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு காவல்துறையினரின் காப்பில் இருந்தவர் எனவும், அவரின் சட்டத்தரணியான யோசெப் சார்ல்ஸ் அவர்களின் வேண்டு கோளை அடுத்து கொழும்பு நீதிபதியால் ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் பிணையில் விடப்பட்டவர் எனவும் தெரியவருகின்றது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றவாளி எனக் காணப்பட்ட இவரைப் பிணையில் செல்ல விடுவதாயின் சட்டமா அதிபரின் அனுமதியுடனேயே செல்ல அனுமதிக்க முடியும். சட்டமா அதி பர் தனது இந்த ஒப்புதலை எழுத்துமூலம் வழங்கியுள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்ட மற்றவரும் ஒப்புதல் பெறாத சுழல் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததற்காகச் சுடுகலன்களை உப யோகிப்பதற்கான சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட் டிருந்த போதிலும், அவருடைய சட்டத்தரணியான சுந்தலால் குமாரசிறி அவர்களின் விண்ணப்பத்தைத் தொடர்ந்து கல்கிசை யிலுள்ள நீதிமன்றத்தால் ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் மாலைப் பொழுதில் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

இந்தக் கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் என அரசாங்கத் தொடர்பு சாதனங்கள் தெரியப்படுத்தியிருப்பதால், விடுதலைப்புலிகளுக்கும் இதில் தொடர்பு உண்டா என்ற கேள்வி எழுவது இயற்கையே.

உண்மையாகவே இந்தவிடயத்தில் இருவிதமான கருத்துக் கள் நிலவுகின்றன. இப்படியான விடயங்களில் விடுதலைப் புலி கள் கையாளும் வழிமுறைகள் வேறுவிதமாக இருப்பதால் அவர்களுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை எனப் பல ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். லெப் ரினன்ட் ஜெனரல் கொப்பேக்கடுவா அவர்களின் கொலைக்கு உரிமைகோரிய விடுதலைப்புலிகள் திரு. அத்துலத்முதலி அவர்க ளின் கொலையைத் தாங்கள் செய்யவில்லையெனக் கூறுவதற்குக் காரணம் எதுவுமில்லை எனவும், இத்தருணத்தில் அவரை அவர் கள் கொல்வதற்கான காரணம் எதுவும் இல்லை எனவும் அர சியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

லெப்ரினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ அவர்களின் கொலைக்கு உரிமைகோராதிருப்பதன் மூலம் காப்புப்படையின ருக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கி அதிக நன்மைகளைப் பெறக்கூடிய நிலையில் இருந்த விடுதலைப்புலிகள், திரு. அத்து லத்முதலி அவர்களின் கொலைக்கு உரிமைகோராதிருப்பது அர சாங்கத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடாதென்பதற்கல்ல எனச் சில வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

வாக்காளர் இடையில் சனநாயக ஐக்கிய தேசிய முன் னணி பெற்றுவரும் ஆதரவு தங்கள் வேட்கைகளுக்கு அச்சுறுத் தலாக அமையும் எனக்கருதிய விடுதலைப்புலிகள் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என வேறு சிலர் கருதுகின்றனர். இந்த நாட்டில் இடம்பெற்ற முக்கியமானவர்களின் கொலைகள் எப்படி இந்நாட்டு மக்களால் மறக்கப்பட்டதோ அப்படியே திரு. லலித் அத்துலத்முதலி அவர்களின் கொலையும் நாளடைவில் அவர்களால் மறக்கப்படுவதுடன், இலங்கையின் அரசியலில் பாரிய தாக்கம் எதையும் இது ஏற்படுத்தாது என்று கருதுவாருமுளர்.

இந்தக் கொலையைச் செய்தது யார் என்பதையும், இதற் குச் சூத்திரதாரியாகவிருந்து சதித்திட்டத்தைத் தீட்டியது யார் என்பதையும் அறிவதற்கும், அவர்களைச் சட்டத்திற்கு முன் கொண்டுவருவதற்கும் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் நீண்ட காலத்தை எடுக்கும்.

இந்த நேரத்திலேயே தேர்தல் கோட்பரப்பும் நடந்துகொண் டிருக்கின்றது.

திரு. அத்துலத்முதலி அவர்களின் கொலை தனக்குப் பின் னடைவு எதையும் ஏற்படுத்தாதென அரசாங்கம் ஏற்கனவே கூறியுள்ளதாகத் தெரிகின்றது.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு, அவரின் தனிப் பட்ட செல்வாக்கின்காரணமாகக், குறிப்பாக மேற்கு மாகாணத் தில், பெரும் வெற்றியைப் பெற்றுக்கொடுக்க விருந்த திரு. அத் துலத்முதலி அவர்களின் சாவு, அதற்குப் பாரிய இழப்பை ஏற் படுத்தியுள்ளதென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தலின்போதும் பொதுத்தேர்தலின் போதும் திரு. அத்துலத் முதலி அவர்கள் உயிருடனில்லாதது அதற்குப்பாரிய இழப்பை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது.

தனது மறைந்த கணவரின் குறிக்கோள்களை எட்டுவதற்கும் அவரின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் திருமதி சிறிமாணி அத்துலத்முதலி தனது ஆதரவை வழங்குவதை மக்கள் எதிர்காலத்தில் காண்பர்.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்த மட்டில் அது தேர்தல் மேற்பரப்பில் மீண்டும் ஈடுபட்டுள்ளது. திரு. காமினி திசநாயக்கா அவர்கள் சனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் உறுப்பினர்களுக்கு, குறிப்பாக அரசாங்கத்திலிருந்து வெளியேறியவர்களுக்குக்காப்பு வழங்குமாறு கோட்பரப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்காப்பு செயலாளருக்கு எழுதியுள்ளார்.

காப்பு வழங்கப்பட வேண்டியவர்களின் பெயரைக் குறிப்பிட்டுத் தான் ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் எழுதிய கடிதத்தில், திரு. திசநாயக்கா அவர்கள் ஒவ்வொருவருக்கும் 9 மில்லிமீற்றர் தானியங்கிப் பிசுடல்கள் 6 ஐயும் அவை ஒவ்வொன்றுக்கும் 25 தோட்டாக்களையும் ஒவ்வொருவருக்கும் ரி. 56 ரகத் துப்பாக்கியைக்கொண்ட படை வீரர்களையும், செய்தி அனுப்பக் கூடிய வோக்கி ரோக்கி 6 யும் அதற்குரிய மின்கலன்களையும் வழங்கும்படி தெரியப்படுத்தியுள்ளார். தனது சொந்தக்காப்புக்காக 9 காவல்துறையினரின் பெயர்களையும் இந்தப்பட்டியலில் அவர் சேர்த்திருந்தார்.

*தற்போதுள்ள சட்டப்படி அரசாங்க அதிகாரியிடம் ஒரு மனிதன் பொய் சொல்வது குற்றமாகும். ஆனால் அரசாங்க அதிகாரிகள் பொதுமக்களிடம் பொய் சொன்னால் அது குற்றமல்ல.*

*— டோனால்ட் எ. பிரேசர்.*

# ஈ.பி.டி.பி (ஈழமக்கள் சனநாயகக்கட்சி) இக்கட்டான நிலையிலுள்ளது.

*(ஐலண்ட் - 2.5.93)*

சென்னையிலுள்ள சூளைமேடு மக்கள் நெருக்கமாக வாழும் ஒரு பகுதியாகும். இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தங்கள் பணிமனையை இங்கே கொண்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் வைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இந்த ஊரிலுள்ள மக்களுக்குமிடையே ஒரு நாள் ஏற்பட்ட தர்க்கம் கலகத்தை ஏற்படுத்தக்கூடியதாக மாறியதைத் தொடர்ந்து அந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள அந்த இயக்கத்திலுள்ள சிலர் தீர்மானித்தனர். பிரதானமான நகரத்தின் புறப்பகுதியாக விளங்குவதும், மக்கள் நெருக்கமாக வாழ்வதுமான அவ்விடத்தில் அச்சம்தரும் ஆயுதங்களைத் தாங்கிய தீவிரவாதிகள் தங்குவதற்கு ஒப்புதல் தந்தமைக்கு எதிராகத் தமிழ் நாட்டுச் செய்தித் தாள்கள் கண்டனம் தெரிவித்தன. இது மாநில அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் ஒரு விடமாகிவிட்டது.

தங்களது மூத்த உறுப்பினரும், இதுகாறும் யாழ்ப்பாணத்தில் தங்கள் படையித் தளபதியாக இருந்தவருமான டக்ளசு தேவானந்தாவுடன் அப்பொழுது சில முரண்பாடுகளைக் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் தலைமைப்பீடம் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு டக்ளசு தேவானந்தாவே பொறுப்பாக விருந்ததாக அறிவித்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்திலிருந்து அவரை வெளியேற்றிய போது சூளைமேட்டுத் துப்பாக்கிச் சம்பவமும் அதற்கான காரணங்களில் ஒன்றெனப் பின்னர் அறிவிக்கப்பட்டிருந் .

சூளைமேட்டில் பல தொல்லைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த டக்ளசு தேவானந்தா அவற்றையெல்லாம் தாண்டியபின் கொழும்பு 5 இலுள்ள பார்க் தெருவுக்கு வந்தார். தமிழீழத்தின் அரசியலில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஈழமக்கள் சனநாயகக்கட்சி என்ற அமைப்பு இருந்ததாக யாரும் கேள்விப் படவில்லை. அதற்கு முன் அவர் குறித்து கடைசியாக கேள்விப் பட்டது வரதராசப்பெருமாளின் தூண்டுதலினால் அவர் கைது செய்யப்பட்டு சென்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட போதுதான்.

கொழும்பில் தனது நடவடிக்கையை மேற்கொள்ள எப்படியோ ஒரு இடத்தைத் தேடிக்கொண்ட டக்ளசின் நண்பரான அசோக் என்பவர் சில அறிக்கைகளை 1989 ஆம் ஆண்டில் வெளியிட்ட பின்னரே ஈ.பி.டி.பி என்ற ஒரு இயக்கம் இருப்பதாக அறியமுடிந்தது. அண்மையில் சாவை எய்தியவரும், டக்ளஸ் தேவானந்தாவின் தந்தையுமான கதிரவேலு என்பவரின் கடும் முயற்சி காரணமாகவே ஈ.பி.டி.பி ஒரு கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.

நீடித்த பட்டறிவும் திறமையும் கொண்ட தொழிற் சங்கத் தலைவரான கே.சி நித்தியானந்தா அவர்களின் சகோதரராக இருந்ததன் காரணமாகக் கொழும்பிலுள்ள தொழிற்சங்க வட்டாரங்களில் ஓரளவு செல்வாக்கைப் பெற்றிருந்த டக்ளசு தேவானந்தாவின் தந்தையார் இனச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட ஈ.பி.டி.பி யைச் சிறிது காலம் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் இடையில் ஈ.பி.டி.பி. தற்பொழுது மிகவும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. கொழும்பில் அமைதியாக வாழவிரும்பும் எந்தவொரு தமிழ் மகனும் தங்கள் மீது குற்றங்காணமாட்டான் என இக்குழுவினர் நம்பிக்கை கொள்ளப் பல காரணங்கள் இருந்தது. ஈ.பி.டி.பி யினால் கடத்தப் பட்டதாகவும், தடுத்து வைக்கப்பட்டதாகவும், சித்திரவதை செய்யப்பட்டதாகவும், நான் அறிந்தவரை ஒரேயொரு தமிழ் மகனே துணிவுடன் ஒரு வழக்கை அண்மையில் தாக்கல் செய்திருந்தார். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் கத்திக் குத்துக்கு உள்ளான ரெலோ உறுப்பினர்களுக்கு அவரைப் போல நல்லகாலம் இருக்கவில்லை.

எவருடைய எதிர்ப்புமின்றி இப்படியொரு மேலாண்மை தங்கள் சொந்த மண்ணில் தங்களால் ஒருபோதும் செலுத்த முடியாதென்பதை டக்லசும் அவருடைய உதவியாளரான ரமேசும் நன்கு அறிவர். சுதந்திரமாக இவர்கள் அங்கு செயற்பட விரும்பியிருந்தால் ஒரு நாளுக்குள் அழிக்கப்பட்டிருப்பர்.

அரசாங்கத்தின் பெருந்தன்மையாலும், இவர்கள் காக்கப் படவேண்டும் என அது கருதுவதாலும் டக்லசும், ரமேசும் தங்கள் மேலாண்மையைச் செலுத்த முடிகின்றதேயல்லாது, துப்பாக்கியைக் கையாளக்கூடிய இவர்களுடைய ஆற்றலாலோ, அல்லது தமிழ் மக்கள் இவர்கள்பால் கொண்ட நம்பிக்கையினாலோ அல்ல.

ஆகையால் இவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனது முழுமையான நம்பிக்கையை தெரியப்படுத்தி வருகின்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒரு மணித்தியாலத்திற்கு நடாத்தப்படும் வர்த்தக சேவையில் ''மக்கள் குரல்'' என்ற நிகழ்ச்சியில் அதிக நேரத்தைப் பயன்படுத்திவரும் ஈ.பி.டி.பி யினர் திரு லலித் அவர்களின் கொலைக்குப் பின்னர் எதிர்க்கட்சியினரைத் தாக்கிப் பேசும்போது சனாதிபதி அவர்களை 'அண்ணா பிரேமதாசா' என அழைத்துவந்தது பலருக்கு வேடிக்கையாக விருந்தது.

ஆளும் கட்சிக்கு நம்பிக்கையாகவிருந்த 'மக்கள் குரல், லலித்தின் சா நிகழ்ச்சி நடைபெறவிருந்த நாள்வரை தனது செய்தி முடிவில் மட்டுமே வழமையாக இழிவுபடுத்தும் விடுதலைப் புலிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது.

இந்தக் கொந்தளிப்பானசூழ்நிலையில் பார்க்வீதியிலுள்ள தங்கள் விடுதியில் காப்பாக இருக்கும் ஈ.பி.டி.பி.யினர்' விடுதலைப் புலிகளைத் தாக்கிப் பேசி வந்ததும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சிங்களக் கட்சிகளைத் தாக்கிப் பேசி வந்ததும், சிலருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த போதும் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் வேடிக்கையாகவிருந்தது.

அரசியல் ரீதியாகவும் படைய ரீதியாகவும் வடக்கிலும், கிழக்கிலும் எந்த விதமான செல்வாக்கையும் பெறாத இக்குழுவினரிடமிருந்து எப்படியான நன்மையை ஐக்கிய தேசியக்கட்சி பெறப்போகின்றது என்ற கேள்வியை இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் கேட்க வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்கள் மீது அரசியல் மேலாண்மையை ஈ.பி.டி.பி யினர் கொண்டுள்ளதாகக் கூறுவதற்கு உதவுவது அது நடாத்தும் ஒலிபரப்பான மக்கள் குரலே அன்றி வேறொன்றுமல்ல, விடுதலைப்புலிகளுக்கு எதிராக மக்கள் குரலில் மேற்கொள்ளப்படும் விமர்சனம் சிலவேளைகளில் விடுதலைப்புலிகளை தங்கள் வழிமுறைகளையும், அமைப்பு ரீதியான ஒழுங்குகளையும் சீர்திருத்த உதவியுள்ளது:

அண்மையில் யாழ்ப்பாண ஏரியைக் கடக்க முயன்ற பொது மக்களைக் கிளாலிக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினர் கொன்ற சம்பவத்தை வெளியிடப் படையினர் தயங்கியபோதும், அதில் கொல்லப்பட்ட யாவரும் விடுதலைப்புலிகள் என இந்த ஒலிபரப்பில் கூறப்பட்டிருந்தமை அதன் நம்பகத்தன்மைக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் பொதுமக்களை ஐக்கிய தேசியக்கட்சியின் பால் எவ்விதத்திலும் இந்த மக்கள் குரலால் ஈர்க்க முடியவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். சனாதிபதி அவர்களின் பெருந்தன்மை காரணமாகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் யாவற்றிற்கும் பரிகாரம் தேடப்படும் என்று வெறுமனே இவ்வொலிபரப்பில் கூறப்பட்டு வந்ததேயன்றி அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கக் கூடிய எதையும் செய்யாததினால் அது விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அத்துடன் திரு. லலித் அவர்களின் கொலைக்குப்பின் அந்தஒலிப்பரப்பில் பல முட்டாள் தனமான விடயங்கள் ஒலிபரப்பப்பட்டன.

தமிழ்மக்களால் சந்தேகக் கண்ணோடு நோக்கப்படும் அரசாங்கத்தின் மீதான மதிப்பை ஈ.பி.டி.பி யுடனான அதன் கூட்டு எப்படி அதிகரிக்கும் என்பது தெளிவாகவில்லை. இருப்பினும் என்ன சூழ்நிலையில் ஈ.பி.டி.பி. யினர் கொழும்பில் கால் ஊன்றினார்கள் என்பதையும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் உறவை வளர்த்துக் கொண்டார்கள் என்பதையும் ஆராய்ந்தால் அவர்கள் தற்பொழுது அரசாங்கத்திற்கு தோற்றுவித்த சிக்கல்களை அறிய உதவியாகவிருக்கும்.

தனது குழுவை ஒரு கட்சியாகக் கொழும்பில் பதிவுசெய்ய டக்ளசு முயன்றபோது பெருமாளின் ஈழப்பிரகடனம் மற்றும் விடுதலைப்புலிகளின் வரவு ஆகியவை தோற்றுவித்த சிக்கல்கள் காரணமாக அன்றைய காப்பு மந்திரியான ரஞ்சன் விஜயரத்தின அவர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

2655 C.

திரு.ராஜீவ்காந்திமீண்டும் தெரிவு செய்யப்பட்டால் இந்தியா மேற் கொள்ளக்கூடிய எதிர் நடவடிக்கையை முறியடிப்பதற்காகவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பைச் சார்ந்தவர்களின் நம்பிக்கையை பெறுவதற்காகவும், வடக்கிலும், கிழக்கிலும் அரசியலைப் பொறுப்பேற்கும் ஒரு குழுவை உருவாக்கவேண்டிய அவசியம் அந்த நேரத்தில் இருந்தது.

எந்தப் பலமும் அற்று ஆரம்பநிலையில் இருக்கும் ஈ.பி,டி பி.யே இதற்குத் தகுதியான ஒரேயொரு குழுவாக அப்பொழுது காணப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ். வின் தலைமைப்பீடத்தில் பத்மநாபாவுக்கு அடுத்த பதவி நிலையை டக்ளசு வகித்து வந் தார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் முன்னைய படைத்தளப தியாக இவர் இருந்ததன் காரணமாக இவரைப் பின்பற்றுபவர் களும், ஆதரவைத் தெரிவிப்பவர்களுமான பலர் இவருக்கு அதில் இருந்தனர்.

ஆகையால் டக்ளசுக்குத் தேவையான உதவிகளை வழங்கு வதன் மூலம் வடக்கிலும், கிழக்கிலும் ஈ பி.ஆர்.எல்,எவ் வினர் அமைத்துக் கொண்ட தளத்தையும், அவர்களுடைய செல்வாக் கையும் இல்லாது செய்யலாமெனவும், அந்த இயக்கத்தில் குறைந்த செல்வாக்கையும், ஆதரவையும் பெற்றிருந்த பெருமா ளைப் போன்ற தலைவர்கள் மூலம் தமிழ் மக்களின் சிக்கல்களில் டில்லி தலையிடுவதைக் குறைக்கலாம் எனவும் அப்பொழுது கரு தப்பட்டது. டக்ளசு தேவானந்தா ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு எதி ரானவர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மறுபுறத்தில் சிறிதளவு அரசியல் செல்வாக்கையும், வளத்தையும் கொண்ட மற்றைய குழுக்களைப் போலல்லாது ஈ.பி.டி.பி.யினர் தாம் உயிர்வாழ்வதற்கு அரசாங்கத்தின் தயவிலேயே முழுமையாகத் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

இக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்த திரு. ரஞ்சன் அவர்கள், றோவுக்கும், ரெலோவுக்கும் இடையே உள்ள நட்பு எத்தன்மையது என்பதை அறியாதவ ராக இருந்தார், ஜே.வி.பி யினருடன் புளொட் கொண்டிருந்த தொடர்பு மற்றும் மாலைதீவில் அவர்கள் மேற்கொண்ட சதிப் புரட்சி காரணமாக மனக்குழப்பமுற்றவராககாணப்பட்டார். விடு தலைப் புலிகளுடன் ஈரோஸ் இணைந்து கொள்ளக்கூடிய சாத் தியக்கூறுகளையும் கண்டார். ஆகையால் தமிழ் மக்களின் சிக்கல்

மீண்டும் தலைதூக்கும் பொழுது அதை எதிர்கொள்வதற்காக முற்றுமுழுதாக நம்பிக்கை வைக்கக்கூடிய வேறொரு தமிழ்த் தீவிரவாதக் குழுவைக்கண்டு பிடிக்க வேண்டிய அவசியத்தை அவரும் படையப் புலனாய்வுத் துறையினரும் உணர்ந்தனர். இந்தக்கட்டத்திலேயே எவ்விதமான எதிர்ப்பார்ப்பும், நிபந்தனையும் இன்றித்தனது நம்பிக்கையை ரஞ்சனுக்குத் தெரிவித்த டக்ளசு, அவரைத் தன்பால் ஈர்த்துக்கொண்டார்.

காரைநகர் கடற்படைத்தளம் மீது நடாத்தப்பட்டு தோல்வியைத் தழுவிக்கொண்ட தாக்குதலின் பின்பே டக்ளசு யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகமானார். றோவினால் பெருந்தொகையான ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் காட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த இவர், தனது சிறுபிள்ளைத்தனமானதும், பகட்டுத் தனமானதுமான இந்த நடவடிக்கை மூலம் யாழ்ப்பாண மக்களைக் கவரமுடியவில்லை. பார்க் வீதியில் இருக்கும் போதும் தனது பழைய பகட்டுத்தனத்தை இவர் விடவில்லை. சில வேளைகளில் இவரை இரண்டு 'பிசுடல்களை' கட்டிக்கொண்டு நிற்கும் நிலையில் அங்கு காணமுடியும். இப்பொழுது டக்ளசின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் மூலம் பெருந்தொகையான பணத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ் திரட்டியதாக அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வதந்தி நிலவியது. அவரின் இளையசகோதரனும் யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முக்கிய உறுப்பினராக இருந்துள்ளார். தேவானந்தாவின் உள்நோக்கங்கள் மீது ஐயுறவு கொண்டு அச்சமுற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் லின் தலைமைப்பீடம் கிழக்கு மற்றும் வன்னிப்பிராந்தியங்களில் இவர் அக்கறை செலுத்தாது குடாநாட்டில் மாத்திரம் அக்கறை செலுத்துவதாகக் குற்றம் சாட்டி படையத் தளபதியாசவிருந்த இவரை இந்தியாவுக்குத் திருப்பி அழைத்து. (கிழக்கில் ஆரம்ப காலத்தில் கடமைபுரிந்த சிலரைத்தவிர ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் தலைவர்கள் யாவரும் நகரத்திலுள்ள சுகவாழ்வையே விரும்பியவர்களாகவும், விரும்புகிறவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது உண்மயாகும்.) பெருந்தொகையான பணத்தைத் தன்வசம் வைத்திருந்ததனால் பாக்கு நீரிணையைக் கடப்பதற்கு டக்ளசு தனது சொந்த ஒழுங்குகளையே மேற்கொண்டிருந்தார். ஆனால் இந்தியாவுக்குச் சென்று கொண்டிருக்கும் போது இவர் பயணம் செய்த படகு கரைக்கு அண்மையாக மூழ்கிவிட்டதால் கடலைப் பற்றி எதுவும் அறியாத

இவரை அந்தப் படகைச் செலுத்திச் சென்றவரே காப்பாற்ற வேண்டியிருந்தது. ஆனால் இவர் எடுத்துச் சென்ற தங்கம் யாவும் படகுடன் அமிழ்ந்துவிட்டது.

இதன் பின் சென்னையில் இருக்கும் பத்மநாபாவுக்கும் இவருக்கும் இடையே பலப்பரீட்சை இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாதென்ற நிலை ஏற்பட்ட பொழுதே சூளைமேட்டு நிகழ்ச்சி நடந்தது. சூளை மேட்டுப்பணிமனைக்குப் பொறுப்பாகவிருந்த டக்ளசு அவர்களே பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பணித்தவர் ஆவார். திரு.எம்.ஜி.ஆர் அவர்களின் கட்சியைச் சார்ந்தவரான சுப்பிரமணியம் என்பவரும் தேவானந்தாவின் கையாட்களால் சூளைமேட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த நிகழ்ச்சி எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நெருக்கடியை உருவாக்கியதைத் தொடர்ந்து டக்லசு ஈ.பி.ஆர்.எல்.எவ் இலிருந்து வெளியேற்றப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் முன்னணித் தலைவர்களாக விளங்கிய வரதராஜப் பெருமாள், கேதீஸ்வரன், லோகநாதன் போன்றவர்களை மகிழ்வுறச் செய்யும் வகையில் அமைந்த இவரின் இந்த வெளியேற்றத்திற்குப் பின் தனக்கு நம்பிக்கையான உறுப்பினர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்ட டக்ளசு தேவானந்தா தன்னைச் சார்ந்தவர்களே முறையான ஈ.பி.ஆர்.எல்.எவ் என உரிமைகோரித் தனது சொந்தத் தலைமைப்பீடம் ஒன்றைச் சென்னையில் நிறுவினார்.

இந்தியப் புலனாய்வுத் துறையான றோவிடம் தான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் பெற இவர் டில்லிக்குச் சென்றபொழுது இவர் கருத்தை அவர்கள் அநுதாபப்பட்டுக் கேட்டதைத் தொடர்ந்து தான் தன்னிச்சையாக இயங்கலாமென்ற நம்பிக்கையை இவர் கொண்டார். இருப்பினும் றோவும் ஒரு திட்டத்தை வகுத்திருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் திறம்படச்செயற்படுத்தவேண்டுமென்று கருதியிருந்த றோ புளொட் இயக்கத்திலிருந்து வெளியேறிய பரந்தன் ராஜன் என்பவரையும், டக்ளசு தேவானந்தாவையும் ஒருங்கிணைத்து ஈ.என்.டி.எல்.எவ் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதற்கு டக்ளசைப் பொதுச் செயலாளராக நியமித்தது. ஆனால் இராமநாதபுரக் கரையோரத்தில் ஈ.என்.டி.எல்.எவ் வுக்கு றோவினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் யாவற்றையும் தந்திரமாகப் பொறுப்பேற்ற பரந்தன் ராஜன், டக்ளசையும் அவரின் ஆதரவாளர்களையும் அந்த அமைப்பிலிருந்து வெளியேற்றினார். இந்திய அமைதிகாக்கும் படையினரின் ஆதரவுடன் மற்றைய தீவிரவாதக் குழுக்கள் தங்களை வடக்கிலும், கிழக்கிலும் பலப்படுத்திக் கொண்

டிருந்த வேளையில், உதவி ஆதாரம் எதுவுமில்லாத டக்ளசு சென்னையில் தனித்து விடப்பட்டு அல்லலுற்றார். தீவிரவாத வாழ்க்கையில் இந்தக் காலப்பகுதியே இவர் சந்தித்த மிகவும் கடினமான காலப்பகுதியாகும். இவரும் இவரைப் பின்பற்றியவர்களும் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன், நகரத்தில் இடம்பெற்ற தொடர்ச்சியான ஆள்கடத்தல்களைத் தொடர்ந்து காவல்துறையினரும் இவர்களை எப்போதும் கண்காணித்து வந்தது இவர்களுடைய துன்பத்தை மேலும் அதிகரித்துவந்தது.

இதே வேளையில் டக்ளசை, றோ மீண்டும் தன் நன்மைக்காகப் பயன்படுத்தும் எனக் கவலையுற்ற வரதராஜப் பெருமாள், அவரை எப்படியும் சிறையில் தள்ளிவிட வேண்டும் எனத் தென்னாட்டிலுள்ள தன் நண்பர்களிடம் கேட்டுக்கொண்டார். இந்திய அமைதிகாக்கும் படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான குழுக்கள் யாவும் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து விரட்டப்பட்ட பின்னர் டக்ளசுடன் தொடர்பை வைத்திருந்த றோ, எதிர்காலத்தில் இவர் தங்களுக்குப் பயன்படுவார் எனக்கருதி இவர் கொழும்பு செல்லவேண்டும் என்பதில் அக்கறையாகவிருந்தது, தேவானந்தாவின் நம்பிக்கைக்குரியவரான அவரது உதவியாளரான அசோக் அதன்பின் கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

தன்னைக் கொழும்பில் பலப்படுத்திக் கொண்ட டக்ளசு சென்னையிலுள்ள தன் தொடர்புகளை மீண்டும் புதுப்பித்துக் கொண்டார். தங்களுக்காக வடகிழக்கை மீண்டும் டில்லி கைப்பற்றும் என்ற நப்பாசையுடன் பூலா என்ற தங்ககத்தில் தங்கள் வாழ்க்கையை நடாத்தி வந்த பெரும் எண்ணிக்கையான ஈ.பி. ஆர்.எல்.எவ் உறுப்பினர்களின் நட்பைத் தென்னாட்டில் இயங்கி வந்த இவருடைய சகாக்கள் பெற்றுவந்தனர்.

சென்னையிலுள்ள இலங்கையின் தேசியப் புலனாய்வுத் துறையின் (NIB) பணிமனையில் கடமையாற்றும் மேலாளரான அலெக்சு என்பவருடன் ஈ.பி.டி.பி இணைந்து செயல்படுவதாகத் தமிழ்நாட்டில் பெரும் ஆதரவைப் பெற்ற வார இதழான ''நக்கீரன்'' சென்ற ஆண்டு குற்றம் சுமத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்திடமிருந்து வேதனத்தைப் பெற்று அதன் சார்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான இளைஞர்களைச் சென்னையில் சேர்த்து வந்த ரெலோ இயக்கத்தின் முன்

னாள் தீவிரவாதியான முரளி மாஸ்ரர் என்பவர் ஈ.என்.டி.எல்.எவ் இனரால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இருப்பினும் ஈ.பி.டி.பி அதன் நடவடிக்கைகளைச் சென்னையில் மேற்கொள்வது ஈ.பி.ஆர்.எல்.எவ்.வுக்கு மகிழ்ச்சியைத் தராதபோதிலும் அதன் செயற்பாட்டை றோவும், புலனாய்வுத்துறையும் எதிர்க்கவில்லை. இதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை. திரு. லலித் அவர்களின் கொலை காரணமாக ஈ.பி.டி.பி யின் திட்டங்கள் யாவும் தவிடுபொடியாகிவுள்ளன. கொழும்பில் அவர் நடாத்திவந்த சிறிய இராச்சியத்தை விட்டு விரைவாகவும், அவமானத்துடனும் அவர் வெளியேற வேண்டியிருந்தது. அவருக்கு காப்பு வழங்கி வந்தவர்களும் பிந்தள்ளானார்கள். திரு. நீலன் திருச்செல்வம் போன்றோர் மறைமுகமாகச் செய்வதை வெளிப்படையாகச் செய்ததே இவர் இழைத்த மாபெரும் தவறாகும். மற்றவர்களில் ஒட்டிக்கொண்டு அவர்களின் தயவில் நிரந்தரமான அமைதியின்றி வாழ்வதைவிட மதிப்பான பகைவனாக உயிர்விடுவது மேலானது என்பதை இவர் ஒருபோதும் உணரமாட்டார் என்பது உண்மையாகும்.

---

ஒரு அரசியல்வாதிக்கு சரியான ஞாபகசக்தி என்பது அவன் எதை மறக்க வேண்டும், எதை நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று பாகுபாடு செய்து வைத்திருப்பதுதான்.

— ஜான் மார்லி.

# ஆசியாவின் 'புலிகள்' என்று அழைக்கப்படும் ஆசியாவின் உயர்நிலைக் கைத்தொழில் நாடுகள் எதிர்கொள்ளும் பாரிய இழப்புக்கள்

புகழ்பெற்ற பொருண்மிய முன்னேற்றத்தை அடைந்திருக்கும் தைவானும், தென்கொரியாவும் தங்கள் நாடுகளை ஏற்றுமதிக்கைத்தொழில் நாடுகளாக்கியதன் மூலம், சுற்றாடலில் பாதிப்புக்களை ஏற்படுத்தியதுடன், சமூகத்தையும் பேரழிவுக்குள்ளாக்கியுள்ளன. இவ்வபிவிருத்தி முறை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளமுடியாத அளவுக்குக் காலம் கடந்தாயிருக்கிறது. ''இவ்வபிவிருத்தி முறையைப் பின்பற்றினால் தாங்கள் சுபீட்சமும், உறுதிப்பாடும் அடையலாம் என்ற கூற்றை வளரும் நாடுகள் நன்றாக அலசி ஆராய்ந்தபின் முடிவுகளை எடுத்தலே சிறந்தது'' இவ்வாறு வோல்டன் பெல்லோ (Walden Bello) என்ற பிலிப்பைன்ஸ் நாட்டின் பொருண்மிய நிபுணர் தெரிவிக்கிறார்.

''தாங்கள் உயர்வான பொருண்மிய முன்னேற்றத்தால் ஆசிய-பசுபிக் (Asia-Pacyfic) நிலப்பரப்பு நாடுகள் உள்நாட்டுச் சிக்கலற்ற அமைதி அடைந்த பகுதிகளாக இருக்கின்றன'' என்று ரொம்மிகூ என்ற, சிங்கப்பூரின் வெளிவிவகார நிபுணர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்தக் கூற்றையே பலரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருண்மிய முன்னோடிக் கொள்கைக்கு மேற்கோள்களாகத் திகழும் தைவான், சிங்கப்பூர் கொங்கொங், தென்கொரியா போன்ற நாடுகளை, வளரும் நாடுகள் பின்பற்ற வேண்டுமென்று அடிக்கடி கூறப்பட்டுவருகிறது. பொருண்மிய வளர்ச்சிக் கருத்துக்களில், ஏற்றுமதி நோக்கோடு தொழிற்சாலைகள் அமைப்பது என்ற கொள்கை தற்போது நடைமுறையிலிருந்து வருகிறது.

ஆனால் "ஆசியாவின் புலிகள்" எந்த அடிப்படையில் தங்கள் கொள்கையை அமைத்தார்களோ அந்தக் கொள்கையே அவர்களின் சூழல், சுற்றாடல், விவசாயம் முதலியவற்றினதும், மக்களினதும் உறுதிப்பாட்டுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இப்புதிய கைத்தொழில்மயமாகிய நாடுகள், NIC தங்கள் முழுக்கவனத்தையும் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களின் உற்பத்தியில் செலுத்தியதனால், அவர்களின் ஆண்டுக்கான சராசரி உற்பத்தி வளர்ச்சி விகிதம், கடந்த முப்பது ஆண்டுகளில் 8-10 விதம் அதிகரித்திருந்தாலும் இவ்வதிகரிப்புவிகிதம், சுற்றாடலில் ஏற்படுத்தப்பட்ட பெரும்பாதிப்பின் மூலமே ஏற்பட்டது.

1960ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமான இந்த அதிவிரைவு கைத்தொழில் வளர்ச்சிக்காக, இந்த நாடுகளின் சுற்றாடல் காப்பு விதிகள் நடைமுறைப்படுத்தப்படாததன் மூலம் அல்லது விதிகளே மேற்கொள்ளப்படாததன் மூலம் இந்நாடுகளில் முதலீடு செய்ய இருந்த தடைகள் நீக்கப்பட்டதுடன் மேலும் நடைமுறையிலிருந்த குறைவான ஊதியம் தொழிலாளருக்கு வழங்கப்பட்டமையும் வெளிநாட்டவரை இந்நாடுகளில்முதலீடுசெய்யமிகவும் தூண்டுவதாக அமைந்திருந்தது. சுற்றாடல்அசுத்தமடைவதில் அரசுகள் அக்கறை செலுத்தாததன் மூலம், இந்த ஏற்றுமதிக்கான உற்பத்திகளின் செலவைக் குறைக்கக்கூடியதாக இருந்ததுடன், உலகச்சந்தைகளில் இப்பொருட்களைப் போட்டி போட்டு விற்பனை செய்யக்கூடியதாகவும் இருந்தது. யப்பான் போன்ற நாடுகளில் கடும் சுற்றாடல் விதிகள் நடைமுறையில் இருப்பதால் இங்கு ஏற்பட்டுள்ள சாதகமான நிலைமை, இந்த நாடுகளில் முதலீடு செய்யத்தூண்டுவதாக இருக்கின்றது. ஆசிய நாடுகளில் 'மிகவும் அசுத்தமான நாடு என்று தைவான் கணிப்பிடப்பட்டிருப்பது அந்த நாட்டுக்கு மிகவும் பொருத்தமானதே. தைவானின் ஆறுகளில் தொழிற்சாலைக் கழிவுகளும், மனித கழிவுகளும் கட்டுப்பாடு ஏதுமின்றி ஏராளமாக வந்து சேர்வதனால், இந்நாட்டின் 44 (நாற்பத்து நான்கு) ஆறுகளின் முகத்துவாரங்களில் உயிரினங்களே வசிக்கமுடியாத சூழ்நிலை உருவாகிவருகிறது. தங்கள் நாட்டின் விவசாயநிலப்பரப்பில், சுமார் 20வீதம் நிலங்கள், தொழிற்சாலைகளின் கழிவுநீரால் அசுத்தப்பட்டிருக்கின்றன என்று தைவான் அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதனால், இத்தீவின் மூன்றில் ஒருபகுதி நெல்விளைச்சல், இரசம் (Mercury), ஆசனிக் (Arsonic), கட்மியம், (Cadmium) போன்ற அடர்த்தியான உலோகங்களால் நாட்டின் சுற்றாடல் விதிகளை மீறும் வகையில் அசுத்தப்படுத்தப் பட்டமையால், புற்றுநோய்

இங்கு நிகழும் சாவுகளுக்கு முதற்காரணமாக இருப்பது வியப்புக்குரிய விடயமல்ல.

தைவானுடைய காற்றும் சிறந்ததாக இல்லை. மிகக் கூடுதல் அளவிலான கந்தக ஈரொட்சைட் கலப்பினால் தலைநகரில் வீசுகின்ற காற்றின் தரம் கணிக்கப்பட்ட புள்ளி விபரப்படி மிகவும் தீங்கிழைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஓர் ஆண்டின் 17 வீதம் காலப்பகுதி இவ்வாறு அசுத்தம் அடைவதாக கணிப்பீடு தெரிவிக்கின்றது. 1980 இல் இருந்து 1990 வரையிலான காலப் பகுதியில் தொய்வு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 4 மடங்காக அதிகரித்திருக்கிறது.

தென்கொரியாவிலும் இதே காரணத்தினால் சாவுகள் அடிக்கடி நிகழுகின்றன. உலகத்தில் மக்கள் சுவாசிக்கும் காற்றில், ஆகக்கூடிய அளவு கந்தக ஈரொட்சைட் வாயு காற்றிற் கலந்திருக்கும் இடம், தென்கொரியாவின் தலைநகரமாகும். இது மட்டுமல்ல, அங்கு பெய்யும் மழையில் கலந்துவரும் அமிலத்தன்மை சுகாதாரத்துக்குப் பெரும் கேடாக இருக்கிறது. ஏற்கக்கூடிய அளவுக்கு, அதிக அளவு மேலாகக் குடிநீரிலும் அடர்த்தியான உலோகங்களின் தன்மை சேர்ந்து, அத்தண்ணீரையும் பெருந் தீங்கானதாகச் செய்கின்றது'

இந்நாட்டின் இருபெரிய ஆறுகளான காண் (Han), நாக்டோங் (Nakdong) ஆகிய இடங்களில் காலப்போக்கில் உயிரினங்களே வாழமுடியாத சூழ்நிலை ஏற்படப்போகிறது. தொழிற்சாலைகளினதும், உயிரினங்களினதும் கழிவுகள், அதிகளவாக இவ்வாறுகளை லந்தடையும் காரணத்தினால், கடற்பாசி (Alage) யின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுவதால், அவைகள் மீன்கள் போன்ற நீர்வாழ் உயிரினங்களை உயிர்வாயு இல்லாமல் அவதியுறச் செய்கின்றன. தெய்குபசன் என்னும் நகரக்குடியிருப்பில் வசிக்கும் 100 இலட்சம் மக்களுக்கு இந்த நாக்டொங் ஆறே குடிநீர் வழங்குகிறது. இந்தப்பகுதி, தென்கொரியாவின் இரண்டாவது முக்கிய கைத்தொழிற்பேட்டைமையமாகும். இச்சுற்றாடற் பாதிப்பானது மிகவும் அச்சம் தருவதாகும்.

1991 ஆம் ஆண்டு மக்களின் குடிநீரில் ஒருவிதமான துர்நெடி வீசுவதைக் கண்டு அதுபற்றிக் கண்டறிந்த அரசு டோசன் என்று அழைக்கப்படும் கைத்தொழிற் கூட்டமைப்பிலிருந்து, தொன்கணக்காகப், பினோல் (Phenol) என்னும் இரசாயனக்

கழிவு, இவ்வாற்றில் வந்துசேர்வதே காரணம் என்று அறிவித்தது. இக்கழிவுப்பொருட்கள் பாரிய நோய்களைக் கொண்டுவரக் கூடியதாக இருக்கிறது என்று அந்நாட்டு அரசு கூறியிருக்கிறது. இவ்வுண்மையைக் கண்டறிவதற்கு ஐந்து திங்களுக்கு முன்பிருந்தே இப்பொருட்கள் ஆற்றில் கலக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஏற்று மதியாற் பெரும் இலாபத்தை ஈட்டக்கூடிய உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதாகச் சுற்றாடலுடன், விவசாயமும் பறி கொடுக்கப்பட்டது. இக்கொள்கையை முன்னிட்டுக் குறைந்த விலையிற் தானியங்களைச் சந்தைப்படுத்தும் கொள்கைகளைத் தைவானும், தென்கொரியாவும் கைக்கொண்டன.

விரிவு அடைந்துவரும், நகரத்தின் உற்பத்திப் பகுதிக்குத் தேவையான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு, குறைந்த விலையில் உணவுகொடுப்பதற்கு உயர்ந்துவரும் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விலைக்கு ஏற்ப, விவசாயப் பொருட்களின் விலைகளை ஏற்றாமல், அவைகளின் விலைகளை இந்நாடுகள் குறைத்துவைத்துக் கொண்டன. இது விவசாயிகளுக்கு அதிவிரைவிலேயே கடும்பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் 1965ஆம் ஆண்டில், ஒரு நகரவாசியின் வாழ்க்கை வருமானத்துடன் ஒப்பீட்டளவிற் சமநிலையிலிருந்த ஒரு கிராமவாசி வாழ்க்கை வருமானம், 1970 ஆம் ஆண்டில் ஒரு நகரவாசியின் வாழ்க்கை வருமானத்திலும் பார்க்க, மூன்றில் இரண்டு பங்காகக் குறைந்திருந்தது.

தைவானிலே தானியங்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணம், தொழிலாளர்களுக்கு குறைந்த விலையிலான உணவை வழங்க வேண்டும் என்பதற்கல்லாமல் அவ்வகையின் ஒரு தொழிலாளர் தொகுதியை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் ''தொடக்கத்தில் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களைக் கைத்தொழில்களுக்கு மாற்றுவதற்காக அரசு திட்டமிட்டே கமக்காரர்களின் வருவாயைக் குறைத்தது'' என்று 1988ல் சனாதிபதியாக வந்த முதல்நிலை விவசாய கொள்கை வகுப்பாளரான இலீரெங்குய் ஏற்றுக்கொண்டார்.

இன்று தைவானில், அதன் தொழிலாளர் வர்க்கத்தில் 20%த்தினர், முன்பு விவசாயிகளாக இருந்தவரேயாவர். மேலும், முன்பு விவசாயம் செய்த மக்களின் (12,000,000) 11%த்தினரே, தொடர்ந்து முழுநேர விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். விவசா

யிகளில் பெரும் எண்ணிக்கையினர், பெரும் அளவான வருமானத்தைப் பிறதொழில்கள் மூலம் தேடிக்கொள்கிறார்கள். ஒரு ஆய்வாளர் கூறியது போல, ''விவசாயிகள் விவசாயத்தையே உபதொழிலாக மேற்கொள்கிறார்கள்.''

தானியங்களின் விலையை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதன் கொள்கை 1970ஆம் ஆண்டிலேயே வரையப்பட்டது. ஆனால் ஏற்றுமதிக்கு சார்பாக விவசாயத்தை கைவிடும் முறை தொடர்ந்து இருந்தே வந்தது. என்.ஐ.சி. எனப்படும் பதிதாக கைத்தொழில் வளம் அடையும் நாடுகள் அதிக விளக்கமில்லாத ஒப்பந்தத்தை அமெரிக்காவோடு ஏற்படுத்திக் கொண்டன. அதன் மூலம் மானிய முறையிலான பெரிய அளவு அமெரிக்க மேலதிக விவசாயப் பொருட்களை தாங்கள் உள் வாங்கிக் கொள்வதாகவும் தங்கள் கைத்தொழில் உற்பத்திகளுக்கு அமெரிக்கச் சந்தையில் இடம் அளிப்பதாகவும் இணக்கம் காணப்பட்டது.

இதனால் தைவானிலும், தென்கொரியாவிலும் முக்கிய விவசாயப் பொருட்களை கோதுமை, சோயா அவரை, புகையிலை என்பன முடங்களாயின. முன்னர் இருந்து மறைந்த அரிசிச் சந்தையை மீண்டும் திறக்கவேண்டும் என்ற அழுத்தம் காரணமாக இந்த இரு நாடுகளிலும் அரிசி உற்பத்தி செய்யும் கமக்காரர்கள் இல்லாமல் போகும் வாய்ப்புண்டு.

மிக வேகமான வளர்ச்சி வேறுவழிகளில் சமூகக் காத்திரமின்மையை ஏற்படுத்தியிருக்கின்றது. தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் உறுதியான வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்ற போதிலும் அந்த அளவிற்கு வருவாயில் சமநிலையின்மையும் உருவாகியிருக்கிறது.

உதாரணமாக தென்கொரியாவில் சனத்தொகையின் அடிமட்டத்திலுள்ள 40% மக்களின் வருவாய் 1965 ற்கும் 1985ற்கும் இடையில் 19.3% இல் இருந்து 17.3% ஆக குறைந்துள்ள அதேவேளையில் உயர்மட்டத்திலுள்ள 20% மக்களின் வருவாய் 41.8 இல் இருந்து 43.7 ஆக உயர்ந்திருக்கின்றது.

ஆனால் இத்துரித வளர்ச்சி, தொழிலாளர் விடயத்தில் ஆகக்கூடிய பாதிப்பை ஏற்படுத்த, அரசின் மெத்தனக் கொள்

கையே காரணமாகும். அரசியல் விடயங்களிலோ, பொருண்மிய விடயங்களிலோ அரசு கொள்கை அளவில் முடிவுகள் எடுக்கும்போது, அம்முடிவுகள் தொழிலாளரைப் பாதிக்குமோ என்பதுபற்றி அரசு அக்கறை கொள்ளவில்லை. தங்கள் அதிவிரைவு, வளர்ச்சிக்குத் தொழிலாளரின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு, அரசாங்க மேலாளரோ, தொழிற்சாலைகளின் மேலாளரோ சனநாயக முறைகளைக் கையாளாமல், கட்டாயப்படுத்தும் முறைகளைக் மேற்கொண்டார்கள். இது தவிர்க்கமுடியாததாக இருந்திருக்கலாம். ஏனெனில், உலகச் சந்தைகளிற் போட்டியிட்டுத், தங்கள் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதென்றால், தொழிலாளரின் ஊதியச்செலவைக் குறைப்பதன் மூலமே, உற்பத்திச் செலவைக்குறைக்க முடியும்.

இந்தத் தொழிலாளரைக் கட்டாயப்படுத்தும் முறையே தென்கொரியாவின், மத்திய புலனாய்வுத்துறையின் வளர்ச்சிக்குத், தூண்டுதலாக இருந்து வந்திருக்கின்றது. இத்துறைமூலம் வேலைநடப்பதைக் கண்காணிப்பதன்மூலமும், எதிர்ப்புக்கள் வராமல் முறையிலேயே கிள்ளி எறிவதன்மூலமும், வேலையில் துரிதம் அடையவைக்கப்பட்டது. ஆனாற் தொழிலாளர்களை, இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பெரும் துன்பங்களுக்கு உள்ளாக்கிய, கட்டாயப்படுத்தும் முறைக்கொள்கை, இறுதியில் அதாவது 1987 ஆம் ஆண்டில், தைவானிலும் தென்கொரியாவிலும் அரசியல் பாதிப்பை ஏற்படுத்தியது.

புதிய சனநாயக அரசியல் நடைமுறைக்கு வந்த போது வெளியுலக பொருண்மிய வளர்ச்சி தந்திரோபாயங்களின் கருத்துக்களின் மேல் அல்லாது, கடந்தகால வளர்ச்சியின் மூலமாக ஏற்பட்ட நன்மைகளைப்பற்றிய போராட்டங்களிலேயே அது தன் கருத்தைச் செலுத்தியது 1987ற்கும் 1990க்கும் இடையில் தென்கொரியத் தொழிலாளர்கள் 7000 வேலைநிறுத்தங்களை மேற்கொண்டார்கள். இதனால் தூண்டப்பட்ட லண்டனிலிருந்து வெளியாகும் பைனான்சியல் ரைம்ஸ் என்ற நாளிதழ் "அந்த நாட்டின் புதிய சனநாயக அரசியல் சம்பளவெட்டு, தொழிலாளரிடையே அமைதியின்மை தொழிலாளர் நலன்களுக்கான செலவுக்கோரிக்கைகள் என்பன பொருண்மியத்திற்குரிய வளர்ச்சிக்கு குந்தகமாக அமைவதாக" எழுதியது.

மக்களின் நன்மையை முன்னிட்டும், சுற்றாடலைப் பேண எடுக்கப்படும் செலவினங்களால் மட்டுமல்ல, தற்போது சகல

நாடுகளும் தங்கள் பணப்பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளும், ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுகளும் இந்நாடுகளின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கையிலேயே பிழைகள் ஏற்பட்டிருப்பதாலும் இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொருண்மிய வளர்ச்சிமுறை 1987 ஆம் ஆண்டிலிருந்தே ஆட்டம் காணத் தொடங்கியது. அதே ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு திறைசேரி மேலாளர், இப்புதிய கைத்தொழில் நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் வர்த்தக சலுகைகளைக் கண்டித்துத்தாக்கி, அவைகளைத் நீக்கும்படி போர்க்கொடி தூக்கினார். ''இப்புதிய கைத்தொழில் நாடுகள் புலிகளாகவே கருதப்படலாம். இந்நாடுகள் உண்மையில் உறுதியான கடும்திறன் கொண்ட வர்த்தகராவார். ஆனால் அனைத்துக் காட்டுயிரினங்கள் போலவே, கானகவிதிப்படி அவர்கள் காலத்தால் அழிவடையவே செய்வர் ''என அவர் தம் கருத்தை இந்நாடுகள் குறித்து வெளியிட்டார்.

இதன் விளைவாக ஐக்கிய அமெரிக்கா இந்நாடுகளுக்கு எதிராக எடுத்த வர்த்தக நடவடிக்கைகள் அவர்களைப் பொறுத்தவரையில் நல்லபலன் அளித்திருக்கின்றன. தென்கொரியாவின் வர்த்தகமீதி 9.5 மில்லியன் அமெரிக்க டொலராக 1987 ஆம் ஆண்டில் சாதகமாக இருந்து. பின் 1991 ஆம் ஆண்டில் 336 மில்லியன் அமெரிக்க டொலர் பாதகமானதாக இறங்கக் காணப்பட்டது.

இதனால் பாதிக்கப்பட்ட இந்நாடுகள், அமெரிக்காவிற் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த, கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேர்ந்ததால், பிற சந்தைகளை நாடிச்செல்ல வேண்டியதாயிற்று. ஆனால் அந்த வழிகளிலும் காலகட்டத்தில், அவர்களுக்கு ஏமாற்றம்தான் காத்திருக்கின்றது. ஏனெனில் இப்போதைய சந்தைப்படுத்தும் முறையில் உலகச்சந்தையும், பல சந்தைக்கூட்டமைப்புகளாகப் பிரிந்து சென்று சந்தைப்படுத்துவது என்பது ஒந ஒத்துழைப்பு முறையாக மாறிவிட்டது.

இறுதியில் தற்பொழுது தைவானும், தென்கொரியாவும் அமெரிக்காவுடனான தங்கள் சாதகமான வர்த்தகநயம் குறுகிக்கொண்டுவரு

வதைக் காணுகின்றனர். யப்பானுடன் அவர்களுக்குத் தனித்தனியாக 8 மில்லியன் அமெரிக்க டொலர். பாதகமான வர்த்தகமீதியும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதகமான வர்த்தகமீதி ஏற்படுவதற்குக் காரணம், அவர்களுடையஇப்பொருண்மியக்கொள்கையாகும்.அவர்களுடையவிரைவான வளர்ச்சிக்கு மூலகமானதேவைப்பொருட்கள், தொழில் நுட்பங்கள் அனைத்தும் யப்பானிடமிருந்து பெற்றவையாகும். அதே நேரத்தில் யப்பானிடமே தங்கள் உற்பத்திப் பொருட்களைச்சந்தைப்படுத்த முன்வந்தால், பாதக மான வர்த்தக மீதி ஏன் ஏற்படாது. 25 ஆண்டுகளாக இக்கைத்தொழில் விரைவு வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தும், இன்றுவரையும் இவ்விரு நாடுகளும், யப்பானிலிருந்து கொண்டுவரப்படும் உதிரிப்பாகங்களை பொருளாக்கும் நாடுகளாகவே விளங்குகின்றன, தாங்களே உதிரிப்பாகங்களைத் தயாரித்து பொருட்களை உற்பத்தி செய்யும் அளவுக்குஅவர்கள் இதுவரைக்கும் முன்னேறவில்லை.உண்மையைக் கூறின்முன்பு இருந்ததைவிட தற்போது தைவானும், தென்கொரியாவும் தங்கள் தொழில்நுட்ப உதிரிப்பாகங்களுக்கோ அல்லது தொழில் நுட்பத்திற்கோ யப்பானையே இன்னும் அதிக அளவில் நம்பிவருகின்றன.

தைவான் பெருமையாகக் கூறிவரும், அதன் கம்பியூட்டர்க் கைத்தொழில் மையம், உண்மையாக ஒரு குறைந்த தொழிநுட்பமுடையதும், தொழிலாளர் கூடுதலாகப் பணியாற்றுவதும். இலகுவில் பார்த்துப் பின்பற்றக்கூடியதுமான ஐ. பி. எம் (IBM) கம்பியூட்டர்களாகும். தென்கொரியாவைப் பொறுத்தவரை, அவர்களுடைய தொலைக்காட்சிப்பெட்டிகள், யப்பானின் தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் போட்டி போடக்கூடியதாக இருந்தாலும்ஒருதொலைக்காட்சிப்பெட்டியின் 85% உறுப்புக்கள் யப்பானுடையதேயாகும். தனிமனித பாவனைக்குரிய கம்பியூட்டர்களைஏற்றுமதி செய்யும் நாடுகளில், தென்கொரியா ஐந்தாம் இடத்தைப் பெற்றிருந்தாலும் அந்தக்கம்பியூட்டரின், உறையைத்தவிர, மற்றைய பாகங்கள் யப்பானுடையவையே.

தொழில்நுட்பப் பொருட்களைத்தயாரிப்பதற்கு, அவைக்குத்தேவையான தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் அடையாமல், சாதாரண பொருட்கள் அமைக்கும் தொழிற்சாலைகளை நம்பியிருந்தமையால், இப்புதிய கைத்தொழில்மைய நாடுகள், தற்பொழுது பெரும் பொருண்மிய நெருக்கடியைச் சந்திக்க

94679

வேண்டி ஏற்படுகின்றது. தைவானிலும் தென்கொரியாவிலும் தொழிலாளர்களால் ஏற்படும் செலவு அதிகரித்துவருவதால், அங்கு ஆரம்பத்தில் முதலீடு செய்தவர்கள், தற்போது சீனா, வியட்நாம் போன்ற மற்றத்தென்கிழக்காசிய நாடுகளுக்குத் தங்கள் முதலீட்டைக்கொண்டு செல்கிறார்கள். அங்கு தொழிலாளர்களுக்குரிய செலவு புதிய கைத்தொழில் மயமாகிய நாடுகளிலும் பார்க்க ஐந்தில் ஓர் பங்கு அல்லது பத்தில் ஓர் பங்காகவே இருக்கிறது.

ஏற்கெனவே தைவானின் காலணித் தொழிற்சாலைகள் சீனாவின் புஜியன் (Fujion) மாகாணத்துக்குச்சென்று விட்டன. மேலும் தென்கொரியாவின் காலணித்தயாரிப்பாளர்கள், தங்கள் தொழிற்சாலைகளைப் பூசானிலிருந்து (Pusan) தென்னாசிய நாடுகளுக்குக் கொண்டுசென்றுவிட்டார்கள்.

நடைபெறும் பத்தாண்டு முடிவதற்கு முன்னமே, இப்புதிய கைத்தொழில் மய நாடுகள், தங்கள் புதிய கைத்தொழில் அமைப்புக்களையே இழந்து, அங்கு வேலை செய்யும் நபர்களின் வேலையில்லாத்திண்டாட்டத்தையே சமாளிக்கவேண்டியநிலை ஏற்படும்.

இப்புதிய கைத்தொழில் மயமாகிய நாடுகளின் மக்கள் இத்திட்டங்களின் நற்பலன்களை முன்னிட்டு விவாதிக்கத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் இழப்புகளுக்கேற்பத் தாங்கள் நன்மைகள் அடைந்துவிட்டார்களா என்று அவர்கள் சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இவ்வுண்மைகளை மனதிற்கொண்டே வளரும் நாடுகள் இவ்வகையான பொருண்மிய வளர்ச்சியை பின்பற்ற முன்வர வேண்டும்.

**Walden Bello is Executive Director ofthe San Francisco based Institute for Food and Development Policy (Food First) He is co-authorofDragons inDistress: Asia's MiracleEconomics inCrisis (Penguin1991) and author of People and power in the Pacifio (Pluto, 1992)**

★

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

265SC

94679

PUBLIC LIBRARY
JAFFNA.

# சமநீதியை நிலைநாட்டுவோம்

செஞ்சோலையில் நாங்கள் பண்பாடுவோம்
ஒன்றாகத்தான் கூடி கொண்டாடுவோம்

இன்று நாங்கள் குழந்தைகள்
நாளை நாட்டின் அறிஞர்கள்
உலகம் எம்மை போற்றவே
நாங்கள் என்றும் வாழுவோம்.

அடிமை நிலையை மாற்றவே
புரட்சி செய்து வாழுவோம்
உலகில் சமநீதியை -- நாங்கள்
நிலைநாட்டுவோம்.

பின்னஞ் சிறுவர் நாங்கள்தான்
சிந்தித்து செயல் ஆற்றுவோம்
நாட்டின் நல்வளர்ச்சிக்காய்
நல்வழியில் நாங்கள் செல்லுவோம்.

--மைதிலி

320